# முன்னேற்ற அறிக்கை

# 2024

## கடற்றொழில், நீரியல் மற்றும்
## கடல் வளங்கள் அமைச்சு

மாளிகாவத்த, கொழும்பு - 10

## உள்ளடக்கம்

பக்க இல.


| | | |
|---|---|---|
| 01 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 03 - 27 |
| 02 | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் | 28 - 67 |
| 03 | தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை | 68 - 73 |
| 04 | தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 74 - 103 |
| 05 | இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 104 - 114 |
| 06 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 115 - 120 |
| 07 | வ/ப. சீ – நோர் நிறுவனம் | 121 - 123 |
| 08. | நோர்த் சீ லிமிட்டட் | 124 - 130 |
| 09 | பேலியாகொட மத்திய மீன் சந்தை தொகுதி | 131 - 132 |

# 01 கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

## நோக்கம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களைப் பாதுகாத்தல் அதன் நிலைபேறான பயன்பாட்டுக்கு தெற்காசிய பிராந்தியத்தில் முதன்மை நாடாக ஆக்குதல்.

## நடவடிக்கை

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக மீன் வளங்கள் மற்றும் நீரியல் வளங்களின் பயன்பாட்டை உறுதியாக முகாமைத்துவம் செய்தல்.

## கொள்கை நோக்கு

- விஞ்ஞான அடிப்படையாகக் **(science based)** கொண்ட தகவல்களைப் பயன்படுத்தி வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்தல்.
- கடற்றொழில் கைத்தொழில் பிராந்திய மற்றும் சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்கியிருத்தல்.
- கடல் சார்ந்த மீன் உற்பத்தியை அதிகரித்தல்.
- நீர்வாழின வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரித்தல்.
- அறுவடையின் பின்னரான பாதிப்பைக் குறைத்தல் மற்றும் பெறுமதியை அதிகரித்தல்.
- தனிநபர் மீன் நுகர்வை மேம்படுத்தல்.
- ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.
- பொழுதுபோக்கு நடவடிக்கைகள், தொழில், வணிக அபிவிருத்திக்கு உள்ள வாய்ப்புகளை அதிகரித்தல்.
- மீனவ மக்களின் சமூகப் பொருளாதார செயற்பாட்டை மேம்படுத்தல்.

## பிரதான பொறுப்புகள்

- கடல், உவர்நீர் மற்றும் உள்ளக மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- கொள்கை மற்றும் வேலைத் திட்டங்களை முறையாகத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.
- தேசிய நீரியல் வளங்களின் அபிவிருத்தி மற்றும் நிலைபேறாகப் பயன்படுத்தல்.
- உற்பத்திகளை சர்வதேச தரத்துக்கு மேம்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- நுகர்வோர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை சாதாரண விலைக்கு வழங்குதல்.
- மீன் உற்பத்திகளின் ஏற்றுமதியை இலகுவாக்கல்.

## கடற்றொழில் பிரிவுக்கு பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களும் நோக்கமும்

| | |
|---|---|
| **கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்** (DFAR) | **எதிர்பார்க்கும் நோக்கம்** - இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் முகாமைத்துவம், அபிவிருத்தி மற்றும் பேணல் <br> **பொறுப்புகள்**- பிராந்திய, சர்வதேச பிரமாணம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக 1996இன் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டங்களை அறிமுகம் செய்தல், கடற்றொழில் முகாமைத்துவ நடவடிக்கை மற்றும் நியதி நிபந்தனைகளை முறையாக மேற்கொள்ளல். |
| **தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை** (NARA) | **எதிர்பார்க்கும் நோக்கம்** - நீரியல் வளங்கள் சம்பந்தமான ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் வளங்கள் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம். <br> **பொறுப்புகள் -** 1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் சமுத்திர உயிரின வளங்கள், நன்னீர் நீரியல் வளங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை, கடற்றொழில் தொழில்நுட்பம், பின் அறுவடையின் வீண் விரய தொழில் நுட்பம், சுற்றாடல் ஆய்வு, சமுத்திர உயிரின விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் |
| **தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை** (NAQDA) | **எதிர்பார்க்கும் நோக்கம்** - செய்கை அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு <br> **பொறுப்புகள் -** 1998இன் 53ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்குத் தேவையான குடம்பிகள் வழங்கல், இறால் செய்கை நடவடிக்கையை கண்காணிப்பதற்கு நிலையங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்கான பயிற்சிகளை வழங்கல். |
| **இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்** (CFHC) | **எதிர்பார்க்கும் நோக்கம்**- மீன்பிடித் துறைமுகம் மற்றும் நங்கூரமிடும்தளம் திட்டமிடல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல். <br> **பொறுப்புகள்** - 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 20 கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் 58 நங்கூரமிடும் தளங்களை பேணி வருகிறது. |
| **இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் CFC)** | **எதிர்பார்க்கும் நோக்கம்**- மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும்தளங்கள் திட்டமிடல் மற்றும் பராமரித்தல் <br> **பொறுப்புகள்**- 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 20 கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் 58 நங்கூரமிடும் தளங்களை பேணி வருகிறது. |
| **சீ-நோர் நிறுவனம்** (Cey-Nor) | **எதிர்பார்க்கும் நோக்கம் -**கடற்றொழில் மற்றும் அது சார்ந்த தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கல். <br> **பொறுப்புகள்** - 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் பயிபர் க்ளாஸ் படகுகள் உற்பத்தி மற்றும் விற்பனை மீன்பிடி வலைகள் உற்பத்தி மற்றும் விற்பனை அத்துடன் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வருகிறது. |
| **நோர்த் சீ லிமிடட்ட** | **எதிர்பார்க்கும் நோக்கம்** - கடற்றொழில் கைத்தொழிலுக்குத் தேவையான உயர்தரமிக்க மீன் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல். <br> **பொறுப்புகள்**- 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க புதிய கம்பனி சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வலை உற்பத்தி செய்யும் கம்பனியாகும். |
| **பேலியாகொட மத்திய மீன் சந்தைத் தொகுதி** | 10/0958/438/001ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் முகாமைத்துவ பொறுப்புக் குழ நிறுவப்பட்டது. <br> **பொறுப்புகள்**- மீன் சந்தை தொகுதியின் செற்பாட்டு நடவடிக்கை தொடர்பான கொள்கை தயாரித்தல் |

# தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு கடற்றொழில் பிரிவில் பொருளாதார பங்களிப்பு

## 2024ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் பிரிவின் அனைத்து முன்னேற்றம்

இலங்கையில் மீன்பிடி தொழிலின் அடிப்படையில் மீன் வளங்களில் 517,500 சதுர கிலோ மீற்றர் அந்நிய பொருளாதார வலயமாகும். 21,500 கிலோ மீற்றர் தேசிய நீர்ப் பரப்பாகவும், 1,580 கிலோ மீற்றர் கடனீரேரி மற்றும் ஆற்றுவாயும், 2,600 கிலோ மீற்றர் மனிதர்களால் ஆக்கப்பட்ட நீரப்பரப்பும் அடங்கும். போக்கு, கடனீரேரி நீரேரிகள் மற்றும் கரையோர நீர்நிலைகள் சார்ந்த நிலங்களும் மீன் வளர்ப்புத் தேவைப்படுகின்ற ஆதர தளத்தை உருவாக்குகின்றது.

கடற்றொழில் அமைச்சின் புள்ளி விபரங்களுக்கு அமைய இந்நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை 318,470ஆக இருப்பதுடன் இதில் 223,720 பேர் உவர்நீர் மீன்பிடிப் பிரிவில் தொழிலில் ஈடுபடுவதுடன் இது 85% வரை கரையோர மீனவர்களாக இருப்பதுடன் 34,550 பன்னாட் மீன்பிடிப் படகின் மூலம் கரைக்கு அப்பால் மற்றும் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்நாட்டு மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை 273,240 ஆகும். நேரடி மீன்பிடித் தொழிலில் சார்ந்திருப்பவர்கள் சுமார் 1,123,000 வரையாகும். மேலும் இத்தொழிலுடன் தொடர்புடைய மறைமுகமான தொழிலில் ஈடுபடும் மற்றும் இது சார்ந்த பிற சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 2.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையில் மொத்த சனத் தொகையில் சுமார் 18% வீதமானோர் மீன்பிடித் தொழிலில் இருந்து தமது வாழ்வாதரத்தை மேற்கொள்கின்றனர் .

2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் உவர்நீர் மீன்பிடித் தொழிலின் மூலம் 279,260 மெற்றிக் தொன் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் ஊடாக 96,415 மெ. தொன் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய இக்காலப் பகுதியில் அனைத்து மீன் உற்பத்தி 375,675 மெற்றிக் தொன்னாகும்.

பொதுமக்களின் மீன் புரோட்டின் முக்கிய காரணமாகக் கருதலாம். 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்குள் தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 36,85 கிராமாகும். இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 7.4% ஆகும். தற்போது இந்நாட்டு நுகர்வுக்குத் தேவையான மொத்த மீன் தேவையில் 72% மானவை உள்ளூர் மீன் உற்பத்தியிலிருந்து கிடைக்கிறது.

2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை மீன் ஏற்றுமதி பெறுமானம் ரூபா 78,969 மில்லியன் ஆகும். (260.2 அமெ. டொ.) தேசிய ஏற்றுமதி வருமானத்தில் மீன்பிடித் துறையின் பங்களிப்பு 2.3% மாகும். ஏற்றுமதி தரவுக்கு அமைய, இலங்கையின் மீன் உற்பத்தியின் ஊடாக 29.3% ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இதில் 13,6% ஐரோப்பி நாடுகளுக்கும், மீதி 42.9% ஐரோப்பிய சமூகம் அல்லாத நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கு மேலதிகமாக இக் காலப்பகுதியில் அலங்கார மீன் ஏற்றுமதியின் மூலம் ரூபா 6,812.8 மில்லியன் வருமானமாகப் பெற்றுக் கொள்வதற்கான திறனைக் கொண்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கு 151 செலவுத் தலைப்பின் கீழ் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சுக்கு ரூபா 7,173.41 மில்லியன் நிதி ஏற்பாடும், ரூபா 1,981.99 மில். மீண்டுவரும் ஒக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன் நிதி முன்னேற்றம் முறையே ரூபா 6,057.44 (84%) மற்றும் ரூபா. 1,828.20 (92.24% மில்லியனாகும். 2024ஆம் ஆண்டுக்கு 290 செலவுத் தலைப்பின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு ரூபா 102.08 நிதி ஏற்பாடு மற்றும் ரூபா 1,657.99 மில்லியனும் மீண்டுவரும் ஒக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிதி முன்னேற்றம் முறையே ரூபா 36,42 (36%) மற்றும் ரூபா. 875.38 (53% மில்லியனாகும்

மீனவ மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்தல் மற்றும் மீன் அறுவடையின் பின்னராக ஏற்படும் இழப்பைக் குறைப்பதன் மூலம் சிறந்த தரமான குணப் பண்புகளைக் கொண்ட மீன் உற்பத்திகளை நாடுகளுக்கு கொண்டு செல்வதை நோக்காகக் கொண்டு கடற்றொழில் துறைமுகங்களின் அபிவிருத்தி 2024ஆம் ஆண்டில் செயற்படுத்தும் முதன்மை வேலைத் திட்டமாகும். இதன் மூலம் கந்தர கடற்றொழில் துறைமுகத்தின் வளாகம் சார்ந்த எதிர்கால வேலைத் திட்டத்தை நிறைவு செய்வதும், மைலிட்டி கடற்றொழில் துறைமுகத்தின் இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2024 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் படகுத் துறைகள் மற்றும் நங்கூரமிடும் தளங்களின் அபிவிருத்திக்குத் தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை தொர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஹிக்கடுவை, அம்பலாங்கொட, வாழைச்சேனை மற்றும் தொடந்துவ கடற்றொழில் துறைமுகங்களின் அபிவிருத்திக்கான அடிப்படை சுற்றுச் சூழல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு தற்போது நிறைவு பெற்றுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) கருதியில் ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட நீல/ பசுமை விருத்தி" (Blue Growth) எனும் எண்ணக் கருவின் மூலம் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு மற்றும் உணவு பாதுகாப்புக்கு மீன்களின் குடித் தொகையை அதிகரிப்பதை உறுதி செய்வதற்கு கரையோர பிரதேசங்களில் மீன்களை ஒன்று திரட்டும் பொறி (FAD) நிறுவுவதன் மூலம் உணவுக்குப் பயன்படுத்தக்கூடிய இந்த மீன்களை ஒன்று திரட்டும் இந்தப் பொறி சார்ந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் மீன் திரட்சியன் காரணமாக தற்போது பிரதேச மக்கள் இந்த வேலைத் திட்டம் பற்றி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றர். மேலும் மீன் திரட்சியன் காரணமாக தற்போது பிரதேச மக்கள் இந்த வேலைத் திட்டம் பற்றி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 1,804.00 மில்லியன் சீன குடியரசின் உதவின் கீழ் 1,630 மெற்றிக் தொன் அரசி, முன் தயாரிக்கப்பட்ட 500 வீடுகள் மற்றும் 75,000 வலைத் தொகுதிகளும் 2024ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

நிலைபேறான கலாச்சார அடிப்படையாக் கொண்டு நன்னீர் மீன்பிடித் தொழிலை அபிவிருதி செய்தல் மற்றும் கிராமிய மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து ஜப்பான் அரசு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக (FAO) 3 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி வழங்கியுள்ளது. அத்துடன் காலநிலை மற்றும் வானிலை மாற்றத்தின் மூலம் மீன்பிடித் துறைக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கு குயுழு அமைப்பு மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) மூலம் வழங்கப்பட்ட உதவியின் கீழ் சில செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முறையான அறிவியல் முறைகள் மற்றும் நடைமுறைகள் உத்திகள் ஆகிவற்றின் ஊடாக சூழலுக்கு இணக்கமான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொண்டு, அதன் ஊடாக மீன் உற்பத்தியை இலகுவாக பெறுதல் மற்றும் நுகர்வோர்களுக்கு சாதாரண விலைக்கு கிடைகக்கூடிய நிலையை உருவாக்கல், தொழிலில் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் புதிய அரசாங்கத்தின் "வளமான நாடு அழகான வாழ்க்கை" எனும் கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவம் - தரமான மீன் வளம் ஒரு முக்கிய கொள்கையாகவும் அதற்கேற்ப வேலைத்திட்டங்கள்/ செயற்றிட்ட மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு 2025ஆம் ஆண்டுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அனைத்து மீன் உற்பத்திகளின் பங்களிப்பு

## 1.1. வருடாந்த மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்

2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் நாடு முழுவதிலுமுள்ள மீன் உற்பத்தி 375,675 மெற்றிக் தொன்னாகும். இதற்கு கரையோர கடற்றொழில் துறை அதிக பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் முன்னேற்றம் 40,1%மாகும். இது முறையே 34.2% மும், ஆழ் கடல் மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கையில் 25.7% மும் நீர்வாழின வளர்ப்பின் மூலம் பங்களிப்பாக கிடைத்துள்ளது.

## 1.2 உவர்நீர் மீன் உற்பத்தி (கரையோர, கரைக்கப்பால்/ ஆழ்கடல்)

அனைத்து மீன் உற்பத்திக்கு கரையோர மற்றும் ஆழ்கடலின் பங்களிப்பு முறையே அதிகரிப்பதற்கான இயலுமை கிடைத்துள்ளது. 2024ஆம் ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் ஆழ்கடல் கடற்றொழில் கைத்தொழிலின் ஊடாக 128,600மெ. தொன் மீன்களும் கரையோர கடற்றொழிலின் ஊடாக 150,660 மெ. தொன் மீன்களையும் அறுவடையாகப் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன் அனைத்து உவர்நீர் மீன்களின் அறுவடை 279,260 மெற். தொன்னாகவும் உள்ளது.

## 1.3 நன்னீர் மற்றும் நீர்வாழின உற்பத்தி

2024 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் அனைத்து நன்னீர் மற்றும் நீர்வாழின மீன் உற்பத்தி 96,415 மெற்றிக் தொன்னாகும். அத்துடன் அனைத்து மீன் உற்பத்திக்கு இதன் பங்களிப்பு 25.7% ஆகும்.

2024 திசம்பர் 31 வரையான காலப் பகுதியில் அனைத்து மீன் குஞ்சுகளின் உற்பத்தி 74,03 மில்லியனாக இருப்பதுடன் இதில் 27.50 மில்லியன் தேசிய நீர்வாழ் உயிரின இனப்பருக்க நிலையத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்படுவதுடன், மீதி சமூக அடிப்படையிலான மீன் குஞ்சு உற்பத்தி அலகு, தனியார் குளங்கள், நீர்நிலைக்குள், வலைக் கூடுகள் மற்றும் கொட்டு ஆகியவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

2024 திசம்பர் 31 வரையான காலப் பகுதியில் நன்னீர் இறால் குடம்பிகள் உற்பத்தி 34.71 மில்லியனாகும். இதில் 25.06 மில்லியன் நீர்வாழ் உயிரினச் செய்கை நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மீதி தனியார் தரப்பினரின் பங்களிப்பாகவும் கிடைத்துள்ளது.

இவ்வாறு அனைத்து தனியார் தரப்பினரால் 426 மில்லியன் உவர்நீர் இறால் குடம்பிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டில் தேசிய மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான இடத்தை விரிவுபடுத்தி மக்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தல், தொழில் வாய்ப்பு, ஏற்றுமதி அதிகரிப்பு மற்றும் கிராமிய பொருளாதார நிலையை வலுப்படுத்த உச்ச பங்களிப்பைப் பெறும் நோக்குடன் தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் பாரம்பரியமற்ற மீன் செய்கை திட்டங்கள் பல பல்வேறு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

| *அட்டவணை 1.1 - மீன் உற்பத்தி சம்பந்தமான தரவு* | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ***மீன் உற்பத்தி மெ.தொ.*** | | | | | | | | |
| கடற்றொழில் உபபிரிவு | | **2020** | **2021** | **2022** | **2023** | **2024** (ஜன-நவம்) | மாற்றம் **2024-2023** (%) | சத வீதம் (%) |
| 1 | ஆழ்கடல் | 144,370 | 153,415 | 131,170 | 128,950 | 128,600 | 9.20 | 34.2 |
| 2 | கரையோர | 182,560 | 178,260 | 149,440 | 164,995 | 150,660 | 0.26 | 40.1 |
| | **மொத்தம்** | **326,930** | **331,675** | **280,610** | **293,945** | **279,260** | **4.19** | **74.3** |
| 3 | நன்னீர் | 84,310 | 80,720 | 94,860 | 93,440 | 82,195 | (2.73) | 21.9 |
| 4 | உயிரின வளர்ப்பு | 10,140 | 9,105 | 7,680 | 8,085 | 7,470 | (3.24) | 2.0 |
| 5 | இறால் | 7,360 | 14,410 | 14,080 | 11,600 | 6,750 | (35.28) | 1.8 |
| | மொத்தம் | **101,810** | **104,235** | **116,620** | **113,125** | **96,415** | **(6.07)** | **25.7** |
| | **அனைத்து உற்பத்தி** | **428,740** | **435,910** | **397,230** | **407,070** | **375,675** | **1.35** | **100.0** |

*(ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு)*

| *அட்டவணை 1.2. 2024இல் மீன் உற்பத்தி சம்பந்தமான தரவு* | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **பிரிவு ரீதியான மீன் உற்பத்தி (மெ.தொ.)** | | | | | | | | |
| | **உவர்நீர் மீன் உற்பத்தி** | | | **நன்னீர் மீன் உற்பத்தி** | | | | **மாத்த உற்பத்தி** |
| | **கரைக்கு அப்பால்** | **கரையோர மற்றும் கடனீரேரி** | | **நன்னீர்** | **நீர்வாழ உயிரின** | **இறால்** | **மொத்த நன்னீர்** | |
| **2024** | | | | | | | | |
| ஜனவரி | 10,140 | 15,270 | 25,410 | 12,750 | 280 | 680 | 13,710 | 39,120 |
| பெப்ர | 11,010 | 16,380 | 27,390 | 6,550 | 230 | 480 | 7,260 | 34,650 |
| மார்ச் | 12,570 | 14,290 | 26,860 | 6,890 | 400 | 560 | 7,850 | 34,710 |
| ஏப்ரல் | 11,410 | 13,430 | 24,840 | 7,080 | 355 | 640 | 8,075 | 32,915 |
| மே | 11,100 | 10,380 | 21,480 | 7,015 | 500 | 515 | 8,030 | 29,510 |
| ஜூன் | 12,050 | 12,880 | 24,930 | 6,935 | 715 | 780 | 8,430 | 33,360 |
| ஜூலை | 12,010 | 13,410 | 25,420 | 7,635 | 1,380 | 725 | 9,740 | 35,160 |
| ஓகஸ்து | 12,560 | 13,670 | 26,230 | 8,135 | 1,135 | 905 | 10,175 | 36,405 |
| செப். | 10,650 | 13,680 | 24,330 | 7,385 | 1,565 | 450 | 9,400 | 33,730 |
| ஒக்தோபர் | 12,060 | 14,990 | 27,050 | 5,710 | 570 | 550 | 6,830 | 33,880 |
| நவம்பர் | 13,040 | 12,280 | 25,320 | 6,110 | 340 | 465 | 6,915 | 32,235 |

*(ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு)*

## 1.4 தனி நபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்தல்.

மீன் நுகர்வை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் போசாக்குக் குறைபாடுகள் ஊட்டச்சத்து இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்க வழி வகுக்கும்

2024 ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 36.85 கிராம் வரை அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த தனிநபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்வதற்கு தேசிய உவர்நீர் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் மீன் உற்பத்தியின் பங்களிப்பாகும்.

## 1.5 மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்தல்.

நெத்தலி, கருவாடு, மாசி, ரின் மீன் மற்றும் ஏனைய ஆகாரத்துக்குப் பயன்படுத்தும் மீன்கள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவது முக்கியமாக மீன் மற்றும் மீன் உற்பத்திகளாகும். மொத்த இறக்குமதியில் அதிகளவில் பங்களிப்பு வழங்கிவருவது கருவாடு மற்றும் நெத்தலியாகும். இறக்குமதி செய்யப்படும் மீன்களில் பெருமளவு பெறுமதி அதிகரித்து மீள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இதில் மீதமுள்ளவை தேசிய தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. 2024 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதிக்குள் மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்தி 53,192 மெ. தொன் இறக்குமதி செய்யப்பட்டதுடன், இதன் பெறுமதி ரூபா 33,740 மில்லியனாகும்.

*அட்டவணை 1.3- இறக்குமதி செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் பெறுமதி (ரூபா மில்)*

| வகை | 2021 | 2022 | 2023 | 2024 (ஜன-செப்) | வேறுபாடு 2024/ 2022 | வேறுபாடு % 2024/ 2023 | முழு முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| கருவாடு | 4,871 | 3,470.0 | 3,510.8 | 4,906.0 | 49.3 | 52.7 | 14.5 |
| காய்ந்த நெத்தலி | 9,119 | 9,955.5 | 9,010.9 | 13,247.4 | 43.3 | 65.8 | 39.3 |
| மாசி | 1,453 | 925.7 | 925.6 | 1,280.3 | 50.3 | 45.7 | 3.8 |
| ரின் மீன் | 4,891 | 2,671.9 | 6,172.6 | 3,316.5 | 33.6 | -39.5 | 9.8 |
| மீன் உணவு | 3,401 | 2,107.9 | 2,744.2 | 4,621.5 | 126.2 | 75.3 | 13.7 |
| உயிர் மீன் | 253 | 430.0 | 368.6 | 449.3 | 17.4 | 35.6 | 1.3 |
| ஏனைய | 1,091 | 2,103.2 | 4,001.1 | 5,919.0 | 206.0 | 67.6 | 17.5 |
| **மொத்தம்** | **25,080** | **21,664.2** | **26,733.7** | **33,740.1** | **66.8** | **40.2** | **100.0** |

*(ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு)*

## 1.6 மீன் ஏற்றுமதி.

ஏற்றுமதி துறையில் மீன் உணவு, அலங்கார மீன் மற்றும் கடல் தாவரம் போன்றவை ஏற்றுமதி செய்வதன் ஊடாக தேசிய பொருளதாரத்தை வலுப்படுத்த கடற்றொழில் பிரிவின் முன்னணி பங்களிப்பு வழங்குகின்றது. இந்த விடயங்களை முன்னெடுத்து செல்வதில் இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய, தம் மற்றும் சுகாதார தரம் வாய்ந்த உயர்தர மீன்கள் உற்பத்தி செய்வதற்கு இந்த விடயத்தில் ஈடுபடும் தரப்பினர்களுக்கு முறையான வழிகாட்டுதலையும் உதவிகளையும் வழங்குவதன் மூலம் கடற்றொழில் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*அட்டவணை 1.4- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி தொகை மற்றும் பெறுமதி (ரூபா மில்)*

| மீன் இனம் | மீன் ஏற்றுமதி தொகை (மெ.தொ.) | | ஏற்றுமதி பெறுமானம் (ரூ.மில்) | |
|---|---|---|---|---|
| | **2023** | **2024 (ஜன-நவம்)** | **2023** | **2024 (ஜன-நவம்)** |
| உயிர் மீன் | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று | 8,641 | 6,812.8 |
| இறால் | 4,020 | 3,219.1 | 10,393 | 8,352.3 |
| சிங்கி இறால் | 127 | 65.1 | 1,437 | 638.6 |
| நண்டு | 1,678 | 1,964.2 | 7,878 | 8,248.9 |
| கடலட்டை | 401 | 232.6 | 4,897 | 3,011.7 |
| ஏனைய பாலுாட்டிகள் | 3,115 | 1,974.5 | 6,084 | 3,933.7 |
| சுறா | 100 | 85.2 | 1,314 | 1,074.6 |
| மீன் குடல் | 7 | 7.9 | 238 | 258.8 |
| சிப்பி மற்றும் தோடுடைய மீன் | 269 | 411.4 | 255 | 214.0 |
| தயாரித்த மீன் | 14,380 | 12,210.5 | 56,703 | 45,436.4 |
| ஏனையவைகள் | 407 | 331.7 | 1,277 | 987.3 |
| **மொத்தம்** | **24,503** | **20,502.1** | **99,118** | **78,969.2** |

*(ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு)*

## 1.7. அலங்கார மீன் ஏற்றுமதி

தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிவிருத்தி அதிகாரசபை புதிய அலங்கார மீன் இனத்தை அறிமுகப்படுத்தல், இனப்பெருக்க நடவடிக்கை, நோய்த் தொற்றைத் தடுத்தல், மற்றும் நோய் பரவுதலைக் கட்டுப்படுதல், தரமான நிலையிலுள்ள தாய் மீன்களை வழங்கல், சிறந்த தரமான மீன் உணவை வழங்கல் மற்றும் சம்பந்தப்பட்ட பண்ணையாளர்களுக்கு பயிற்சி வழங்கல், நாரா நிறுவனத்தின் உதவியுடன் புதிய மீன்களின் தலைமுறை ஏற்படுத்தல், தொழில்நுட்ப அபிவிருத்தி, மீன் நோய் சிகிச்சை, செய்கையாளர்களுக்கு கடன் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்தல் போன்ற அலங்கார மீன் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி – நவம்பர் மாதம் வரை அலங்கார மீன் ஏற்றுமதியில் ரூபா 6,812.8 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது.

# கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம்.

கடற்றொழில் துறையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் திட்டமிடுதல், செயற்படுத்தல், மற்றும் அனைத்து கடற்றொழில் அபிவிருத்திக்குத் தொடர்பான பணிகளைப் பாதிக்கும் கொள்கை தயாரித்தல் அமைச்சின் முன்னுரிமைக்கான பொறுப்பாகும். இதற்கமைய கடற்றொழில் பிரிவு தொடர்பாக இந்நாட்டின் தேசிய கொள்கையின் கடல்சார் மீன்பிடி உற்பத்தியை மேம்படுத்தல், நன்னீர் நீர்வாழின வளர்ப்பு மற்றும் நன்னீர் உற்பத்திகளை அதிகரித்தல், அறுவடையின் பின்னரான இழப்புகளை குறைத்தல் மற்றும் பெறுமதி சேர்வை மேம்படுத்தல், தனிநபர் மீன் நுகர்வை அதிகரித்தல், ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், தொழில் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்திக்கு தற்போதுள்ள வாய்ப்புகளை அதிகரித்தல், மீனவ மக்களின் சமூகப் - பொருளாதார நிலையை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை அணுகுவதற்குத் தேவையான சகல வேலைத் திட்டங்களை தொடர்புபடுத்தல் மற்றும் செயற்படுத்தல் போன்ற இந்த அமைச்சின் பிரதான பொறுப்புகளாகும்.

## கடனீரேரிகளை சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்

கடனீரேரி மற்றும் உள்ளக நீர்நிலைகள் சார்ந்த நீரியல் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தியின் ஊடாக நீர்வாழ் உற்பத்திகளை அதிகரிப்பதை முக்கிய வழிமுறையாகக் கொண்டு மீன் மற்றும் நீரியல் உற்பத்திகனை அதிகரிக்கும் நோக்குடன் கடனீரேரி அபிவிருத்தி மற்றும் அதனைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

கடனீரேரி சுத்தம் செய்தல் மற்றும் கடனீரேரியில் நீர் பரிமாற்றம் சீராக நடைபெறும் வகையில் கால்வாய்களை ஆழப்படுத்துவதன் மூலம் இயற்கையாக மீன் குடித் தொகையை அதிகரிக்கச் செய்தல், நீர்வாழ் உயிரினச் செய்கையை மேம்படுத்தல், அறுவடையின் பின்னரான பாதிப்பை குறைப்பபதை நோக்காகக் கொண்டு அடிப்படை வசதி அபிவிருத்தி செய்தல், அங்கீகரிக்கப்படாத மீன்பிடி நடவடிக்கை மற்றும் நீர்நிலைகளை நிரப்புவதைத் தடுத்து பாதுகாப்பதன் மூலம் கடனீரேரிகளை எல்லைப்படுத்தல், வாழ்வாதார அபிவிருத்தி, சதுப்பு நிலங்கள் பாதுகாத்தல், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை அகற்றுதல் மற்றும் கடனீரேரி முகாமைத்துவத்தை வலுப்படுத்தல் மற்றும் மீன் குஞ்சுகளை வைப்பிடுவதன் ஊடாக மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இந்த செயற்றிட்டத்தின் நேரடி நோக்கமாகும். இதுபோன்று புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கல், சுற்றுலா தொழிலை விரிவுபடுத்தல் ஆகிய இலக்குகளையும் இந்த செயற்றிட்டத்தின் ஊடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டுக்கு இந்த செயற்றிட்டத்துக்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்து கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம், தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம், இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மேலும் அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்றிட்டங்களை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### 1.1 கடனீரேகளை ஆழப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்

கடனீரேிகளை சுத்தப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் கடனீரேரிகளை ஆழப்படுத்தல் மற்றும் சுத்தப்பட்டுத்துவதற்கு ரூபா 65.10 மில்லியன் ஒதுக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் 2024.12.31ஆந் திகதியின்போது ஒதுக்கீட்டில் ரூபா 4,99 மில். செலவிடப்பட்டுள்ளது. அறுகம்பே, நந்திக்கடல், நாயாறு, மற்றும் லங்காபட்டுன ஆகிய கடனீரேரிகள் இந்த செயற்றிட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ளதுடன், நந்திக்கடல் கடனீரேரி சுத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒரு முதலீட்டாளர் முன்வந்துள்ளதுடன், அரச மற்றும் தனியார் பங்களிப்பின் கீழ் பங்குடமையின் கீழ் இப்பணியை நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளலருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அறுகம்பே கடனீரேரிக்கான மதிப்பீட்டு அளவுப் பத்திரம் (BOQ) மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றுச் சூழல் பரிசோதனை அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாயாறு கடனீரேரி சுத்தம் செய்வதற்கு நாரா நிறுவனத்தினால் ஆரம்ப சுற்றுச் சூழல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 1.2. கடனீரே உற்பத்தியை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம்

இந்த ஆய்வு செயற்றிட்டம் தேசிய தாய் விலங்குகளைப் பயன்படுத்தி கடனீரேரிகளில் இறால்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இனப்பெருக்க நிலையங்களில் குடம்பிகளின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2024ஆம் ஆண்டில் ரூபா 15 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 3.7 மில். பயன்படுத்தி மட்டக்களப்பு கடனீரேரியில் 1,128,916 இறால் குடம்பிகள் வைப்பிடுவதற்கு தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரூபா 11.1 மில் நீ ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கொக்கிளாய் கடனீரேரியில் இறால் குடம்பிகள் வைப்பிடுவதற்கு தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1.3 தேர்ந்தெடுக்கப்பட்ட கடனீரேரிகளில் எல்லை நிர்ணயித்தல்.

ரூபா 3 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இந்த வருடத்தில் கடனீரேரிகளின் எல்லை நிர்ணயிக்கும் பணிக்கு சிலாபம், முந்தல், நந்திக்கடல் கொக்கிளாய் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் எல்லைத் தூண்கள் நடுவதற்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது.

சிலாபம் கடனீரேரியில் தற்போதுள்ள எல்லைத் தூண்கள் 2,164 உம், புத்தளம் கடனீரேரிக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த தூண்களை கொண்டு செல்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.4 கடனீரேரி முகாமைத்துவம்

கடனீரேரி முகாமைத்துவத்துக்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு ரூபா 0.50 மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2024.12.31ஆந் திகதிக்கு 30% பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது.

- **கடனீரேரி சார்ந்த முகாமைத்துவ குழு அமைத்தல் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நடாத்தல் :-**

  கடனீரேரி முகாமைத்துவத்தும் மற்றும் மீனவ சமூக ஒத்துழைப்புக் குழு அமைக்கப்பட்டதுடன் மாத்தறை, கராதுவ, புத்தளம் மற்றும் சிலாபம் ஆகிய கடனீரேரிகளில் முகாமைத்துவ குழுக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு ஒன்பது வேலைத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- **கடனீரேரி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் :-**

  2024இல் சிலாபம், கராதுவ மற்றும் கொக்கல ஆகிய கடனீரேரிகளுக்கு கடனீரேரி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டங்கள் 03 வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. (சட்ட வரைபு குறிப்பு தற்போது அரச அச்சகத்தின் மூலம் அச்சிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.5 லமசூரிய கால்வாய் அபிவிருத்தி

2024.08.31ஆந் திகதிக்கு லமசூரிய கால்வாயின் அபிவிருத்தி 5% பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது.

**1.6 மீனவர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாக செலவினம் வழங்குதல்.**

ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாய காப்புறுதி நிதியத்திலிருந்து 2024ஆம் ஆண்டுக்கு குறித்த தொகையை வழங்குவதற்குள்ள ரூபா 1.5 நிர்வாக செலவை மேற்கொள்வதற்கு அமைச்சினால் இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளட்டுள்ளது.

**1.7 நீர்கொழும்பு கடனீரேரி அபிவிருத்தி**

**1. செயற்றிட்டம் தொடர்பான விபரம்**

இந்த செயற்றிட்ட 3 கட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது. இதன் முதற் கட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பெக்கேஜின் எண்ணிக்கை 7 ஆகும். இதற்கான மொத்த தொகை ரூபா 1,000 மில்லியனாகும்.

1. பெக்கேஜ் III இன் கீழ் றெஜின வீதியின் கடனீரேரி அபிவிருத்தி

பெக்கேஜ் III இன் கீழ் றெஜின வீதியின் கடனீரேரிக்கு அருகில் கடனீரேரியைத் தோண்டும் நடவடிக்கை 20.07.2018இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது கடனீரேரி பௌதீக முன்னேற்றம் 90% மாகும்.

**அ. தாமதத்துக்கான காரணம்** -

செயற்றிட்டத்தின் 3வது கட்டத்தை செயற்படுத்தும்போது, கடனீரேரியிலிருந்து அகற்றிய சேற்று மண் காயும்வரை செயற்றிட்ட எல்லையில் வைத்திருந்தமையால் கண்டத் தாவர சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் ஒ.வி. 20(1)வது பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(செயற்றிட்டத்தின் 3வது கட்டம்) கடனீரேரியில் சேற்று மண்ணை அகற்றி அது காயும் வரை செயற்றிட்ட எல்லையில் வைத்திருந்த மண் நீர்கொழும்பு பொலிஸில் முறையான பாதுகாப்பு கிடைத்த பின் அந்த சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் வரவு செலவு முன்மொழிவு செயற்றிட்டங்கள்**

**1. நன்னீர் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல்**

2024 வரவு செலவு முன்மொழிவின் கீழ் நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள், நன்னீர் மீன் குடம்பிகள் மற்றும் குஞ்சுகளை வைப்பிடுவதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய நீர்வாழின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படும் இந்த செயற்றிட்டத்தின் மூலம் 55,880 நன்னீர் மீனவர்கள் நேரடியாகவும், 2,100 நபர்கள் மறைமுகமாகவும் பயனடைகின்றனர். மீனவ சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மீனவ சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டம் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் செயற்படுத்தப்படுவதுடன், இந்த வேலைத் திட்டத்தின் கீழ் 2024ஆம் ஆண்டில் 30 மில்லியன் நன்னீர் மீன் குஞ்சுகளும், 24.53 மில்லியன் நன்னீர் இறால் குடம்பிகள் மற்றும் 19.68 மீன் குஞ்சுகளும் வைப்பிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 2. வடமாகாணத்தில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல்

2024 வரவு செலவு திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள படகுத்துறை மற்றும் நங்கூரமிடும்தளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்ளில் தற்போதுள்ள 62 படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

செயற்றிட்ட நிதி முன்னேற்றம் ரூபா 34.92 (2024.08.31 திகதிக்கு)

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டத்துக்குரிய கொள்முதல் நடவடிக்கை நிறைவு செய்து ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 4 படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.





*வாய்க்கால் சுத்தம் செய்தல்*

- வாய்க்கால் தோண்டுதல் பள்ளிமுனை கரையோர வீதி - 81%
- சவேரியார்புரம் கரையோர வீதி 700 மீற்றர் தூரம் – 100%
- தோமஸ்புரம் சிலாவத்துறை கரையோர வீதி 500 மீற்றர் தூரம் -100%
- கொண்டச்சிக்குடா/ கொக்குபடையான் கரையோர வீதி – 100%

**முல்லைத்தீவு மாவட்டம்**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 மீன்பிடி படகுத்துறை அபிவிருத்தி செய்தல்.**

- இரணைபாளை அந்தோனியார் கோவில் வீதி 500 மீற்றர் அபிவிருத்தி – 100%
- தீர்த்தகரை மீன்பிடி படகுத்துறை வலை திருத்தும் கட்டிட நிர்மாணம். – 100%
- செம்மலை கிராம சபை வீதி 900 மீற்றர் அபிவிருத்தி – 100%
- நீதாளி முள்ளிவாய்க்கால் சின்னப்பர் கோவில் வீதி அபிவிருத்தி – 100%
- உப்புவெளி வீதி 900 மீற்றர் அபிவிருத்தி – 35%



இரணைபாளை அந்தோனியார் கோவில் வீதி



தீர்த்தகரை மீன்பிடி படகுத்துறை
வலை திருத்தும் கட்டிடம்

**கிளிநொச்சி மாவட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 09 மீன்பிடி படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதில்

✖ **படகுப் பாதைகள் 03 சுத்தம் செய்தல்**

- நாச்சிக்குடா இரணைமாதா நகர் படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல். – 10%
- நாச்சிகுடா யஹ்பர் படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல். – 10%
- பூனகரி வளைமதி படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல். – 10%



✖ **வலை திருத்தும் கட்டிடம் 01 நிர்மாணம்**

- நாச்சிக்குடா மற்றும் நல்லாயன் படகுத்துறை வலை திருத்தும் கட்டிட நிர்மாணம்.



நாச்சிக்குடா மற்றும் நல்லாயன் ஏலவிற்பனை நிலையம் நிர்மாணம்

✖ மீன் ஏலவிற்பனை நிலையம் மறுசீரமைப்பு 01% மும்

- நாச்சிக்குடா குமுலமுனை மீன் ஏலவிற்பனை நிலையம் மறுசீரமைப்பு - 65%





நாச்சிக்குடா கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை

✖ மீன் ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு 02உம்

- நாச்சிக்குடா கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் கட்டிட மறுசீரமைப்பு - 30%




நாச்சிக்குடா கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை

- பூநகரி கவுதாரிமுனை கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு 10%



கவுதாரிமுனை ஒக்டன் நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை

✖ வீதி அபிவிருத்தி 01உம்

நாச்சிக்குடா வளைபாடு புனித ஆனால் கோவில் வீதி 700 மீற்றர் அபிவிருத்தி - 55%



*நாச்சிக்குடா வளைபாடு புனித ஆனால் கோவில் வீதி (700 மீற்றர்) அபிவிருத்தி*

✖ கலங்கரை விளக்கு பொருத்துதல்

- பளை கிளாளி கலங்கரை விளக்கு பொருத்துதல் - 60%
  (Fixting of Beacon light Palai Kilaly)

**யாழ்பாண மாவட்டம்**

யாழ்பாண மாவட்டத்தில் மீன்பிடி படகதுதுறை அபிவிருத்தி I மற்றும் II கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கொள்முதல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

➢ I **கட்டம் - கொள்முதல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இதில்**

- படகு பயணப் பாதைகள் 25 படகுத்துறைகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.
- 17 படகுத்துறைகளில், படகுத்துறைகள் மற்றும் வீதிகளுக்கு சூரிய சக்தி வெளிச்சம் பொருத்துதல்

➢ II **கட்டம் - கொள்முதல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது இதன்மூலம் -**

- கட்டுனேரி தீர்தக்கரை கரையோரப் பாதை மதகு நிர்மாணித்தல். - 23%
- உதயபுரம் கரையோரப் பாதை1700 மீற்றர் மறுசீரமைப்பு - 40%
- குருநகர் ஏலவிற்பனை நிலைய வாகன தரிப்பிடம் மறுசீரமைப்பு - 84%

**கடற்றொழில் அமைச்சின் மூலம் செயற்படுத்தும் செயற்றிட்டங்கள்**

**1. கந்தர மீன்பிடித் துறைமுகம் நிர்மாணம்**



இந்த செயற்றிட்டத்தின் மூலம் பின்வரும் வகைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

**i. செயற்றிட்டத்தின் விபரம்**

- ♣ நீர்த்தடுப்பணை நிர்மாணித்தல்
- ♣ மேடைக்கட்டு நிர்மாணம்
- ♣ கரையோர வசதிகள் (Shore facilities)

நிர்மாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீன் ஏலவிற்பனை நிலையம், வலை திருத்தும் நிலையம், சுகாதாரவேற்பாட்டு வசதிகள், கடைத் தொகுதி, பணிக்குழுவினர் இளைப்பாறும் இடம், பாதுகாப்பு படையணி, ஆகியோர்களுக்கு அலுவலக, தங்குமிட வசதி, எரிபொருள் நிரப்பு நிலையம், கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் இடம், எடை பார்க்கும் இடம், எரிபொருள் வழங்கும் நடவடிக்கை மற்றும் நீர்த் தொட்டி போன்ற நிர்மாணங்கள்.

ii. செயற்றிட்டம் ஆரம்பம் : 2020.12.07

iii. செயற்றட்டம் நிறைவடைதல் : 2026 திசம்பர் (அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது)

iv. திருத்தப்பட்ட செயற்றிட்டத்திட்டத்தின் பெறுமதி : ரூபா 11,354 (அதிவிசேட செலவு 10% வெட் வரியுடன்)

v. செயற்றிட்டத்தின் நிதி முன்னேற்றம் :

| வருடம் | நிதி ஒதுக்கீடு ரூபா மில். | செலவினம் ரூபா மில். | குறிப்பு |
|---|---|---|---|
| 2020 | 408 | 202.48 | 2024.12.31 திகதியில் |
| 2021 | 1,710 | 1,595.30 | |
| 2022 | 1,599.44 | 1,145.43 | |
| 2023 | 2,534.59 | 2,353.00 | |
| 2024 | 3,199.90 | 2,795.20 | |

vi. **பௌதீக முன்னேற்றம்**

அமப/24/1077/606/015 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கந்தர மீன்பிடித் துறைமுகத்தில் கரைப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, துறைமுக நீர்மண் அரிப்பு தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வு மற்றும் சுற்றாடல் ஆய்வு மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய கந்தர மீன்பிடித் துறைமுக செயற்றிட்டம் 2024.12.31க்கு எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் 81.86% மாக இருப்பதுடன் இதன் பௌதீக முன்னேற்றம் 72.17 %மாகும். வேலைத் திட்டம் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் வகைகள் | எதிர்பார்த்த முன்னேற்றம் (%) | அடைந்த முன்னேற்றம் (%) |
|---|---|---|
| கந்தர கடற்றொழில் துறைமுகம் | **81.86** | **72.17** |
| அடிப்படை நடவடிக்கை | 100 | 100 |
| அலை தடுப்பணை நிர்மாணம் | 100 | 100 |
| தடாகம் ஆழப்படுத்தல் | 100 | 100 |
| முந்தைய தொகுதி தயாரித்தல் | 100 | 100 |
| மேடைக்கட்டு நிர்மாணம் | 100 | 100 |
| கட்டிட நிர்மாணம் | 30 | 8.77 |
| வெளிப்புர நிர்மாண நடவடிக்கை | 44 | 5.57 |
| Provisional sums | 33 | 0.4 |
| காணி சுவீகரித்தல் மற்றும் மீள் குடியமர்வு | 91 | 88.5 |

அதற்கமைய கந்தர மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கை 2024.12.31ஆந் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் பொளதீக முன்னேற்றம் 81.86% ஆக இருப்பதுடன். இதன் பௌதீக முன்னேற்றம் 72.17% ஆகும்.

அமப 24/1077/606/015ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கந்தர கடற்றொழில் துறைமுகத்தின் நிலம் சார்ந்த பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், துறைமுகத்தின் மண்அரிப்பு தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வை மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த செயற்றிட்டம் மீண்டும் தயாரிக்கப்பட்டு வருகிறது.





நீர்ததடுப்பணை

மேடைக்கட்டு நிர்மாணிதல்




Travel lift bay நிர்மாணம்



எரிபொருள்அலுவலகம் நிர்மாணித்தல்



மேடைக்கட்டு நிர்மாணம்



நிலத்தடி நீர்த்தொட்டி நிர்மாணம்

## 2. மைலிட்டி கடற்றொழில் துறைமுகம்

இந்த கடற்றொழில் துறைமுகத்தின் அலை தடுப்பணை. படகுத்துறை, படகு வெளிச்சம், பிரவேச கால்வாய் உட்பட துறைமுக தடாக சேற்று மண் அகழ்தல், கரையோர வசதிகளை வழங்குவதற்கு ஏலவிற்பனை நிலையம், வலை பழுதுபார்க்கும் கூடம், களஞ்சியப்படுத்தும் தொட்டியுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் திருத்துதல், சனசமூக நிலையம், நிர்வாக அலுவலகம், நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வீடு, பொது வசதிகள் மற்றும் கரையோரம் சார்ந்த அடிப்படை வசதிகள் போன்ற துறைகளில் பல செயற்றிட்டங்களின் கீழ் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்கமைய Iஆம் கட்டம் மற்றும் IIஆம் கட்ட வேலைகளை நிறைவு செய்து செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் IIIஆம் கட்ட மதிப்பீட்டு நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இந்த செயற்றிட்டத்துக்கு 2024ம் ஆண்டுக்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், IIஆம் கட்ட பற்றுச் சீட்டுகளுக்கான செலவு ரூபா 145.55 ஆக இருப்பதுடன் IIஆம் கட்ட பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

. **IIIஆம் கட்டம்**

IIIஆம் கட்டத்தின் கீழ் கரையோர வசதிகளை வழங்குவதற்கு ஏலவிற்பனை நிலையம், நிர்வாக அலுவலகம் நிர்வாக உத்தியோகத்தர்ளுக்கான உத்தியோகபூர்வ வதிவிடம் பொது வசதிகள், கரையோரம் சார்ந்த அடிப்படை வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டம் 2026ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ளது.

## 3. சாத்தியக் கூற்று ஆய்வு, திட்டம் தயாரித்தல் மற்றும் சுற்றாடல் தாக்க ஆய்வு மேற்கொள்ளல்

**அம்பலாங்கொட மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்**

- அம்பலாங்கொட மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரிப்பதற்கு ஆலோசனைக் குழு தேரந்தெடுக்கப்பட்டுள்ளது.




**ஹிக்கடுவை மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்**

- ஹிக்கடுவை மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரிப்பதற்கு ஆலோசனைக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




**வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்தல்**

- வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (IEE) தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தொடந்துவ மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்**

- தொடந்துவ மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் -ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரிப்பதற்கு ஆலோசனைக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## 4. மாவெல்ல நங்கூரமிடும்தளம் நிர்மாணித்தல்.

சுற்றுச்சூழல் அனுமதிக்கு கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிர்மாணம் தொடர்பாக தரப்பினருடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது. கடலரிப்புக்கு கட்மமைப்பு திட்டத்துக்கு தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்

## 5. ரெக்காவ நங்கூரமிடும்தளம் நிர்மாணித்தல்.

- திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. NPD க்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## 6. ஒலுவில் துறைமுகம்

ஒலுவில் துறைமுகம் சார்ந்து எழுந்துள்ள பிரச்சனைகள் தொடர்பாக 2023.08.23ஆந் திகதி கலந்துரையாடல் கௌரவ பிரதம மந்திரியின் தலைமையில் நடைபெற்றதுடன், இதிர் அரசியல் அதிகாரசபை, பிரதம மந்திரி அலுவலகம், துறைமுகம் மற்றும் விமான சேவை அமைச்சு, இந்த அமைச்சு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், மற்றும் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள், ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இங்கு கடல்சார் பல்கலைக்கழகம், மற்றும் அத்துறைசார் பிற கல்வி நிறுவனங்களிலிருந்து இனம் காணப்பட்ட முத்தரப்பு கல்விக்குழு நிறுவப்பட்டு, அக்குழுவுக்கு அனைத்து தரப்பினரும் தத்தமது கருத்துக்களை/ ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கி சம்பந்தப்பட்ட சகல சகல விடயங்களிலும் கவனம் செலுத்தி நடைமுறை முன்மொழிவுடன் குழுவின் அறிக்கை உடனடியாக கௌரவ பிரதம மந்திரிக்கு சமரப்பித்தல்.

இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் தொடர்ந்து செயற்படும் துறைமுகமாக மாற்றுவதற்குத் தேவையான பரிந்துரையை வழங்குவதற்கு கடல்சார் பல்கலைக்கழகம், மற்றும் அத்துறைசார்ந்த பின்வரும் பிற கல்வி நிறுவனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று 2023.12.31ஆந் திகதி நியமிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பேராசிரியர் ஜே.ஜே. விஜேதுங்க | தலைவர் - சிவில் பொறியியலாளர் திணைக்களம், பேராதெனிய பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| திரு. ஈ.பீ. றொஹான் எதிரிசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர், கடல்சார் பொறியியல் திணைக்களம், இலங்கை கடல்சார் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| பேராசிரியர் தர்ணி பிரதீப் குமார | கடல்சார் பல்கலைக்கழகம், மற்றும் கடல் புவியியல் திணைக்களம், றுஹுனு பல்கலைக்கழகம், | உறுப்பினர் |
| திரு. அஸ்லம் சுஜா | சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம், இலங்கை அக்னி திகா பல்கலைக்கழகம். | உறுப்பினர் |
| கலாநிதி நிமல் விஜேரத்ண | சிரேஷ்ட விரிவுரையாளர், சிவில் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம். | உறுப்பினர் |
| திரு. ஹர்ஷ் ரத்னசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர், சிவில் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம். | உறுப்பினர் |

பல கலந்துரையாடல்கள் நடாதப்பப்பட்டு, அது தொடர்பான தகவல ஆவணங்கள் நிபுணத்துவ குழுவுக்கு அனுப்பப்பட்டாலும், பின்னர் அது தொடர்பான மேலதிக பணிகள் நிறுத்தப்பட்டதை நிறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இதற்கமை அடுத்த வருடத்தில் மேற் குறித்த பிரேரணைக்கு அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைத்த பின்னர் எஞ்சிய பகுதி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்கள்

| உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) உதவியின் கீழ் செயற்படுத்தும் செயற்றிட்ட முன்மொழிவுகள் | | |
|---|---|---|
| செயற்றிட்ட முன்மாழிவுகள் | தொகை ரூ.மில். | தற்போதைய முன்னேற்றம் |
| இலங்கையில் கிராமிய மக்களின் உணவு மற்றும் போசாக்கினை பாதுகாத்தல் மற்றும் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதை உறுதிப்படுதிப்படுத்துவதற்கு செய்கை அடிப்படையிலான நன்னீர் மீன்பிடித் தொழிலை சுயதொழிலாக நிலைபேறாக அபிவிருத்தி செய்தல். | 3.0 | இதன் கீழ் உணவு மற்றும் போசாக்கினை பாதுகாத்து மேம்படுத்தப்படுவதுடன் நிலைபேறாக வலுப்படுத்துவதற்கு மீன் சிணை இனப்பெருக்க திறனை மேம்படுத்துவதற்கு மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அனுராதபுரம் மற்றும் மொனாரகல ஆகிய மாவட்டங்களில் சமூக அடிப்படையிலான 04 மீன் இனப்பெருக்க நிலையங்கள் நிறுவுதல் நீர்வாழின வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் 04 மற்றும் சமூக அடிப்படையிலான இனப்ருெக்க அலகுகள் மேம்படுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை அதிகரித்தல், தாய் மீன்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மீனவ மக்களுக்கிடையே கூடுகளில் மீன் வளர்ப்பை பிரபல்யப்படுத்தும் வேலைத் திட்டத்ததை திட்டமிடல். |
| மீன்பிடித் தொழிலை அறுவடையின் பின்னரான பாதிப்பைக் குறைப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் | 7.8 | நவீனமயமாக்கப்பட்ட பல்தின படகுகள் இரண்டு வெற்றிகரமான சோதனை நடாத்தப்பட்டுடன், இந்த செயற்றிட்டத்தின் கீழ் நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட மீன்பிடிப் படகின் நவீன உபகரணங்களுடன் முதலாவது பயணம் திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் 2024.10.24ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. |
| பயனுள்ள உயிரியல் பாதுகாப்பு மற்றும் டிஜிடல் தொழில்நுடபத்தின் ஊடாக ஸ்மார்ட் மற்றும் நிலைபேறான நீர்வாழின வளர்ப்பு | 1.2 | 2022.10.20ஆந் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. உயிரியல் பாதுகாப்பு (BS) மற்றும் விசாலமான தரவு (BD) தொடர்பான தொழில்நுகூட்ப நடைமுறை குழு (TWG) நிறுவ வழிவகுத்தது |
| கடலட்டை நீர்வாழின வளர்ப்பு மற்றும் குறைந்துவரும் வனவள தயாரித்தல், மீள களஞ்சியப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்துக்கு தொழில்நுட்ப உதவி | 2.0 | 2022.10.20ஆந் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) அனுமதிப் பெற்று செயற்டும் நிலையில் உள்ளது. |

| சீன அரசின் உதவியின் கீழ் செயற்படுத்தும் செயற்றிட்ட முன்மொழிவுகள் | | |
|---|---|---|
| செயற்றிட்ட முன்மாழிவுகள் | தொகை ரூ.மில். | தற்போதைய முன்னேற்றம் |
| வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவ குடும்பங்களுக்கு ரூபா 1804.00 மில். சீனக் குடியரசின் உதவின் கீழ் 1630 மெ.தொ. அரசி, தயாரிக்கப்பட்ட 500 வீடுகள் மற்றும் 75000 மீன் வலைகள் வழங்கப்பட்டது. | 1804.00 | சம்பந்தப்பட்ட மானியம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவ குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| சர்வதேச அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனத்தின் (USAID) உதவியின் கீழ் செயற்படுத்தும் செயற்றிட்ட முன்மொழிவுகள் | | |
|---|---|---|
| **செயற்றிட்ட முன்மாழிவுகள்** | **தொகை ரூ.மில்.** | **தற்போதைய முன்னேற்றம்** |
| காலநிலை மற்றும் வானிலை மாற்றத்தின் மூலம் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனத்தின் (USAID) மூலம் மாசி உலர்த்தும் 4 இயந்திரங்கள் வழங்குதல் | 84,199.38 | தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குடாவெல்ல பிரதேசத்தில் 04 மாசி தயாரிக்கும் இயந்திரங்கள் வழங்குவதற்கு பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை நடைபெற்று வருவதுடன் இது தொடர்பாக 120 நபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், தொழில்துறை சேவை பணியகத்தின் (Industrial service Bureau – ISB மூலம்இது தொடர்பான உபகரணங்களைத் தயாரிப்பதற்கு நாரா நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. |

| தாய்லாந்து அரசின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் | | |
|---|---|---|
| **செயற்றிட்ட முன்மாழிவுகள்** | **தொகை ரூ.மில்.** | **தற்போதைய முன்னேற்றம்** |
| கடல் அலங்கார மீன் இனப் பெருக்கம் தொடர்பான பயிற்சி மற்றும் நிபுணத்துவ சேவை. | 54 | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் 13.09.2023ந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| ஜப்பான் அரசின் (ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு தொகுதி- Japan International Cooperation System -JICS) உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்ட முன்மொழிவுகள் | | |
|---|---|---|
| **செயற்றிட்ட முன்மொழிவுகள்** | **தொகை அ.டொ.** | **தற்போதைய முன்னேற்றம்.** |
| வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் நடவடிக்கைக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கல்.<br><br>(Providing supportive equipment for fisheries industry) | 3,000,000 | NPD/AGC/PP/FIS/2023/05 எனும் இலக்கத்தின் கீழ் 2023.07.04ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) அனுமதி கிடைத்துள்ளது<br><br>2ஆம் கட்டத்தின் கீழ் உபகரணங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>முதற் கட்டத்தின் கீழ் மீன்பிடி நடவடிக்கையை மேம்படுத்தல் மற்றும் குளிரூட்டல் செயற்பாட்டுக்குத் தேவையான கீழ்குறிப்பிடப்படும் உபகரணங்களை வழங்பபடுகின்றன.<br><br>Ice Making Machine<br>- Digital Platform Scale<br>- Fishing Net, Refrigerator<br>- Cargo Truck<br>- Prefabricated Refrigerator/ Freezer<br>இதற்கு மேலதிகமான முன்மொழிவு 2023 செப்தம்பர் மாதம் ஜப்பான் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>இரண்டாம் கட்டத்தின் கீழ் மீனவர்களின் பாதுகாப்புக்காக உபகரணங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | | - Patrol Boat<br>- Rigid Hull Inflatable Boat (RIB)<br>- Lighted Buoy<br>- HF Radio Transceiver<br>இது சார்பான முன்மொழிவு 2024 பெப்ரவரி மாதம் ஜப்பான் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல். தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஜப்பான் நிதியாண்டு ஏப்ரல் தொடக்கம் மார்ச் வரை செயற்படுத்தப்படும், எனவே இது அந்த நிதி ஆண்டுக்கான செயற்றிட்டமாகும். |

## அமைச்சின் விடய தலைப்புக்கு அனுகூலமான ஏனைய நடவடிக்கைகள்

### உள்ளூர் ரின்மீன் தொழிலின் அபிவிருத்தி

இலங்கை, கருவாடு, ஈரப்பத மீன், நெத்தலி, மாசி, மேலும் ரின்மீன் ஆகிய மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்தி இறக்குமதிக்கு வருடாந்தம் பெருமளவு அந்நிய செவாணி செலவிடுகின்றது இதற்கமைய 2019ஆம் ஆண்டுக்குள் இந்த இறக்குமதிக்கு ரூபா 37,500 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், இதில் ரூபா 13,600 மில்லியன் வரை இது மொத்த இறக்குமதியில் 36% வரை பெருந் தொகைப் பணம் ரின் மீன் இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளது. எனவே ரின்மீன் தொழிலை ஊக்குவிப்பதன் மூலம் ரின்மீன் இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நிய செலாவணியை இந்நாட்டில் மிச்சப்படுத்த முடிவதுவதுடன், உள்ளூரில் ரின்மீன் தொழில் வாய்ப்பினை அதிகரிப்பதுடன், உள்ளூர் மீனவர்கள் தங்கள் மீன் உற்பத்திகளுக்கு நியாயமான மற்றும் நிலையான விலையை பெற்றுக் கொள்ளும் திறனைக் கொண்டுள்ளதாக இருக்கும். இதற்கமைய ரின்மீன் தொழிலை ஊக்குவிப்பதற்கு கடற்றொழில் அமைச்சினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் குறிப்பாக –

- ரின்மீன் தொழிலுக்கு மூலக் பொருளாகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் லின்னா மீனின் விலை உள்ளூர் சந்தையில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், அதற்குப் பதிலாக மெக்கரல் மீன்களை மிகவும் விசேட வரிச் சலுகையுடன் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல்.
- உள்ளூர் ரின்மீன் தொழிலுக்கு மூலப் பொருளாக மீன் இறக்குமதி செய்வதில் ஏற்படும் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு அதில் தலையிட்டு அதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- அனைத்து ரின்மீன் தொழிற்சாலைகளையும் கடற்றொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்து முறையாக ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்.
- இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களுடன் உள்ளூர் ரின்மீன்கள் சாதாரண போட்டி விலையின் கீழ் விற்பனை செய்வதற்கு தேவையான வரி திருத்தங்களை செய்யும்போது அமைச்சு தலையிடல்.
- கடற்றொழில் திணைக்களத்தின் மூலம் அனைத்து ரின்மீன் தொழிற்சாலைகளையும் தரக்கட்டுப்பாடு தொடர்பாக தலையிட்டு அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ஆலோசனைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கல்.
- ரின்மீன் தொழிலில் ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி கலந்தாலோசிப்பதற்கு அது தொடர்பான நிறுவனம் மற்றும் தரப்பினர் அடங்கிய குழுவை அமைப்பதற்கும் அக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு பின்விபரம் மேற்கொள்ளல்.

2019ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உள்ளூர் ரின்மீன் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை சுமார் 06 ஆக இருந்தததுடன், இந்த தொழிற்சாலைகளின் மூலம் 2019ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரின் மீன்களின் எண்ணிக்கை 3,100 மெ. தொன்களாகும். ஆனால் 2024ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் தர நிர்ணய சபையினால் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 20 வரை வளர்ச்சி அடைந்துள்ளது. இத்தொழிற்சாலைகளில் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 16ஆகும். 2024 நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 11,700 மெ. தொன் ரின்மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் இதற்கு மேலதிகமாக 05 ரின்மீன் தொழிற்சாலைகள் வரை இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் கீழ் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் எதிர்காலத்தில் இத் தொழிலில் இருந்து கணிசமான ரின்மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகின்றது.

### உள்நாட்டு சந்தைக்கு ரின்மீன் வழங்கல்

கடந்த 8 ஆண்டு காலப் பகுதிகளில் (2017 – 2024 நவம்பர் வரை) தரநிலை சான்று பெற்ற இந்நாட்டு பிரதான ரின்மீன் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ரின்மீன் தரவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன் பற்றிய தரவினைக் கவனிக்கும்போது பின்வருமாறு தகவல்கள் வெளிப்படுகின்றன.




2019ஆம் ஆண்டின் பின் ரின்மீனின் நுகர்வு துரிதமாக வீழ்ச்சியடைந்தது. அத்துடன் 2020 முதல் 2023 வரையான காலப் பகுதியில் ரின்மீன் நுகர்வு சாதாரணமாக வருடத்துக்கு 19,000 மெ.தொ. வரை பொதுவாக முன்னைய நுகர்வில் அரைவாசியாக குறைந்தது. இதற்கு 2019ஆம் ஆண்டின் போது நாட்டில் தொற்றிய கொரோனா நோய் காரணமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் நாட்டு மக்களின் திறன் குறைந்தது போன்ற காரணங்கள் இதற்கு வலுவான தாக்கம் என நம்பலாம். மேலும் 2024ஆம் ஆண்டில், நவம்பர் மாதம் வரை இந்த 16 பிரதான ரின் மீன் தொழிற்சாலைகள் மட்டுமே இந்நாட்டில் 70% க்கும் அதிகமான ரின்மீன்களை வழங்கியுள்ளன.

மேலும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரின்மீன் தொழிற்சாலை மூலம் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை உற்பத்தி செய்யப்பட்ட

ரின்மீன்களின் அளவு 2019ஆண்டு உள்ளூர் ரின்மீன் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மீன் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 300% வளர்ச்சியைக் காட்டுகிறது. எனவே 2019ஆம் ஆண்டில் பொதுவாக ரின்மீன் இறக்குமதிக்கு வருடாந்தம் ரூபா 13,600 மில்லியன் (76 அ.டொ.) வரையான பணம் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் அது 2024 நவம்பர் மாதம் வரை ரூபா 3,316.5 வரை குறைந்து காணப்படுகிறது. இதற்கு ரின் மீன் இறக்குமதி குறைந்தமைக்கு உள்ளூர் நுகர்வு குறைந்தமை ஓரளவு பாதிப்பு ஏற்பட்டாலும், 2024 ஆம் ஆண்டில் உள்ளூர் ரின்மீன் தொழில் வளர்ச்சியில் இது வலுவான பாதிப்பை ஏற்படுத்தியது.

மேலும் 2020க்கு முந்திய 5 வருடங்கள் இந்நாட்டில் அடைக்கப்பட்ட ரின்மீன் அதிகளவு நுகர்வு பதிவிடப்பட்டுள்ளது. அத்துடன் இக்காலப் பகுதியின் தரவில் கவனம் செலுத்தும்போது சராசரியாக நாளாந்தம் 425 கிராம் கொண்ட 263,000 மீன் ரின்கள் வரை நாளாந்தம் தேவைப்படுகின்றது. இதற்கமைய இந்நாட்டில் உள்ள ரின்மீன் தொழிற்சாலைகளின் உற்பத்தி திறனைக் கருத்திற் கொண்டு இந்த தேவைகளைக் காட்டிலும் அதிக ரின்மீன்களை உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றுள்ளன.

மேலும் தற்போது இந்த ரின்மீன் தொழிற்சாலைகளின் மூலம் 2,000 நேரடி தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளதுடன், இதற்கு மேலதிகமாக வெற்றுக் கேன்கள் உற்பத்தி லேபல் வழங்குவது உள்ளடங்கலாக ஏராளமான தொழில் வாயப்புகள் உருவாகியுள்ளன. மேலும் உள்நாட்டு ரின்மீன் தொழில் ஏற்றுமதி தொழில் வரை வளர்ச்சியடைவதற்கு இந்நநாட்டு தொழிற்சாலைகள் ஆற்றலைக் கொண்டுள்ளது. அத்துடன் இதற்குத் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகள் தற்போது கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. உள்நாட்டு ரின்மீன் நுகர்வோர்களுக்கு தாங்ககக்கூடிய விலைக்கு ரின்மீன் உள்நாட்டில் உற்பத்தி செய்தால் ரின்மீன் இறக்குமதியின்போது செலவிடப்படும் வெளிநாட்டு செலாவணியைத் தவிர்த்து அதற்கான வெளிநாட்டு செலாவணியை ஈட்டும் திறன் இந்த தொழிலுக்கு உண்டு. இதற்கு மேலதிகமாக இந்த ரின்மீன் தொழிலை அபிவிருத்தி செய்வதன் காரணமாக இந்நாட்டு லின்னா மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பெருமளவிலான மீனவர்கள் தமது உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெற்று இந்நாட்டு லின்னா மீன்பிடித் தொழிலையும் பாதுகாப்பதோடு, மக்களின் உணவு பாதுகாப்பையும், இந்நாட்டு ரின்மீன தொழிலின் அபிவிருத்தியையும் பெரிதும் பாதித்துள்ளது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பாக பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலுக்கு ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீடு வழங்கல்

2021.05.21ஆந் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இந்நாட்டு கடல் எல்லைக்குள் தீப்பற்றியதன் காரணமாக கப்பலின் கொள்கலன்களில் இருந்த பிளாஸ்டிக், இரசாயணத் திரவங்கள், எண்ணெய் போன்றவை கடலில் பரவியிருந்தமையால் இலங்கையின் மேற்கு கரையோரப் பகுதியில் கடல் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்த சுற்றுச் சூழல் பாதிப்பு காரணமாக களுத்துறையில் இருந்து நீர்கொழும்பு வரையான மீனவர்களின், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீன்பிடித் தடை ஏற்படுத்துவதற்கு அரசாங்கள் நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக வாழ்வாதரத்தை இழந்த மீனவர்களுக்கு அந்த கப்பல் நிறுவனத்தினால் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது சம்பந்தப்பட்ட கப்பல் காப்புறுதி கம்பனியிடமிருந்து இடைக்கால இழப்பீடாக ரூபா 2,980 மில்லியன் கடற்றொழிலுக்கு தடை செய்யப்பட்ட பிராந்தியத்தின் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு இழப்பீடு வழங்க கோரியுள்ளதுடன், சம்பந்தப்பட்ட கடல் காப்புறுதி காப்புறுதி நிறுவனத்தினால் இடைக்கால இந்த இழப்பீட்டுத் தொகை நேரடியான 15,032 மீனவர்களுக்கும், மீன்பிடி சார்ந்த தொழிலில் ஈடுபடும் 4,888 பேருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கப்பலின் சிதைவு காரணமாக வலைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திய மீனவர்களுக்கு ரூபா 6,541,925/- இழப்பீடாக வழங்கப்பட்டது.

# 02
# கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்(DFAR)

## நோக்கம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நிலைபேறாகப் பேணி மீனவ மக்களின் சமூப் பொருளாதார நிலையை வலுவூட்டுவதன் ஊடாக தேசிய பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்க உண்ணத பங்களிப்பை வழங்கல்.

## நடவடிக்கை

கடற்றொழில் கைத்தொழிலை நிலைபேறான அபிவிருத்தியின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு முறையான பங்களிப்பை வழங்குவதற்கு தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணத்துக்கு அமைவாக நவீன தொழில்நுட்ப முறையைக் கடைப்பிடித்து கடற்றொழில் மற்றும்

**நோக்கம்**

- உள்ளூர் மற்றும் சர்வதேச கடல்சார் சட்டங்கள் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

- கள் மற்றும் மரபுகளுக்கு ஏற்ப கடற்றொழில் நடவடிக்கை முகாமைத்துவம், ஒழுங்குமுறைப்படுத்தல், பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி.
- மீன்பிடித் துறையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச கடல்களில் மீன் வளங்களை அறுவடை செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- மீனவ சமூகத்தினரின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- அறுவடைக்கு பிந்திய பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் உள்ளூர் மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- சர்வதேச மரபுகள் மற்றும் பிராந்திய மரபுகளுக்கு ஏற்ப மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.
- துறைமுக அரச நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நியதிக் கோவைக்கு ஏற்ப துறைமுக சேவைகளை செயல்படுத்தும் செயல்பாட்டை உறுதிப்படுத்தல்.
- ஆழ்கடலில் மீன்பிடி படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீனவ சமூகம் மற்றும் பிற வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நிலையில் உகந்த சேவையை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலை அமைப்பு மீன்பிடித் தொழில் தொடர்பான தரவுகளை உடனடியாகவும் தெளிவாகவும் பெற முடியும்.

## பிரதான செயற்பாடுகள்

- கடற்றொழில் செயல்பாட்டு விதிமுறைகளை விதித்தல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- கடற்றொழில் முகாமைத்துவ விதிமுறைகளை உருவாக்குதல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- நீர்வாழ் உயிரின முகாமைத்துவ நியதிகள் தயாரித்தல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- மீன்பிடி படகுகளின் பதிவு, அடகு வைப்பு மற்றும் மீன்பிடி உரிமை பத்திரம் போன்றவற்றை வழங்குதல்.
- நேரடியாக மீன்களை ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குதல்.
- வெளிநாட்டு மீன்பிடி படகுகளுக்கு மீன்களைத் தரையிறக்குவதற்கான அனுமதி வழங்குதல்.
- கடற்றொழில் முகாமைத்துவம் குறித்த மீனவ சமூகத்தினரின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
- மூலதனப் பொருட்களைப் பெறுவதற்கு நிறுவன கடன் வசதிகளை ஒருங்கிணைத்தல்.
- மீன்பிடி படகுகளின் உற்பத்தி நிறுவனங்களின் பதிவை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்வள உள்ளீடுகள் வழங்குநர்களின் பதிவை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- மீனவ கூட்டுறவு சங்கங்களை திறமையான செயற்பாடுடைய நிலைக்கு கொண்டு வருவதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.
- தேசிய மீனவ சம்மேளனத்தின் கீழ் நிறுவப்பட்ட கிராமிய மீனவ அமைப்புகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மீன்பிடித்தொழில் தொடர்பான தரவு சேகரித்தல்.
- வெளிநாடுகளில் எல்லை தாண்டி சென்று கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை திருப்பி கொண்டு வருதல்.
- கடலில் அனாதரவாக சிக்கித் தவிக்கும் மீனவர்கள் மற்றும் படகுகளை இலங்கைக்கு மீட்டுக் கொண்டு வருதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் தரத்தை பரிசோதனைக்கு உட்படுத்தல்.
- உள்ளுர் நுகர்வுக்கான மீன் விற்பனை சந்தைகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் இணையும் பல்தின படகுகளுக்கு படகு கண்காணிப்பு கருவிகளை நிறுவுதல்.
- மீன்பிடி படகுகளுக்கும் தரைக்கும் இடையிலான வானொலி தொடர்பு வசதிகளை வழங்குதல்.
- அயல்நாட்டு எல்லையைத் தாண்டும் மீன்பிடி படகுகள் சம்பந்தமாக குறித்த அறிக்கைகளைப் பெறுதல்.
- தினசரி வானிலை அறிக்கைகள் மற்றும் பாதகமான வானிலை முன்னறிவிப்புகளை நாளாந்த அடிப்படையில் வழங்குதல்.
- படகு கண்காணிப்பு அமைப்பு வழங்கும் தகவல்களின் அடிப்படையில் கப்பல்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சட்டவிரோமான வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவித்தல்.
- மீன்பிடி படகுகளின் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கான உரிமங்கள் மற்றும் அழைப்பு சமிக்ஞைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- மீனவர்கள் மற்றும் படகுகள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் ஏற்படும்போது காப்பீட்டுக்கான தகவல்களை உறுதிப்படுத்தல்.
- சர்வதேச கடலில் செயலிழந்து அனாதரவாக தத்தளிக்கும் படகுகளை மீட்பது.
- மீனவ குடும்ப உறுப்பினர்களின் தொழிற் கல்விக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.
- மீனவர் காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மீனவர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
- கடனீரேரி அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மீனவர் கிராமங்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- மீனவப் பெண்களுக்கான மாற்று வருமான திட்டங்கள் செயற்படுத்தல்.

# 2024 அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்.

இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு அதிக பங்களிப்பு வழங்குவதற்கு வினைத் திறன்மிக்க மற்றும் சூழலுக்கு இணக்கமான நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல், அதனை முறையாக மேற்கொள்வதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் மற்றும் மீனவ சமூக பொருளாதாரம், சமூக நலனின் நிலையை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு தேவையான நடவடிக்கை எடுப்பது கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் முதன்மைப் பொறுப்பாகும்

## 2.1 கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் முதன்மைப் பணி

- மீன்பிடி படகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை பதிவு செய்து அதனை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மீன்பிடி படகுகளை திட்டமிடுவதற்கு அனுமதி வழங்கல்.
- மீன்பிடி உள்ளீடுகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மீன்பிடித் துறைக்கு நவீன தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்
- கரையோரம் சார்ந்த நிர்மாண செயற்றிட்டங்கள் தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைக்கு மீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பின்றி பரிந்துரை வழங்கல்.
- மீன்பிடித் துறைக்கான அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி.
- மாற்று வருமானம் ஈட்டும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழிலுக்கான மானிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழிலுக்கான கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மீனவர்களுக்கான காப்புறதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவ சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- கடற்றொழிலுக்கான இழப்பீடு வழங்குவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளல்.
- கடற்றொழில் கெகுளு சிறுவர் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடனீரேரி சூழல் தொகுதி அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல்.
- கடனீரேரி அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் வருடாந்த திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- அனைத்து மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- விசேட மீன்பிடித் தகராற்றைத் தீர்த்து வைத்தல்.

## 2.2 மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

*அட்டவணை 01 : மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம்*

| விடயம் | 2024.12.31வரை முன்னேற்றம் |
|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட அனைத்து மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை | 27,986 |
| காப்புறுதி செய்யப்பட்ட அனைத்து மீனவர்களின் எண்ணிக்கை | 23,756 |
| மீனவ ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களித்தவர்கள் எண்ணிக்கை | 69,095 |
| கடலோட்டு தகுதிச் சான்றிதழ் வழங்கல் | 28,421 |
| பதிவு செய்யப்பட்ட வள்ளச்சாலகளின் எண்ணிக்கை | 55 |
| மீன்பிடி உபகரணங்கள் வழங்குனர்களைப் பதிவு செய்தல் | 19 |
| மீன்பிடி கருவிகள் வழங்குனர்களைப் பதிவு செய்தல் | 07 |

### 2.2.1 மீனவர் பாதுகாப்பு புதிய காப்புறுதித் திட்டம் அறிமுகம்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் முடிவுக்கு அமைய மீன்பிடித் தொழில் மிகவும் சவாலான, ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழில்களில் ஒன்றாக பெயரிடப்பட்டுள்ளது. இந்நாட்டின் மீன்பிடித் தொழிலைப் பொறுத்த வரையில் நன்னீர் மீன்பிடித் துறையைவிட உவர்நீர் துறையில் ஆபத்து அதிகம். அமைச்சின் புள்ளிவிபரவியலுக்கு அமைய இந்நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை 315,720ஆக இருப்பதுடன் இதில் 225,070 பேர் உவர்நீர் பிரிவில் தொழிலில் ஈடுபடுவதுடன், அதில் 87% மட்டும் கரையோர மீனவர்களாக இருக்கின்றனர். 34,300 பல்தின மீன்பிடி படகுகள் மூலம் கரைக்கப்பால் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இந்நாட்டு மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை 266,640 ஆக இருப்பதுடன் நேரடி மீன்பிடித் தொழில் சார்ந்து இருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 1,123,000 ஆகும். இத்துறையில் மறைமுகமாக தொழிலில் ஈடுபடும் மற்றும் சார்ந்த ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை சுமார் 03 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையில் மொத்த சனத் தொகையில் சுமார் 18% மானவர்கள் மீன்பிடித் தொழிலை சார்ந்துள்ளனர்.

இலங்கையில் நேரடியாக செயற்படும் மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 315,720 ஆகும். இதில் இதுவரை நடைமுறையில் உள்ள காப்பீட்டுத் திட்டத்துக்குப் பங்களிப்பு செய்தவர்கள், செயற்படும் மீனவர்களின் எண்ணிக்கை புள்ளிவிபரங்களில் 1.73%மாகும். தற்போது நடைமுறையில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சனைகளைக் கண்டறிந்து மீனவர்களுக்குப் பயனுள்ளதாக, சலுகை கட்டணத் தொகையுடன் புதிய காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமும் இணைந்து ''தீவர ரக்கும்'' எனும் தனிநபர் காப்புறுதி அறிமுகப்படுத்தியுள்ளது.
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் செயற்படுத்தப்படும் ''தீவர ரெகும்'' எனும் தனிநபர் விபத்துக் காப்புறுதியின் கீழ் மீனவர் ஒருவர் மரணமடைந்தால் அவர் சார்பாக பெறும் இழப்பீட்டுத் தொகை அவரைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதுடன், மொத்த தொகையில் பாதியை மனைவிக்கும், மற்ற பாதியை குடும்பத்தின் இளவயது குழந்தைகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். இதுபற்றி காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 03 சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

*அட்டவணை 02 : தீவர ரெகும் காப்புறுதி திட்டத்தில் அடங்கியுள்ள விபரம்.*

| அடங்கிய விபரம். | காப்பீட்டுத் தொகை (ரூபா) | | |
|---|---|---|---|
| 01. **தனிநபர் திடீர் விபத்து காப்புறுதி** | **மாற்று** 01 | **மாற்று** 02 | **மாற்று** 03 |
| திடீர் விபத்து காப்புறுதி | 1,200,000 | 1,500,000 | 2,000,000 |
| நிரந்தர முழு செயலற்ற தன்மை | 1,200,000 | 1,500,000 | 2,000,000 |
| நிரந்தர பாதி செயலற்ற தன்மை | 600,000 | 750,000 | 1,000,000 |
| **02. காணாமற் போதல்** | | | |
| மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் திடீர் விபத்தின் காரணமாக மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படல். பிரதிபலன் வழங்குவது காணாமற் போய் 05 மாதங்களின் பின் ஆரம்பிக்கப்படும். | மாதத்துக்கு ரூபா 7,500 வீதம் 12 மாதங்கள் வரை | மாதத்துக்கு ரூபா 7,500 வீதம் 12 மாதங்கள் வரை | மாதத்துக்கு ரூபா 7,500 வீதம் 12 மாதங்கள் வரை |
| வருடத்துக்கு மேல் காணாமற் போயிருப்பின் காப்புறுதித் தொகையில் மேற்குறித்த இழப்பீட்டுத் தொகை குறைக்கப்பட்ட பின் மீதித் தொகை வழங்கப்படும். | 1,200,000 | 1,500,000 | 2,000,000 |
| 03. **மருத்துவமனை கொடுப்பனவு** திடீர் விபத்து அல்லது சுகயீனத்துக்காக மருத்துவனையில் சேரும் மீனவ குடும்பங்களுக்கு வருடத்துக்கு அதிக பட்சம் 14 நாட்களுக்கு உரித்து கொடுப்பனவு | நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் அதிக பட்சமாக 14 நாட்களுக்கு | நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் அதிக பட்சமாக 14 நாட்களுக்கு | நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் அதிக பட்சமாக 14 நாட்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| கிடைக்கும்.<br><br>மீனவர் மற்றும் துணைவி 18 வயது முதல் 65 வரை – விவாகமாகாத, தொழிலற்ற சிறுவர் - 21 வயது வரை | | | |
| 04. **கல்விச் செலவுக்கான கொடுப்பனவு**<br>பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக அதிக பட்சம் இரண்டு பிள்ளைகளுக்கு மாதத்துக்கு ரூபா 1,000 வீதம் வழங்கப்படும். | 1,000 | 1,000 | 1,000 |
| 05.**இறுதிச் சடங்கு அனுகூலம்**<br>இயற்கை மரணத்துக்கு மட்டும் வழங்கப்படும் | 200,000 | 200,000 | 200,000 |
| **06.விமான பயணச்சீட்டு அடங்கலாக** –<br>வேறு நாடுகளுக்கு வழிதவறிப்போன/ கைது செய்யப்படும்போது | 40,000 | 40,000 | 40,000 |

**2.2.2 இயற்கை விபத்துக்கு இழப்பீடு வழங்கல்**

இந்த வேலைத் திட்டம், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சும் இணைந்து நேரடி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. இதற்காக பயனாளிகளிடமிருந்து கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது. இதன் கீழ் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்போது இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழக்கும் மீனவர்களுக்கு அவரை அண்டிவாழ்பவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படும். 2024ஆம் ஆண்டு ஜனவரி 01 தொடக்கம் ஓகஸ்து 31 வரை பயனாளிகளின் இரண்டு குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இங்கு இயற்கை பேரிடரினால் மரணம் நிகழ்ந்தது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்கு பேரிடர் சம்பவ அறிக்கை ஒன்று வழங்குவது கட்டயமாகும்.

**2.2.3 தியவர திரிய கடன் திட்டம்.**

நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக கடற்றொழிலை அபிவிருத்தி செய்து சிறந்த தரமான மீன்களை வழங்கும் நோக்குடன் கடற்றொழில் படகுகளை மேம்படுத்தல் மற்றும் மீனவ மக்களுக்கு நிவாரண திட்டங்களுக்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் இலங்கை வங்கியுடன் இணைந்து தியவர திரிய எனும் குறைந்த வட்டி திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

இதன்கீழ் பயனாளி ஒருவருக்கு ரூபா 15 மில்லியன் உச்ச அளவின் கீழ் கடன் வழங்கப்பட்டதுடன் வட்டி வீதம் கீழே தரப்படுகிறது.

- கடன் தொகை ரூபா 2 மில்லியனுக்கு குறைவாக இருப்பின் கடன் பெறுனரிடமிருந்து அறவிடப்படும் வட்டி வீதம் 5%
- கடன் தொகை ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்டு இருப்பின் கடன் பெறுனரிடமிருந்து அறவிடப்படும் வட்டி வீதம் 7%.
- ஒரு பயனாளிக்கு அரசின் மூலம் 4% வட்டி மானியமாக இந்த கடன் திட்டத்துக்கு வழங்கப்படும்
- கடற்றொழில் படகு மேம்படுத்த, 55 அடிக்கு மேற்பட்ட கடற்றொழில் படகு உற்பத்தி, நவீன தொழில்நுட்பத்தை (RSW, CSW) மேம்படுத்தல் செவுள்வலை தொழில்முறை மற்றும் விஞ்ச் பொருத்துவதற்கு கடன் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது..
- தியவர திரிய முதற் (I)) கட்டத்தின் கீழ் 755 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகை ரூபா 1 பில்லியன் வழங்கப்பட்டுள்ளதுடன், தியவர திரிய இரண்டாவது கட்டத்தின் (II)) கீழ் 1017 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா 1.8 பில்லியன் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கடற்றொழில், நீரியல் திணைக்களத்தின் மூலம் 4% வட்டித் தவணைத் தொகை இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அது 2031 வரை கொடுப்பனவு வழங்கப்படும்.

### 2.2.4 தியவர கெகுளு சிறுவர் சேமிப்பு கணக்கு

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் முடிவுக்கு அமைய மீன்பிடித் தொழில் மிகவும் சவாலான, ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழில்களில் ஒன்றாக பெயரிடப்பட்டுள்ளது. இந்நாட்டின் மீன்பிடித் தொழிலைப் பொறுத்த வரையில் நன்னீர் மீன்பிடித் துறையைவிட உவர்நீர் துறையில் ஆபத்து அதிகம். பெரும்பாலான மீனவ குடும்பங்களின் பொருளாதாரம் முழுக்க முழுக்க குடும்பத் தலைவரான மீனவர் ஈட்டும் வருமானத்திலேயே தங்கியுள்ளது. அக்குடும்பத்தின் போசாக்கு, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை மீனவரின் தனியான வருமானத்தையே சார்ந்துள்ளது. மீனவருக்கு ஏற்படும் விபத்துக்களால் குடும்பத்தின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைவதுடன், மீனவ பிள்ளைகளின் கல்வியும் முடங்கிப் போவதையே பிரதானமாகக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கமைய மீனவ குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இளைஞர்களை மீன்பிடித் தொழிலின்பால் ஈர்க்கவும், மீனவர்கள் தமது குடும்பங்களின் எதிர்காலத்துக்காக முதலீடு/ சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மற்றும் சிக்கனத்தை மேம்படுத்தும் ஏற்படுத்துவதற்காக எமது திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய சிறுவர்களுக்கு மிகவும் விரிவன பாதுகாப்பை வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சின் கோரிக்கையின் பேரில் இலங்கை வங்கியினால் மீனவ பிள்ளைகளுக்கான விசேட தியவர கெகுளு சிறுவர் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




*படம் 02 : தியவர கெகுளு" எனும் சிறுவர் சேமிப்பு கணக்கு*

## 2.3 2024ஆம் ஆண்டில் கடற்றொழில், நீரியல் திணைக்கள அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களும் அதன் முன்னேற்றமும்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குவதற்கு ரூபா 800 மில்லியன் மீண்டுவரும் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபா 91,270,456.67 ஒதுக்கீடு திசம்பர் மாத இறுதியில் மீனவ மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடாக

### 2.3.1 எரிபொருள் ரீதியாக மண்ணெண்னையைப் பயன்படுத்தும் வெளியணை இயந்திரத்துடனான சிறிய படகு (OFRP) மற்றும் பாரம்பரிய இயந்திரப் படகு (ஆவுசுடீ)இ மீன்பிடிப் படகுகளுக்கு சீனக் குடியரசின் உதவியின் கீழ் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான வேலைத்திட்டம் - 2023 - 2024[OFRP (Out board fiber Reinforced Plastic Boat), MTRB (Mechanized Traditional Boat)]

சீனக் குடியரசின் மூலம் இலங்கையில் மீனவ சமூத்தின் பயன்பாட்டுக்கு உதவியாக வழங்கப்பட்ட எரிபொருள் இப்படகின் உரிமையாளர்களுக்கு இலவசமாக வழங்கும் வேலைத் திட்டம் 2023.05.23ஆந் திகதி பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தில் கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்த, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ பியல் நிஷாந்த த சில்வா

மற்றும் சீனக் குடியரசின் இலங்கைத் தூதுவர் கௌரவ கீ ஷென்ஹொங் (Qi Zhenhong) ஆகியோர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

சீனக் குடியரசின் மூலம் இலங்கையில் மீனவ சமூகத்தின் பயன்பாட்டுக்கான உதவியாக வழங்கப்பட்ட 3.79 மில்லியன் லிற்றர் டீசலுக்குப் பதிலாக ம/ப பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினால் சிறு தொழில் முறையிலான மீனவர்களின் நுகர்வுக்காக மண்ணெண்ணெய் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அப்போது நிலவிய விலைக்கு அமைய 4.32 மில்லியன் லிற்றர் மண்ணெண்ணெய் விடுவிப்பதற்கு வாய்ப்புள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த எரிபொருள் வழங்கும் திட்டத்தை இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்வதுடன் முதற் கட்டமாக 75 லிற்றரும் இரண்டாம் கட்டமாக 78 லிற்றர் வீதம் மண்ணெண்ணெய் இரண்டு கட்டங்களாக இறுதியில் ஒரு படகுக்கு 153 லிற்றர் வீதம் மண்ணெண்ணெய வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நாடு முழுவதிலும் உள்ள OFRP மற்றும் MTRB படகுகளுக்கு இந்த உதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, தங்காலை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய 15 மாவட்டங்களில் தற்போது செயற்படும் 25,564 மீன்பிடிப் படகுகளாக அடையாளம் காணப்பட்ட அப்படகுகளுக்கு இந்த உதவி வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதற் கட்டத்தின் கீழ் இந்த எரிபொருள் வழங்கும் நடவடிக்கை 96 எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், ஒரு படகுக்கு 75 லிற்றர் வீதம் OFRP மற்றும் MTRB 24,340 படகுகளுக்கு 1,825,500 லிற்றர் மண்ணெண்ணெய் வழங்கும் நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளது.

இரண்டாம் கட்ட பணிக்கு தற்போது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கமைய முதற் கட்டத்தின் கீழ் எரிபொருள் வழங்கும் 96 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் வழங்கப்பட்டதுடன், ஒரு படகுக்கு 75 லிற்றர் வீதம் OFRP மற்றும் MTRB 24,340 படகுகளுக்கு 1,825,500 லிற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டத்தின் கீழ் எரிபொருள் வழங்கும் 97 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் வழங்கப்பட்டதுடன், ஒரு படகுக்கு 78 லிற்றர் வீதம் OFRP மற்றும் MTRB 24,024 படகுகளுக்கு 1,873,872 லிற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.













*அட்டவணை 03 : முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டது*

| மாவட்டம் | முதற் கட்டம் | | இரண்டாம் கட்டம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட படகுகள் எண்ணிக்கை | 2023.07.28 ஆந் திகதி வரை மண்ணெண்ணெய் வழங்கப்பட்ட படகுகள் மொத்த எண்ணிக் | மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை | | | 2024.03.05ஆந் திகதி வரை மண்ணெண்ணெய் வழங்கப்பட்ட படகுகளின் மொத்த எண்ணிக் | | | | | |
| | | | 78 (L) | 153 (L) | மொத்த படகுகள் எண்ணிக்கை (அனுமதிக்கப்பட்ட) | இரண்டாம் கட்டத்தில் மட்டும் (படகு) | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் (78L) | முதற் கட்டத்தில் மட்டும் (படகு | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் (153L) | மொத்த படகுகளின் எண்ணிக்கை (வழங்கப்பட்டது | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மொத்த லிற்றர் |
| மட்டக்களப்பு | 1796 | 1725 | 1727 | 124 | 1851 | 1711 | 133458 | 111 | 16983 | 1822 | 150441 |
| கொழும்பு | 364 | 291 | 291 | 114 | 405 | 287 | 22386 | 112 | 17136 | 399 | 39522 |
| சிலாபம் | 1669 | 1430 | 1428 | 449 | 1877 | 1391 | 108498 | 395 | 60435 | 1786 | 168933 |
| காலி | 702 | 691 | 691 | 110 | 801 | 678 | 52884 | 105 | 16065 | 783 | 68949 |
| யாழ்ப்பாணம் | 5478 | 5282 | 5283 | 642 | 5925 | 5271 | 411138 | 618 | 94554 | 5889 | 505692 |
| கிளிநொச்சி | 1045 | 1021 | 1020 | 140 | 1160 | 1018 | 79404 | 139 | 21267 | 1157 | 100671 |
| களுத்துறை | 418 | 412 | 412 | 41 | 453 | 411 | 32058 | 39 | 5967 | 450 | 38025 |
| கல்முனை | 1000 | 973 | 973 | 155 | 1128 | 968 | 75504 | 146 | 22338 | 1114 | 97842 |
| மன்னார் | 2431 | 2309 | 2310 | 714 | 3024 | 2254 | 175812 | 634 | 97002 | 2888 | 272814 |
| மாத்தறை | 1015 | 982 | 982 | 76 | 1058 | 963 | 75114 | 70 | 10710 | 1033 | 85824 |
| தங்காலை | 966 | 946 | 946 | 101 | 1047 | 939 | 73242 | 99 | 15147 | 1038 | 88389 |
| திரு.மலை | 3545 | 3537 | 3542 | 380 | 3922 | 3535 | 275730 | 376 | 57528 | 3911 | 333258 |
| புத்தளம் | 2617 | 2502 | 2496 | 599 | 3095 | 2394 | 186732 | 456 | 69768 | 2850 | 256500 |
| நீர்கொழும்பு | 1405 | 1207 | 1208 | 357 | 1565 | 1181 | 92118 | 334 | 51102 | 1515 | 143220 |
| முல்லைதீவு | 1113 | 1032 | 1032 | 461 | 1493 | 1023 | 79794 | 450 | 68850 | 1473 | 148644 |
| **மொத்தம்** | **25564** | **24340** | **24341** | **4463** | **28804** | **24024** | 1873872 | **4084** | 624852 | **28108** | 2498724 |

*03 : சீனக் குடியரசின் மூலம் இலங்கைக்கு உதவியாக வழங்கப்பட்ட மண்ணென்னெய் இப்படகுகளுக்கு இலவசமாக வழங்கும் வேலைத் திட்டம்*

## 2.4 மீன்பிடித் தொழிலின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் - (கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்கான மணல் பெற்றுக் கொள்வதன் காரணமாக மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல்)

கொழும்புத் துறைமுக மேற்கு முனையத்தின் விரிவாக்கத் திட்டத்தினால் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் மேற்கு முனைய அபிவிருத்தி நிறுவனம், கடற்றொழில் அமைச்சுக்கு ரூபா 140 மில்லியன் ஒதுக்கியுள்ளது. இத்தொகை இந்த செயற்றிட்டத்தின் மூலம் அதிக பாதிப்புக்குள்ளான கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை நீர்கொழும்பு மாவட்டத்தில் சிறு தொழில் முறையிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் 25 மீனவர்களுக்கு தெப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூபா 03 மில்லியன் ஒதுக்குவதற்கு கடற்றொழில் அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார். இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாவது, சிறு தொழில்முறையிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்குரிய தீவர பங்களிப்பை அதிகாரிப்பதற்காகும். இந்த முயற்சியின் மூலம் அவர்களின் மீன் அறுவடையை அதிகரிப்பது, வாழ்வாதாரத்தை மேம்படுத்தப்படும். இதன் ஊடாக தேசிய மீனவ சமூகத்திருக்கு உறுதியான மறறும் வளமான எதிர்காலம் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தெப்பங்களின் உற்பத்தி சீ-நோர் அமைபபினால் (Cey-Nor Foundation) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2024.01.26ஆந் திகதி கடற்றொழில் அமைச்சின் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இத்தெப்பங்கள் வழங்கப்பட்டன.

மேலும் அடையாளம் காணப்பட்ட மற்றொரு செயற்றிட்டமான லுனாவை விரிகுடா சார்ந்த படகுத்துறை/ அலைதடுப்பு அணை மறுசீரமைக்கும் செயற்றிட்ட நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகிறது. இந்த செயற்றிட்டத்துக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள திணைக்களத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சு இத்திட்டத்துக்கு ரூபா 44,762,707.50 ஒதுக்கீடாக வழங்கியுள்ளது.இதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜூன் மாதமளில் கைழுெத்திடப்பட்டதுடன் திட்டம் தொடர்பான எதிர்கால நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் பிரதான நோக்கமாவது அலைதடுப்பு கட்டமைப்பு ஒருமைப்பாடு மற்றும் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரிப்பது மற்றும் கடல் நீர் மற்றும் புயல் காநிலை தாங்குதல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான படகுத்துறையின் பாதுகாப்பு மற்றும் அணுகலை மேம்படுத்தல்.

மேலும் இந்த ரூபா 140 மில்லியன் எஞ்சிய தொகையைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 2.5 மே மாதம் 21ஆந் திகதி MV X Press Pearl சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீயின் காரணமாக மீன்பிடித் துறைக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்க எடுக்கப்பட்ட நடைமுறைகளின் முன்னேற்றம்.

இந்தியாவின் ஹசீரா துறைமுகத்திலிருந்து 25 மெற்றிக் தொன் நைற்றிக் அமிலம், பிற இரசாயணத் திரவங்கள் பல, 278 மெ.தொன் பங்கர் ஒயில் மற்றும் 50 மெ. தொன் சமுத்திர எரிவாயு அடங்கிய 1,486 கொள்கலன் அடங்கலாக சிங்கப்பூர் கொடியுடன் MV Xpress Pearlசரக்கு கப்பல் 2021 மே மாதம் 20 ஆந் திகதி இலங்கைக் கரைக்கு 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் நங்கூரமிட்டிருந்தபோது தீப்பிடித்தது. இதன் மூலம் பிளாஸ்டிக் துண்டுகள், எண்ணெய் மற்றும் இரசாயணங்கள் கசிந்ததன் காரணமாக இலங்கை மேற்கு கரையோரத்தில் மீன்பிடித் தொழிலுக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார பாதிப்பு ஏற்பட்டது. களுத்துறையிலிருந்து நீர்கொழும்பு வரையான கரையோர பிரதேசத்தில் எண்ணெய், இரசாயணத் திரவங்கள் மற்றும் எரிந்த துகள்கள் குறிப்பாக பிளாஸ்டிக் துண்டுகளால் மாசடைந்து காணப்பட்டது. பிளாஸ்டிக் துண்டுகள், எண்ணெய் மற்றும் ஏனைய கசிவு காரணமாக கரையோர மீன்பிடித் தொழிலுக்கு மற்றும் சமுத்திர சூழல் தொகுதிக்கு அதிக எதிர்மறையான தாக்கம் உருவானது. இந்த விபத்தினால் பவளப் பாறைகள், கடல் புற்கள், மீன் வாழிடங்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த சுற்றுச் சூழல் அமைப்பும் மிகக் கடுமையாக பாதிக்கும் என நிபுணர்கள் தெரிவித்தனர்.

எனவே MV Xpress Pearl கப்பலினால் ஏற்பட்ட தாக்கம் பரந்த அளவில் உள்ளதுடன் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்த வழிவகுக்கும். இலங்கையின் சுற்றுச் சூழல், சமூக பொருளாதார மற்றும் சுகாதார துறைகளில் தற்போதைய தாக்கம், கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் பிற நிறுவனங்கள் கடற்றொழில் அமைச்சின் விடய தலைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், பாதிப்பின் தாக்கங்களைக் குறைக்கவும், மீனவர்கள் மற்றும் கடல் உணவு நுகர்வோர்களின் பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய நீர்கொழும்பு, களுத்துறை மற்றும் கொழும்பு கடற்றொழில் மாவட்டங்களில் மீன்பிடித் துறைக்கு உடனடி பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் வகையில் மீன்பிடி நடவடிக்கை தடை செய்யப்பட்டது. தற்காலிக மீன்பிடித் தடை 2021.05.21ஆந் திகதி விதிக்கப்பட்டது. அத்துடன் நாரா நிறுவனத்தின் விஞ்ஞானிகளின் பரிந்துரையின் அடிப்படையில் 2022.06.05 ஆந் திகதி வரை செயற்படுதப்பட்டது.

MV Xpress Pearlசரக்கு கப்பலின் மாசுபாடு மற்றும் சிதைவுகள் காரணமாக சுற்றுச் சூழல் மாசடைவதற்கு எதிரான முன்கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கையாக எண் மாதிரி ஆய்வுகளின் அடிப்படையில் மாசு பரவுவதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிதல். 65 கி. மீற்றர் கரையோரத்தில் 457 சதுர கிலோ மீற்றர் கடற் பகுதி தடை செய்யப்பட வேண்டுமென நாரா நிறுவனம் பரிந்துரைத்தது. வடக்கில் மஹா ஓயா ஆற்று முகத்துவாரத்திலிருந்து தெற்கில் பாணந்துறை வரை மீன்பிடிக்க தடை செய்யப்பட்டது. இப்பகுதியில் நீண்ட காலத்துக்கு மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டதால் கணிசமான எண்ணிக்கையிலான நேரடி மீனவர்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் மறைமுகமான பயனாளிகளும் பாதிப்படைந்தனர். அத்துடன் இந்த பாதிப்புக்கு உட்பட்ட தரப்பினர்களாக 23 மீனவ குழுக்கள் மற்றும் மீன்பிடித் தொழிலுடன் தொடர்புபட்ட ஏனைய 24 தொழில்களுமென அடையாளம் காணப்பட்டன.

*அட்டவணை 04 : பாதிப்புக்கு உட்பட்ட நேரடி மீனவர்கள் பற்றிய விபரம்*

| **மாவட்டம்** | **நேரடியாக பாதிப்புக்குள்ளான கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளின் எண்ணிக்கை** | **பகுதியளவிலான மீனவர்களின் எண்ணிக்கை** | **பாதிப்புக்குள்ளான கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| நீர்கெழும்பு | 13 | 11081 | IMUL - 40<br>IDAY - 60<br>OFRP - 2015<br>NTRB - 1484<br>MTRB - 02 |
| கொழும்பு | 10 | 3250 | IMUL - 11<br>IDAY - 14<br>OFRP - 446<br>NTRB - 294<br>MTR- - 01 |
| களுத்துறை | 02 | 701 | OFRP - 47<br>NTRB - 33 |

*பன்னாட் கடற்றொழில் படகு (IMUL), ஒருநாட் கடற்றொழில் படகு (1 Day), வெளியிணை இயந்திரம் இணைக்கப்பட்ட (IMUL) கடற்றொழில் படகு, பாரம்பரிய (NTRB) கடற்றொழில் படகு, இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய (MTRB) படகு*

*அட்டவணை 05 : பாதிப்புக்கு உட்பட்ட நேரடி மீனவர்கள் பற்றிய விபரம்*

| **மாவட்டம்** | **மீனவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| நீர்கொழும்பு | 3866 |
| கொழாம்பு | 851 |
| களுத்துறை | 171 |

### 2.5.1 கடற்றொழில் அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை

*அட்டவணை 06 : நேரடியாக மீனவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை*

| மாவட்டம் | வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை (ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1ஆம் கட்டம் | 2ஆம் கட்டம் | 3ஆம் கட்டம் | 4ஆம் கட்டம் | மொத்தம் |
| நீர்கொழும்பு | 206,197,500.00 | 242,825,000.00 | 551,220,000.00 | 998,237,548.00 | 1,998,480,048.00 |
| கொழும்பு | 58,942,500.00 | 74,720,500.00 | 205,233,125.00 | 288,319,656.00 | 627,215,781.00 |
| களுத்துறை | 14,170,000.00 | 16,312,500.00 | 37,285,000.00 | 72,558,360.00 | 140,325,860.00 |
| ரூபா 5,000 கொடுப்பனவாக | 67,000,000.00 | | | | 67,000,000.00 |
| வலை உபகரணம் | 2,067,515.00 | | | 4,474,410.00 | 6,541,925.00 |
| நீர்வாழின செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்பு | | 1,154,930.00 | | | 1,154,930.00 |
| **மொத்தம்** | **348,377,515.00** | **335,012,930.00** | **793,738,125.00** | **1,363,589,974.00** | **2,773,718,544.00** |

### 2.5.2 நிர்வாக செலவினத்திற்கான கொடுப்பனவு வழங்கல்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கை கடற் பரப்பில் தீப்பிடித்து கடலில் மூழ்கியதன் காரணமாக சேதங்களை கண்டறிதல், தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கு அரச நிறுவனங்கள் சில ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்தது. இதற்கு இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளரப்பு அபிவிருத்தி அதிகாரசபை, சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகிய அரச நிறுவனம் மிகப் பெரும் பங்களிப்பை வழங்கியதுடன் தற்போதும் தேவையான நடவடிக்கைக்கு தமது ஆதரவை வழங்கி வருகிறது.

இதற்கமைய, மீன்பிடி துறைக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிடல்,வாழ்வாதாரத்தை இழந்த மக்களை அடையாளம் காணல் மற்றும் இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட நிர்வாக பணிகளை மேற்கொள்வதற்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தொடர்புடைய பணிகளை முன்னெடுத்த 292 அதிகாரிகளுக்கு 2021.05.21ஆந் திகதி முதல் 2023.12.31ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 2.6 மீனவர் அடையாள அட்டை வழங்கல்

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மீனவர் அடையாள அட்டை மற்றும் படகோட்டி அனுமதிப் பத்திரம் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024 ஜனவரி 01 லிருந்து 2024 திசம்பர் 31 வரை அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்பட்ட மீனவர் அடையாள அட்டை மற்றும் படகோட்டி அனுமதிப் பத்திரம் தொடர்பான தகவல் பின்வருமாறு -

வழங்கப்பட்ட மீனவர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை - 1,528
வழங்கப்பட்ட படகோட்டி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை - 871

## 2.7 கடனீரேரி அபிவிருத்தி (அபிவிருத்திப் பிரிவு)

### 2.7.1 புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் கடனீரேரி வர்த்தமானியில் வெளியிடல்

2010 ஓகஸ்து 04ஆந் திகதி 1665/17ஆம் இலக்கத்தின் கீழ் புத்தளம் கடனீரேரி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்பட்டுள்ளது. 2013இன் 35ஆம் இலக்க திருத்தப்பட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் விதிகளுக்கு அமைய புத்தளம் கடனீரேரி சூழல் தொகுதியின் பாதுகாப்பு, அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மீண்டும் ஜி.பீ.எஸ். அளவீடுகளுடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு சட்ட பிரிவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.7.2 புத்தளம் மாவட்டத்தின் மீனவர்களுக்கு அறிவுறுத்தும் வேலைத் திட்டம் நடாத்தல்.

2024ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் கடனீரேரியில் கடனீரேரி முகாமைத்துவ குழுவின் மீனவர்களின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான 04 விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் 2024 ஏப்ரல் மாதம் 24, 25, 30 மற்றும் மே மாதம் 09 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டன.





*படம் 04 : புத்தளம் மாவட்ட மீனவர்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டம் நடாத்தப்பட்டதைக் காட்டும் புகைப்படங்கள்.*

### 2.7.3 சிலாபம் மீன்பிடிப் பிரதேசத்தில் மீனவர்களுக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம்

2024ஆம் ஆண்டில் சிலாபம் மாவட்டத்தில் சிலாபம் கடனீரேரியில் சிலாபம் கடனீரேரி முகாமைத்துவ குழுவின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பாக மீனவர்களை அறிவுறுத்தும் 04 வேலைத்திட்டங்கள் 2024 ஏப்ரல் 08, 09 மற்றும் மே மாதம் 03 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

### 2.7.4 மாத்தறை மீன்பிடிப் பிரதேசத்தில் மீனவர்களுக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம்

2024ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் கராதுவ கடனீரேரியில் கடனீரேரி முகாமைத்துவ குழுவின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பாக மீனவர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் 2024 பெப்ரவரி மாதம' 22ஆந் தேதி நடைபெற்றது.

**2.7.5 சிலாபம், கொக்கல மற்றும் கராதுவ ஆகிய கடனீரேரிகளில் கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் திட்டமிடல் வர்த்தமானி வெளியிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.**

காலி மாவட்டத்தில் கொக்கல கடனீரேரி, மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள கராதுவ கடனீரேரி மற்றும் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள புத்தளம் கடனீரேரி சூழல் தொகுதியில் சுற்றாடல் நிலையைப் பேணுவதையும், அக்கடனீரேரியைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதையும் நோக்காகக் கொண்டு இந்த மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டம் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது.

**2.7.6 புத்தளம் மீன்பிடி மாவட்டத்தில் புத்தளம் கடனீரேரியைச் சுற்றி தூண்கள் நடுவதற்கு தூண்கள் கொண்டு செல்லல்**

புத்தளம் மீன்பிடி மாவட்டத்தில் புத்தளம் கடனீரேரியைச் சுற்றி நடுவதற்கான தூண்கள் கொண்டு செல்வதற்கான கொள்வனவு நடவடிக்கை நிறைவு செய்தல் மற்றும் தற்போது தூண்களை கொண்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2.8 வடக்கு கிழக்கு மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவ குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் உதவியின் கீழ் அரிசி மானியம் வழங்கு வேலைத்திட்டம் 2024

சீனக் குடியரசின் உதவியின் கீழ் இலங்கை அரசுக்கு ரூபா 555.4 மில்லியன் பெறுமதி கொண்ட 1,630 மெற்றிக் தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இந்த அரிசி மானியம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் செயலாற்றல் உள்ள மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் குறைந்த வருமானம் மீனவர்களுக்கு வழங்கிய 2024.12.31ஆந் திகதிய முன்னேற்றம் பின்வருமாறு –

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் வீதம் 7,129 அரசி பொதிகள் முதற் கட்டத்தின் கீழ் 15,197 கிலோ கிராம் எடையுள்ள அரிசி மூடைகள் 20 கிலோ கிராம் வீதமும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 5,251 பயனாளிகளுக்கு 10 கிலோ கிராம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் வீதம் 1,174 அரிசி பொதிகள் 2,935 பயனரிகளுக்கு 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் வீதம் 1,174 அரிசி ொதிகள் 2,935 பயனாளிகளுக்கு 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் வீதம் 4,226 அரிசி பொதிகள் 8,007 பயனாளிகளுக்கு 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் எஞ்சிய 1023 அரிசி பொதிகள் (50 கிலோ கிராம் வீதம்) மன்னார் மாவட்ட செயலாளின் கோரிக்கையின் பேரில் வெள்ளப்ப பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் கொண்ட 1,500 அரிசி பொதிகள் 3,750 பயனாளிகளுக்கு 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் மேலதிகமாக கொண்டு செல்லப்பட்ட தலா 50 கிலோ கிராம் கொண்ட 1,332 அரிசி பொதிகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீண்டும் அரச கொண்டு செல்லப்பட்டு 2022 ஏப்ரலட மாதம் மக்கள் தொகை கணக்கெடுப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட Poverty Indicator 2019 அறிக்கைக்கு அமைய வறுமைக்கோட்டின் கீழ் வதியும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் கொண்ட 6,504 அரிசி பொதிகள் 16,260 பயனாளிகளுக்கு 20 கிலோ கிராம் வீதம் பகிர்ந்தளித்து நிறைவு செய்யப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் கொண்ட 7,253 லோ கிராம் அரிசி 50 கிலோ கிராம் வீதம் 5,640 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. நிறைவு செய்யப்பட்டது. திருகோணமலை மாவட்டத்துக்கு மேலதிகமாக கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் கொண்ட 1,293 அரிசி பொதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

கல்முனை மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட 50 கிராம் கொண்ட 4,772 அரிசி 50 கிலோ கிராம் வீதம் 4,288 பயனாளிகளுக்கு 10,720 கிலோ கிராம் அரிசி 20 கிலோ கிராம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு மிகுதியாக இருந்ததுடன் 50 கிலோ கிராம் வீதம் அரிசி பொதி 30 வெள்ளப் பெருக்கினால் சேதமாகியது. மேலும் அத்துடன் 50 கிலோ கிராம் வீதம் 153 அரிசி பொதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

## 2.9 வடக்கு கிழக்கு மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவ குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் உதவியின் கீழ் 500 வீட்டு உதவி வழங்கும் வேலைத்திட்டம் 2024

சீனக் குடியரசின் உதவியின் கீழ் இலங்கை அரசுக்கு ரூபா 750 மில்லியன் பெறுமதி கொண்ட தயாரிக்கப்பட்ட 500 வீடுகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கு தயாரிக்கப்பட்ட வீடுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் உள்ள செயற்பாடுடைய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த முன்னர் தயாரிக்கப்பட்ட வீடுகள் கீழ்குறிப்பிட்டப்பட்டவாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

*அட்டவணை 07 : தயாரிக்கப்பட்ட வீடுகள் பகிர்ந்தளிக்கும் சாராம்சம்*

| **மாவட்டம்** | **முன்னர் தயாரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை** | **கொண்டு செல்லப்பட்ட முன்னர் தயாரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை** | **பகிர்ந்தளிக்கப்படும் முன்னர் தயாரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 116 | 116 | இன்னும் பகிர்ந்தளிக்கப்பட வில்லை |
| கிளிநொச்சி | 64 | 64 | |
| மன்னார் | 64 | 64 | |
| முல்லைத்தீவு | 64 | 64 | |
| மட்டக்களப்பு | 64 | 64 | |
| கல்முனை | 64 | 64 | |
| திருகோணமலை | 64 | 64 | |
| **மொத்தம்** | 500 | 500 | |

திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒரு வீடு மாதிரிக்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த மாதிரி வீட்டை பயனாளிக்கு பார்வையிடுவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வீடு பெற்றுக் கொள்வதற்கான விருப்பம் கோரப்பட்டு வருகிறது. முப்படையினரால் இந்த முன் தயாரிக்கப்பட்ட நிர்மாணிப்பதற்கான சிரம பங்களிப்பை பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 64 பயனாளிகளின் பூரண விருப்பம் பெற்றப்பட்டுள்ளது. முப்படையினரால் இந்த முன் தயாரிக்கப்பட்ட நிர்மாணிப்பதற்கான சிரம பங்களிப்பை பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2.10 வடக்கு கிழக்கு மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவ குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் உதவியின் கீழ் 75,000 மீன் வலைகள் வழங்கும் வேலைத்திட்டம் 2024

சீனக் குடியரசின் உதவியின் கீழ் இலங்கை அரசுக்கு ரூபா 500 மில்லியன் பெறுமதி கொண்ட 75,000 மீன்பிடி வலைத் தொகுதிகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த மீன் வலைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் உள்ள செயற்பாடுடைய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் குறைந்த வருமானம் பெறும் மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இந்த மீன்பிடி வலைகள் கீழ்குறிப்பிட்டப்பட்டவாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

*அட்டவணை 09 : வலை மானியம் பகிரிந்தளித்த சாராம்சம்*

| | மாவட்டம் | ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள வலைகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்பட்ட வலைகளின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்க்பபட்ட வலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 3,614 | 21,684 | 2,384 |
| 2 | திருகோணமலை | 2,625 | 15,750 | 1,196 |
| 3 | மன்னார் | 2,309 | 13,854 | 1,504 |
| 4 | மட்டக்களப்பு | 1,589 | 9,534 | 1,583 |
| 5 | முல்லைத்தீவு | 583 | 3,498 | 437 |
| 6 | கல்முனை | 887 | 5,322 | 791 |
| 7 | கிளிநொச்சி | 870 | 5,220 | 622 |
| மொத்தம் | | **12,477** | **74,862** | **8,517** |

தற்போது நடைபெற்றுவரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் காரணமாக வலை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை தாமதமானதுடன், தற்போது வலை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.11 உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியின் கீழ் தட்ப வெப்ப நிலையைத் தாங்கும் படகுகள் (Climate resilient boats)வழங்கல்

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO) ஆராய்ச்சி மட்டத்தில் வடிவமைக்கப்பட்ட காலநிலை எதிர்ப்புக்குப் பொருத்தமான இரண்டு படகுகளை கடற்றொழில் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

SL 20 மற்றும் SL 23 ஆகிய மீன்பிடிப் படகுகள் 6.3 மீற்றர் மற்றும் 7 மீற்றர் நீளம் கொண்டவையாக இருப்பதுடன் இலங்கையில் கரையோர மீன்பிடி நடவடிக்கைக்குப் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. FAO/ILO/IMOதர நிலைக்கு ஏற்ப இந்த படகு மீனவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவதோடு, அடிக்கடி ஏற்படும் மற்றும் தீவிர புயற் காற்று, சூறாவளி உட்பட காலநிலை சவால்களுக்கு எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளதாவும் மற்றும் படகு கவிழ்தல் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது கால நிலையைத் தாங்கும் வகையில் படகு வடிவமைப்பு FAO மீன்பிடிப் படகு திட்ட தரவு களஞ்சியத்தின் ஊடாக இலவசமாக கிடைக்கிறது.

படகுகளின் செயற்றிறனைக் கருத்திற் கொண்டு SL 20 மற்றும் SL 23 ஆகிய மீன்பிடிப் படகுகள் தண்ணீரை அடிப்படையாகக் கொண்டு (footprint) பாரம்பரிய படகுகளைவிட மேம்படுத்தப்பட்டுள்ளது. இது பரந்த அடிப்பாகத்தை கொண்டுளது ஒரு நன்மையாகும். SL 20 மற்றும் SL 23 ஆகிய மீன்பிடிப் படகுகள் அதிகளவிலான பனிக்கட்டிகளை ஏற்றக் கூடியதாகவும், மற்றும் பணிக் குழுவினரை ஏற்றும்போது அதன் பாரத்தை தாங்கக் கூடியதாகவும், இதன் மூலம் படகின் வேகத்துக்கு இடையூறு இல்லை. SL 20 மற்றும் SL23 இன் அடிப்பகுதி V வடிவான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட V வடிவமைப்பின் நன்மை என்னவென்றால், SL 20 மற்றும் SL 23 ஆகிய சீரற்ற காலநிலையிலும் பயன்படுத்தலாம். வேகம் மற்றும் செயற்றிறனை பராமரிக்க முடியும். பாரம்பரிய மீன்பிடிப் படகுகள் ஒப்பீட்டளவில் தட்டையான அடிப்பகுதியைக் கொண்டுள்ளது. இதனால் அதிக அலை கொண்ட கடல் நிலையில் நிலைத் தன்மை குறைவான செயற்றிறனைக் கொண்டுள்ளது.



*வரை படம் 05 : ஆதாரம்* https://www.fao.org/fishery/en/news/41439

SL 20 மற்றும் SL 23 ஆகிய கட்டமைப்பு ரீதியாக வலுவானவை மற்றும் அதிக நீடித்து இருக்கக்கூடியது. முறையாக பயன்படுத்தப்பட்டு பராமரித்தால் 20 முதல் 25 ஆண்டுகள் வரை நீடித்து செயற்படும். இந்த புதிய படகு தரநிலைக்கு மாறுவதன் மூலம், இலங்கையில் மீன்பிடித் கைத்தொழிலில் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் மாசுபாட்டை கண்ணாடி இழையிலான வலுவூட்டப்பட்ட கண்ணாடி இழையின் (Fiberglass reinforced plastic -FRP) மூலம் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க முடியும்

இப்படகின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்துக்கான செலவாக சுமார் ரூபா 9 மில்லியன் நோர்வே அரசின் மூலம் FAO இன் "உறுதியான அபிவிருத்திக்கு கடற்றொழில் மற்றும் நீர்வாழின வளங்களை பொறுப்புடன் பயன்படுத்தல்" தொடர்புடைய திட்டங்களுக்காக நிதி பொறுப்பு நிதியத்துக்கு வரவு வைக்கப்படும்.

துறைசார் பரிசோதனை மேற்கொள்வதற்கு மற்றும் இந்த மேம்படுத்தப்பட்ட படகு தொடர்பாக மீனவ மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இப்படகு இரண்டும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை மாவட்டங்களின் கடற்றொழில் அலுவலகத்துக்கு உத்தியோக ரீதியாக கையளிக்கப்பட்டது. இவற்றின் பயன்பாடு தொடர்பான தரவுகள் வழக்கமாக சேகரிப்பது அத்தியாவசியமாக இருப்பதுடன் இந்த தரவு தேவைக்கேற்ப கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு மற்றும் உலக உணவு மற்றும் விவசாய அமைப்புக்கு (FAO) சமர்ப்பித்தல் வேண்டும்.

## 2.12 பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடிக் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் குறைத்து மீன்பிடிக் கைத்தொழிலை மீட்டெடுத்தல் - 2024

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் எரிபொருள் ரீதியாக டீசலைப் பயன்படுத்தும் ஒருநாட் (IDAY) மற்றும் பல்தின (IMUL) மீன்பிடிப் படிகுகள் 6,500 வரை, எரிபொருள் ரீதியாக மண்ணெண்ணையைப் பயன்படுத்தும் சிறிய படகுகள் (OFRP, MTRB 32,000க்கும் "மீன்பிடித் தொழிலின் யதாரத்தத்த நிலைக்கான உதவுத் தொகை" வழங்கப்படுகிறது.

எரிபொருள் ரீதியாக மண்ணெண்ணையைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு 15 லிற்றர் மாதத்துக்கு உச்சளவாக 25 நாட்கள் தொழிலில் ஈடுபடும் நாட்களுக்கு மட்டும் லிற்றருக்கு பா 25/- "மீன்பிடித் தொழிலின் யதாரத்தத்த நிலைக்கான உதவுத் தொகை" வழங்கப்படுவதுடன், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ள, மீன்பிடித் தொழிலில் தொடரச்சியாக ஈடுபடும் MTRB மற்றும் OFRP மீன்பிடி படகின் உரிமையாளர்களினால் கொள்முதல் செய்யும் மண்ணெண்ணைக்கு நாளொன்றுக்கு 15 லிற்றர் வீதம் உச்ச அளவில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் 25 நாட்களுக்கு மாதத்துக்கு ரூபா 9,375 தொகை மீளளிப்பு செய்யப்படும்.

எரிபொருள் ரீதியாக டீசலைப் பயன்படுத்தும் படகின் உரிமையாளர்களுக்கு அவர்களினால் கொள்முதல் செய்யப்படும் ஒரு லிற்றர் டீசலுக்கு ரூபா 25/ வீதம் பணம் பெறும் அந்த மீனவருக்கு "மீன்பிடித் தொழிலின் யதார்த்தத்த நிலைக்கான உதவுத் தொகை" சம்பந்தப்பட்ட படகின் வகை, செயற்படும் பிரதேசம் மற்றும் செயற்படும் நாட்களின் அடிப்படையில் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கமைய கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ள, மீன்பிடித் தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடும் IMUL மற்றும் IDAY மீன்பிடி படகுகளுக்கு கொள்முதல் செய்யப்படும் ஒரு லிற்றர் டீசலுக்கு ரூபா 25/ வீதம் பணம் மீளளிப்பு செய்யப்படும். எவ்வாறாயினும் ஒரு பயணத்துக்கு பயனாளி மீளளிப்பு செய்யப்படும் எரிபொருள் அளவுக்கு அந்த படகின் எரிபொருள் தொட்டியின் கொள்ளளவை விட அதிகமாக இருத்தலாகாது. மற்றும் ஒரு மாதத்துக்கு ரூபா 300,000/- பணத்தை திருப்பி பெறுதல் உச்ச அளவுக்கு உட்பட்டது.

இந்த வேலைத் திட்டம் 06 மாதங்களுக்கு மட்டும் செயற்படுத்தப்படும். இக்காலப் பகுதிக்குள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் டீசல் மற்றும் மண்ணெண்ணை விலையில் மாற்றம் ஏற்படும்போது அந்த திருத்தம் செய்யும் நாளிலிருந்து இந்த செயற்றிட்டம் சலுகையிலும் திருத்தம் செய்யப்படும். ஆதற்கமைய ஒரு லிற்றர் டீசலுக்கு 7.5% வீதமுமாக மண்ணெண்ணைக்கு 12.5% மாக கணக்கிடப்படும்.

சம்பந்தப்பட்ட "மீன்பிடித் தொழிலின் யதார்த்தத்த நிலைக்கான உதவுத் தொகை" 1980இன் மீன்பிடிப் படகினை பதிசு செய்யும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ள, மற்றும் 2024 ஆண்டுக்கு அனுமதிப் பத்திரம் பெற்ற மீன்பிடி படகுகளுக்கு மட்டும் இநத் சலுகை வழங்கப்படும்.

பயனாளிகளுக்கு சம்பந்தப்பட்ட கொடுப்பனவு வழங்கும்போது, அவர்கள் கொள்முதல் செய்த எரிபொருள் அளவுக்கான பற்றுச் சீட்டினை சம்பந்தப்பட்ட மீன்பிடி மாவட்டத்தின் பணிப்பாளர் ஊடாக தலைமை அலுவலகத்துக்கு பணம் மீளளிப்பு செய்யும் விண்ணப்ப படிவத்துடன சமர்ப்பித்த பிண் சம்பந்தப்பட்ட கொடுப்பனவு வங்கி கணக்குக்கு தலைமை அலுவலகத்தினால் வரவிலிடப்படும்.

*அட்டவணை 09 "மீன்பிடித் தொழிலின் யதார்த்தத்த நிலைக்கான உதவுத் தொகை" வழங்கிய சுருக்கம் 2024 லிருந்து 2024.12.31 வரை*

| தொடர் இல | மாவட்டம் | கொடுப்பனவு வழங்கிய படகுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | மட்டக்களப்பு | 256 | 1,796,300.00 |
| 2 | கொழும்பு | 185 | 693,050.00 |
| 3 | சிலாபம் | 343 | 37,419,460.00 |
| 4 | காலி | 93 | 4,839,075.00 |
| 5 | யாழ்ப்பாணம் | 726 | 3,954,437.75 |
| 6 | கிளிநொச்சி | 108 | 645,375.00 |
| 7 | களுத்துறை | 232 | 8,604,388.00 |
| 8 | கல்முனை | 36 | 1,012,875.00 |
| 9 | மன்னார் | 72 | 337,500.00 |
| 10 | மாத்தறை | 553 | 24,113,000.00 |
| 11 | தங்காலை | 374 | 15,370,383.76 |
| 12 | திருகாணமலை | 635 | 4,082,326.00 |
| 13 | புத்தளம் | 179 | 3,646,250.00 |
| 14 | நீர்கொழும்பு | 141 | 7,867,197.50 |
| 15 | முல்லைத்தீவு | 0 | - |
| | **மொத்தம்** | **3,933** | **114,381,618.01** |

# 3. முகாமைத்துவ பிரிவு

## 3.1 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் நிலைபேறான முகாமைத்துவம்

கடற்றொழில் முகாமைத்துவம் என்பது கடற்றொழில் மற்றும் சமுத்திர வளங்களின் நிலைபேறாக பயன்பாடு மற்றும் பாதுகாக்கும் நோக்கைக் கொண்ட பல்துறை அணுகுமுறையாகும்.1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்புகள் மற்றும் கொள்கையின் மூலம் நிர்வகிக்கப்படுவதுடன், இதற்கு அனுமதி பத்திரம், ஒழுங்குமுறை, அமுலாக்கம், கண்காணித்தல் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் முகாமைத்துவ பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தீர்மானிக்கும் செயல் முறைகளில் தேசிய தலையீட்டை உறுதி செய்து, சமூக அடிப்படையிலான முகாமைத்துவ முயற்சிகள் மூலம் சமூகப் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. பொதுவாக, இலங்கையில் கடற்றொழில் முகாமைத்துவம் தற்பேதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் தேவைக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் சமநிலைப்படுத்துவதற்கு சமூக பொருளாதார தேவைகளை சமன் செய்து இத்துறையின் முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வது இப்பிரிவின் பொறுப்பாகும். அத்துடன் இப்பிரிவின் முக்கிள பணிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

கடற்றொழில் உள்ளீடுகள் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் கடல் மற்றும் சமுத்திர வளங்களை முமைத்துவப்படுத்தி சமூகப் பங்களிப்புடன் கடல், கடனீரேரி மற்றும் நீர்நிலைகளில் மீன் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையில் மீன்பிடித் துறையில் உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

### நோக்கம்

கடற்றொழில்உள்ளீடுகள் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் கடல் மற்றும் சமுத்திர வளங்களை முகாமைத்துவப்படுத்தி சமூகப் பங்களிப்புடன் கடல், கடனீரேரி மற்றும் நீர்நிலைகளில் மீன் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையில் மீன்பிடித் துறையில் உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

### பிரிவின் நோக்கமாகும்.

- கடற்றொழில் ஒழுங்குவிதிகள் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- மீன்பிடிப் படகுகளைப் பதிவு செய்தல்.
- மீன்பிடிப் படகுகள் உடமை மாற்றம். (பன்னாட் மீன்பிடிப் படகு)
- மீன்பிடிப் படகுகள் அடகு வைத்தல் மற்றும் படகின் அடகை மீட்டல்
- மீன்பிடிப் படகின் பதிவை இரத்து செய்தல்.
- சர்வதேச கடலில் மீன்பிடி நடவடிக்கைக்கு செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- உள்நாட்டு கடலில் மீன்பிடி நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- வெளிநாட்டு சர்வதேச கடலில் மீன்பிடி நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- அலங்கார மீன் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கடலட்டை மற்றும் சிங்கி இறால் பிடித்தல், தன்வசம் வைத்திருத்தல், கொண்டு செல்ல மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்
- சங்கு, சிப்பி ஓடுகள் மற்றும் சுறா பீலி, நக்லா, மட்டி,)ChicoreusRamosus (கடல் தாவரங்களுக்கு கொண்டு செல்ல மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- சிங்கி இறால் தன்வசம் வைத்திருத்தல், விற்பனை செய்தல், காட்சிப்படுத்தல் மற்றும் கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- செயற்கை அடிமூலக் கூறுகளில் வளர்க்கப்படும் பவளப்பாறைகள் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- மீன்பிடிப் படகோட்டிகளுக்கு படகோட்டும் அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கரைவலைப்பாட்டு துறைகள் மற்றும் உரிமையாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் கரையோரங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல்.

- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்கு பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் மீள்ஏற்றுமதிக்கு பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- புதிய மீன்பிடிப் படகினை பதிவு செய்வதற்கு இலக்கம் ஒதுக்குதல், அனுமதி வழங்கல் மற்றும் வழங்குதல்.
- வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படும் கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பான சகல செயற்றிட்ட நடவடிக்கைகள்.
- சர்வதேச கடலில் செயற்படும் மீன்பிடிப் படகுகளின் பட்டியல் தயாரித்தல், பராமரித்தல் மற்றும் சம்பந்த நிறுவனங்களுக்கு அறிக்கைப்படுத்தல்.
- வெளிநாடுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உள்நாட்டு மீனவர்களுக்கு அனுமதி வழங்கல்.
- வெளிநாடுகளுக்கு உள்நாட்டில் உற்பத்தியாகும் படகுகளை விற்றல், உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கல்.
- விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசங்களை இனம் கண்டு வெளியிடல் அது தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவ விதிமுறைகளை செயற்படுத்தல்.
- இலக்கிடப்பட்ட மீன் இனங்கள் தொடர்பாக மொத்த கணக்கெடுப்பு ஆய்வின் பெறுபேற்றுக்கு அமைய முகாமைத்துவ வழிமுறைகளை இனம் காணல் மற்றும் செயற்படுத்தல்.
- சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- சுறா மீன் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கை கண்காணிப்பு மற்றும் தேசிய செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- பொழுதுபோக்குக்காக மீன் பிடிப்பதறகு அனுமதிப் பத்திரம் வழங்கல். (Recreational fishing activity)
- ஏற்றுமதி மீன் மற்றும் மீன் உற்பத்தி பொருட்களுக்கு சுங்க அனுமதிக்கு ASYCUDA

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை உறுதியாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் முறைப்படுத்துவது கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்கள்ததின் முதன்மையான செயற்பாடக இருப்பதுடன், இதற்கு மீன்பிடிப் படகுகள், மீன்பிடி செயற்பாட்டுக்கான முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் வழங்கல்,அனுமதியற்ற,அறிக்கையிடப்படாத, முறைசாராத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2024ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டவாறு பல்வேறு மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் படகுகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளன.

*அட்டவணை 10 : 2024ஆம் ஆண்டில் 2024.12..31ஆந் திகதிக்கு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விடயங்களின் முன்னேற்றம்*

| தொ இல | செயற்பாடுகள் | எதிர்பார்க்கும் இலக்கு | 2024.12.31ஆந் திகதிக்கான முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | மீன்பிடிப் படகு பதிவு செய்தல் (புதிய) | 2,000 | 2,895 |
| 2 | ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல். | 1,020 | 1,443 |
| 3 | படகோட்டி அனுமதிப் பத்திரம் வழங்கல். . | 500 | 940 |
| 4 | அலங்கார மீன் இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 25 | 42 |
| 5 | அலங்கார மீன் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 30 | 43 |
| 6 | அலங்கார மீன் மீள்ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 15 | 32 |
| 7 | முள்செறிந்த சிங்கி இறாலுக்கு இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல். | 80 | 58 |
| 8 | முள்செறிந்த சிங்கி இறால் தம்வசம் வைத்திருப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 10 | 10 |

| | | | |
|---|---|---|---|
| 9 | சங்கு தம்வசம் வைத்திருப்பதற்கு, கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 80 | 82 |
| 10 | சங்கு ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 40 | 48 |
| 11 | கடலட்டை பிடிப்பதற்கு, சேகரிப்பதற்கு மீள் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 200 | 193 |
| 12 | கடலட்டை ஏற்றுமதி, இறக்குமதி மீள் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 150 | 134 |
| 13 | சிப்பி சேகரித்தல், கொண்டு செல்லல் மற்றும் அலங்காரப் பொருட்கள் செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 20 | 32 |
| 14 | செயற்கை அடிமூலக் கூறுகளில் வளர்க்கப்படும் பவளப் பாறைகள் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல். | 4 | 0 |
| 15 | மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பதிவு செய்தல். | 200 | 152 |
| 16 | மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு பதிவு செய்தல். | 150 | 196 |
| 17 | மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை மீள்ஏற்றுமதி செய்வதற்கு பதிவு செய்தல். | 13 | 10 |
| 18 | புதிய மீன்பிடிப் படகினை பதிவு செய்வதற்கு இலக்கம் ஒதுக்குதல், அனுமதி வழங்கல் மற்றும் வழங்குதல். | IMUL-100 | 66 |
| | | OFRP-1000 | 1,704 |
| | | MTRB-250 | 191 |
| | | NTRB-500 | 400 |
| | | NBSB--0 | 0 |
| 19 | நக்லா (Operculum of ***Chicoreusramosus***) ஏற்றுமதி செய்வதற்கு பதிவு செய்தல். | 15 | 09 |
| 20 | நக்லா (Operculum of ***Chicoreusramosus***) | 15 | 14 |
| 21 | ***Chicoreusramosus***மாமிசம் வசம் வைத்திருத்தல், விற்றல், காட்சிப்படுத்தல், கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கல். | 30 | 25 |
| 22 | ***Chicoreusramosus*** மாமிசம் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல் | 15 | 19 |
| 23 | உயிரற்ற கடல் சிப்பிகளின் ஓடுகளை தன்வசம் வைத்திருத்தல், விற்றல், காட்சிப்படுத்தல், கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல். | 20 | 7 |
| 24 | கடல் தாவரங்கள் கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கல். | 8 | 20 |
| 25 | லொக் புக் வழங்குதல் | 1,000 | 1,400 |

### 3.2 கரைவலை துறைகளின் GPS அளவீட்டின் வரைபடம் எடுத்தல் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல்

பாரம்பரிய மீன்பிடித் தொழிலொன்றாக இலங்கையில் கடலோரப் பகுதிகளில் செயற்படுத்தப்படும் கரைவலை செயற்படுத்தப்பட்டு வந்த பல இடங்கள் தற்போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கடலரிப்பின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களினால் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு செய்மதி அளவீட்டு (GPS) முறையில் நில அளவீட்டு திணைக்களத்துடன் இணைந்து வரைபடம் தயாரிக்கப்பட்டது.





*படம் 05 : நில அளவீட்டு திணைக்களத்துடன் இணைந்து GPS வரைபடம் தயாரித்தல்*

### 3.3 கடற்றொழில் ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வு





*ர்பான விழிப்புர்ணவு வேலைத்திட்டம் நடாத்தல்*

# 4. தரக்கட்டுப்பாட்டு பிரிவு

சர்வதேச தரத்துக்கு அமைவாக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இலங்கை தனது மீன் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கு கடுமையான தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. மீன் மற்றும் மீன் பொருட்களின் ஏற்றுமதி ஒழுங்குவிதிகளின் கீழ் உள்ள விதிமுறைகளின் மூலம் நிர்வகிக்கப்படும் இந்த செயல் முறையை உறுதி செய்தல், பரிசோதனை செய்தல், சுகாதார மற்றும் சுகாதாரவேற்பாட்டு நடைமுறைகளும் அடங்கும். தேடிப் பார்க்கும் தொகுதி மற்றும் ஆய்வுகூட பரிசோதனை தர சான்று மேலும் மேம்படுத்துவதுடன் திறனை கட்டியெழுப்புவதன் மூலம் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்து போன்ற செயற்பாடுகளம் மேற்கொள்ளப்படுகிறது. சந்தை அணுகலின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் உற்பத்தியை தொடர்ந்து பேணுவது, உலக சந்தையில் உயர் தரமுடைய கடல் உணவுகளின் நம்பகத் தன்மையை ஆதாரமாக தனது நற் பெயரை தக்க வைத்துக் கொள்வதை இலங்கை தனது நோக்காகக் கொண்டுள்ளது. இந்த திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருப்பதுடன், இப்பிரிவின் முக்கிய செயற்பாடுகள் பற்றி விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

.

2014ஆம் ஆண்டிலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சரவதேச விமான நிலையத்தில் தரக் கட்டுப்பாட்டு உபஅலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்த அலுவலகம் வாரத்தில் ஏழு நாட்களும் உள்ளுர் ஏற்றுமதியாளர்களுக்கு இரவும் பகலும் சேவை வழங்கும் (24 X 7) அலுவலகமாக இயங்கி வருகிறது.

இதற்கு மேலதிகமாக தற்போது உள்ளுர் நுகர்வோர்களுக்கு சுகாதார பாதுகாப்பான மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை வழங்குவது குறித்து எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 4.1 இலக்கு

ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும்மீன் பொருட்கள் தொடர்பாக ஐரோப்பிய ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த பிரிவு 1999.01.04ஆந் திகதி முதல் செயற்பட்டு வருவதுடன், இதுவரை இலங்கையினால் மீன் மற்றும் மீன் உற்பத்திப்

பொருட்களை ஏற்றுமதி செய்யும் அனைதது நாடுகளின் வழக்கமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பொறுப்புகளை முன்னெடுத்து வருகிறது.

## 4.2 நோக்கம்

1998இல் பிரகடனப்படுத்தப்பட்ட மீன் உற்பத்தி (ஏற்றுமதி) ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதன் கீழ் இலங்கையினால் மனித நுகர்வுக்கு சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் பொருட்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துவதே இப்பிரிவின் பிரதான நோக்கமாகும்.

## 4.3 பணிகள்

மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்கு தரக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் கீழ்குறிப்பிடப்படும் செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

- மீன் பதனிடும் நிறுவனங்கள், ஆய்வு கூடங்களுக்கு அனுமதி வழங்கல் மற்றும் அது தொடர்பான அனுமதிப் பத்திரம் வழங்கல்
- மீன் பதனிடும் நிறுவனங்களுக்கு ஏற்றுமதிக்காக மீன் தயாரிப்பதற்கு அதிகாரம் வழங்கல்.
- HACCPஅமுறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் அந்த வழிமுறைகளுக்கு அனுமதி வழங்கல்.
- மீன் பதனிடும் நிறுவனங்களை தொடர்ந்து பரிசோதனைக்கு உற்படுத்தல் மற்றும் குறைபாடுகளை சரி செய்வதற்கு வழிகாட்டுதல்கள் மற்றும் தேவையான நடவடிக்கை.
- மீன் தரையிறக்கும் இடங்களை பரிசோதித்தல் மற்றும் மீன் உற்பத்திகளின் குணப் பண்புகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- ஏற்றுமதிக்காக மீன் வழங்கும் மீன்பிடி படகுகளை பரிசோதித்தல் மற்றும்மீன் உற்பத்திகளின் குணப் பண்புகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- மீன் தரையிறக்கும் இடங்கள் முதல் பதனிடும் இடத்துக்கு மீன் கொண்டு செல்வதை பரிசோதித்தல் மீன் உற்பத்திகளின் குணப் பண்புகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு தேவைாயன நடவடிக்கை எடுத்தல்.
- ஏற்றுமதிக்காக ஒவ்வொரு மீன் தொகை/ மீன் உற்பத்தி தொகைக்கு சுகாதார சான்றிதழ் வழங்கல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பற்ற நிலைமைகள் குறித்து உறுதிப்படுத்தும் பரிசோதனை அறிக்கை (Test Report)வழங்கும் பரிசோதனைகூடங்களுக்கு அனுமதி வழங்கல்.
- சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்து பெற்ற மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட பரிசோதனை கூடங்களிலிருந்து பரசேதனைக்கு உட்படுத்துவதற்கு அதிகாரபூர்வ பரிசேதனை வேலைத் திட்டத்தை செயற்படுத்தல்.
- மீன் பதப்படுத்தும் இடங்கள் படகு மற்றும் மீன் தரையிறக்கும் இடங்கள் ஒழுங்குவிதிகளில் அடங்கிய நிபந்தனைகளுக்கு அமையாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல்
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பற்ற நிலைமைகள் குறித்து இறக்குமதி செய்யப்படும் நாடுகளிடமிருந்து முறைப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் குணப்பண்புகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதிக்கு மீன் வழங்கும் மீன்பிடி படகுகளின் பணிக் குழுவினர்களுக்கு மீன்கள் கையாளல் பற்றி அறிவூட்டும் வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் செயற்படுத்தல்.
- நீர்வாழின வளர்ப்பு உற்பத்திகளுக்கு (மீன், இறால்) பயன்படும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பல வகை மற்றும் இரசாயணத் திரவங்களைக் கட்டுப்படுத்த நீர் வாழின வளர்ப்பு அவசிய கண்காணிப்பு வேலைத் திட்டம் செயற்படுத்தல் மற்றும் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் அறிவுறுத்தும் வேலைத் திட்டம் ஏற்படுத்தல்.
- மீன் உற்பத்தி முறையாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு மீன் பிடிக்கும் சான்றிதழ் வழங்கல் .
- வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரக்கட்டுப்பாட்டு உப அலுவலகத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கான நிகழ்நிலை முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கல்.
- விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத சந்தர்ப்பத்தில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளினால் முன்வைக்கும் முறைப்பாடுகள்மீது விசாரண நடாத்துதல்.

## 4.4 கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட மீன் பதனிடும் நிறுவனம்.

| | | |
|---|---|---|
| ஐரோப்பிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | - | 50 |
| ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு அல்லாத நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | - | 23 |
| மீன் பதனிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | - | 21 |
| | - | |

### 4.5 செயற்பாடுகளின் ஆய்வு மற்றும் கண்காணித்தல் மற்றும் உத்தியோகபூர்வ மாதிரி வேலைத் திட்டத்தை செயற்படுத்தல்

இதன் கீழ் மீன் உற்பத்திகளை பதனிடும் நிறுவனங்கள், இறால் பண்ணைகள், ஆய்வுகூடங்கள், மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்றுமதிக்கான மூலப் பொருட்கள் வழங்கும் படகுகளை பரிசோதனை செய்தல் மற்றும் மீன் உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ மாதிரித் திட்டத்தை செயற்படுத்துவதும் இதில் அடங்கும்.

| | | |
|---|---|---|
| நுண்ணுயிரியல் பரிசோதனை | : | தண்ணீர், ஐஸ் மற்றும் மீன்களுக்கு |
| வேதியியல் ஆய்வுகள் | : | மீன்களின் ஹிஸ்டமின் அளவு/ வெற்று உலோகம்/ மாற்று இரசாயணம் |

### 4.6 செய்கை வேதியல் எச்சங்களைக் கண்காணிப்பதற்கு தேசிய திட்டத்தை செயற்படுத்தல்

இதன் கீழ் 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நீர் வாழின வளர்ப்புக்குத் தேவையான கண்காணிப்பு ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதற்கான கண்காணிப்பு. மாதிரி பெற்றுக் கொள்ளல், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும் இதில் அடங்கும். இறால் சிணைப்படுத்தும் நிலையங்களிலிருந்து மாதிரிகள் பெறும் இந்த வேலைத் திட்டமும் செயற்படுத்தப்படுகிறது.

மாதிரிகளின் பரிசோதனை செய்யப்படும் அளவுருக்கள் -

- நுண்ணுயிர் எதிர்ப்பிகள்
- மாசுபடுத்திகள் (பாரோமெட்டல் காபமேட், பயிரித்றோயிட்)
- பூச்சிகொல்லி எச்சங்கள்.
- நிறமிகள் (மலாகிட்கிறீன், பிரிளியன்ட் கிறீன், கிறிஸ்டல் வயலட்)

### 4.7 அறிவூட்டும் வேலைத் திட்டங்களை நடாத்துதல்

இதன் கீழ் மீன்களின் மற்றும் மீன் உற்பததிகளின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு குறித்து சம்பந்தபபட்ட தரப்பினர்களுக்கு அறிவூட்டும் வேலைத் திட்டங்களை முக்கியமாக நடாத்துதல்.

*அட்டவணை 11 : 2024ஆம் ஆண்டில் 2024.12..31ஆந் திகதிக்கான மீன் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கையின் முன்னேற்றம்.*

| விடயம் | வருடாந்த இலக்கு | முன்னேற்2 2024.12.31 திகதிக்கு | வீதம் % |
|---|---|---|---|
| *உள்ளுர் சந்தையில் மீன் உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பின் தரத்தை உறுதி செய்தல்* | | | |
| 01 துறைமுக பரிசோதனை மேற்கொள்ளல் | 10 | 1 | 10% |
| 02 மீன் ஏலவிற்பனை சந்தை மற்றும் பொது மீன் விற்பனை சந்தைகளை பரிசோதனை செய்தல் | 4 | 1 | 25% |
| 03. விழிப்புணர்வு வேலைத் திட்டம் நடாத்தல் (மீனவர்கள்/ விற்பனையாளர்) | 10 | 5 | 50% |
| *ஏற்றுமதி மீன் உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பின் தரத்தை உறுதி செய்தல்* | | | |
| 01. உத்தியோகபூர்வ மாதிரி பெற்றுக் கொள்ளல் - நிறுவனம் | 300 | 60 | 20% |
| 02. விழிப்புணர்வு வேலைத் திட்டம் (தரக் கட்டுப்பாட்டு அதிகாரிகள்/தொடர்பபட்ட துறைசார் அதிகாரிகள் | 10 | 2 | 20% |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. விழிப்புணர்வு வேலைத் திட்டம் நீர்வாழின செய்கையாளர்கள்/ பதனிடுவோர்கள், நிறுவன அதிகாரிகள்/ மீனவர்கள்) | | 10 | 2 | 20% |
| 04. துறைமுகங்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பரிசோதனை. | | 20 | 1 | 5% |
| 05. மீன்பிடிப் படகுகளின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலை மற்றும் சிறந்த கையாளும் முறை தொடர்பான பரிசோதனை . | | 85 | 15 | 12.75 % |
| 06. ஏற்றுமதிக்கு மீன் பதப்படுத்தும் நிறுவனங்களை பரிசோதனை செய்தல் | மேற்கொள்ள எதிர்பார்க்கும் நிறுவனங்களின் பரிசோதனை எண்ணிக்கை | 120 | 63 | 52.5 % |
| | மேற்கொள்ள எதிர்பார்க்கும் பொதியிடல்/ சிங்கி இறால் சேகரிக்கும் நிறுவனங்களின் பரிசோதனை எண்ணிக்கை | 15 | 3 | 20% |
| 07. ஆய்வுகூட பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளல். | | 5 | 1 | 20% |
| 08. இனப்பெருக்க நிலையங்கள், நன்னீர் நீர்வாழின செய்கை பணணைகள் மற்றும் உவர்நீர், கடல்வாழின செய்கை நிலம் தொடர்பான பரிசோதனை | | 40 | 15 | 37.5 % |
| 09. நீர்வாழின செய்கை இரசாயண எச்சங்களின் ஆய்வு சோதனை | | ஐரோப்பிய ஆணைகுழு மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் மூலம் பரிந்துரைத்த திட்டத்துக்கு அமைவாக வருடாந்தம் தீர்மானித்தல் | 56 | |
| 10. தரையிறக்கும்போது/ தயாரிக்கும்போது உணர்திறன் தனியான பரிசோதனை | | 70 | 15 | 21.5 % |
| 11. பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் மூலம் நிறுவப்பட்ட புள்ளிவிபர தரவு நிரல்களை செயற்படுத்தல். | | சந்தர்ப்பத்துக்கு ஏற்ப | 1 | - |
| 12. ஏற்றுமதியாகும் மீன் உற்பத்திகளுக்கு உத்தியோகபூர்வ மாதிரி வேலைத் திட்டத்துக்கு அமைய மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியின் பெறுபேறுகளுக்கு அமைய பிரமாணங்களுக்கு அமையாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல். | | முடிவுகளின் அளவுருக்கவின் நிலையான மதிப்பை விட மீறி இருக்கும் சந்தர்ப்பம் | - | - |
| 13. இறக்குமதி செய்யும் நாடுகளின் (Importing countries) மூலம் மீன் உற்பத்திகளின் தகுதியின்மை பற்றி அறிவித்தல். | | சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து வரும் தகுதி இன்மை பற்றி அறிவிக்கும் எண்ணிக்கை பொறுத்து | 10 | - |
| 14. ஏற்றுமதிக்காக மீன் உற்பத்தி தயாரிக்கும் நிறுவனங்களை அனுமதித்தல். | புதிய மீன் உற்பத்தி தயாரிக்கும் நிறுவனங்களை அனுமதித்தல். | 63 | 4 | - |
| | மீன் உற்பத்தி தயாரிக்கும் நிறுவனங்களை முறையாகப் பதிவு செய்தல் | | 44 | - |
| 15. மீன் பிடிப்பதற்கு சான்றிதழ் வழங்கல். . | | 17,000 | 10,878 | 64% |
| 16. நிறுவனங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கல் (ஐரோப்பிய நாடுகளுக்கு) | | 8552 | | 47.5 % |

| | | | |
|---|---|---|---|
| 17. ஏற்றுமதிக்கு தரச் சான்றிதழ் வழங்கல் (ஐரோப்பிய அல்லாத நாடுகளுக்கு) | 6024 | | 60.24 % |
| 18.மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் மீன்கள் தொடர்பாக பரிசோதனை செய்தல் (BIA) | மீள் ஏற்றுமதிமீன் இறக்குமதி செய்வதற்கு அதற்காக கோரிக்கை விடுத்து அனுமதி வழங்கும் சந்தர்ப்பம் | - | - |
| 19. ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் பிற நாடுகளின் சம்பந்தப்பட்ட முறையான பொறுப்பான நிறுவனங்களுடன் (Competent Authorities) தேவையான தொடர்புகளைப் பேணுவதற்கு இறக்குமதி செய்யும் நாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல் மூலம் அல்லது வெளி நாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கலளளிருந்து தகவல் பெறுதல். | மேற்கொள் ளப்படும் அறிவித்தலு க்கு அமைவான சந்தர்ப்பம் | 30 | - |

## 4.8 ரின்மீன் தொழிலை ஒழுங்குபடுத்தல்

தற்போது இலங்கையில் பிரபல்யமடைந்துவரும் ரின்மீன் தொழில் ஒரு பெறுமதி அதிகரிக்கும் ஒரு தொழிலாக கருதப்படுவதுடன், இது தேவையை அதிகரித்துவரும் அதிக புரோட்டின் மூலம் டூனா, சாடின் மற்றும் மெக்கரல் போன்றமீன் இனங்களைப் பயன்படுத்தி நீண்ட காலம் காலந் தாழ்த்தி வைக்கக்கூடிய இலகுவாக தயாரிக்கக்கூடிய தயாரிப்பாகும். இலங்கையில் இந்த ரின் மீன் சந்தையை முழுமையாக நம்பியிருந்ததுடன், தற்போது இது உள்ளூர் தொழிலாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது ரின் மீன் உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கும் சுமார் 30 உள்ளூர் வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டு இந்த உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான முதற் கட்ட பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ரின் மீன் நிறுவனங்களினால் செலவிடப்படும் வெளிநாட்டு கையிருப்பு நம் நாட்டில் சேரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.





*படம் 08: மீன் பதனிடும் நிறுவனங்களின் பதனிடும் செயல்முறை*







## 4.9 இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனை நடவடிக்கையில் கலந்து கொள்ளல்

மீன் ஏற்றுமதிக்காக புதிய சந்தை குறித்து ஆராயப்பட்டு சர்வதேச மட்டத்தில் புதிய ஏற்றுமதி ஒப்பந்தம் நமது நாடுகளில் பதிவிறக்க நடவடிக்கை தரக் கட்டுப்பாட்டு பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும் புதிய மீன் ஏற்றுமதி ஒப்பந்தமாக சீனக் குடியரசு, அவர்களின் சந்தை, இலங்கை சகல மீன் உற்பத்திக்கு திறப்பதற்கு நிகழ்நிலை செயல்முறைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து இந்த புதிய ஏற்றுமதி வாய்ப்பினை எமது நாடுக்கு கிடைப்பதற்கு எமது பிரிவின் மூலம் சிறப்பான பணியை செய்துள்ளது.









*டம் 08 : சீனக் குடியரசின் மூலம் நிகழ்நிலையில் நடாத்தப்படும் தரக் கட்டுப்பாட்டு பகுப்பாய்வு செயல்முறை*

## 4.10 தரக்கட்டுப்பாட்டு உப அலுவலகம் - கட்டுநாயக்க விமான நிலையம்

2014 ஜனவரி 13ஆந் திகதி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த அலுவலகம் வாரத்தில் ஏழு நாட்களும் பகல் இரவு சேவையை வழங்கும் (24 X 7) அலுவலமாக மீன் மற்றும் மீன் உற்பத்தி ஏற்றுமதியாளர்களுக்கு சேவை வழங்கி வரும் நிறுவனமொன்றாக செயற்பட்டு வருகிறது.

உள்ளூர் மீன் ஏற்றுமதியாளர்களின் பலமான கோரிக்கைக்கு அமைய கட்டுநாயக்க தரக்கட்டுப்பாட்டு உப அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய தரக்கட்டுப்பாட்டு பிரிவின் உப அலுவலகம் தனது பணிகளை விரிவுபடுத்துவதற்கு 2024.01.26ஆந் திகதி வளாகத்தில் நிறுவப்பட்டது. இந்த புதிய அலுவலகத்தை திறந்து வைப்பதற்கு கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்ததன் மூலம் மீன் உற்பத்திக்கு வழங்கப்படும் சான்றிதழ் எவ்வித இடையூறுமின்றி வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் இரவு பகல் தொடர்ந்து சேவையை வழங்குவதன் ஊடாக ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்து அந்நிய செலவாணியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த அலுவலகம் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

ஆரம்பத்தில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் சட்டபூர்வ பயன்பாட்டை உறுதி செய்வதற்காக மீன்பிடி சரிபார்ப்பை மட்டும் இந்த அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது சம்பந்தப்பட்ட ஏற்றுமதி செய்யும் சகல மீன் தொகைகளுக்குத் தேவையான தரச் சான்றிதழ் மற்றும் மீன் பிடிக்கும் சான்றிதழ் அந்த அலுவலகத்தின் மூலம் வாரத்தில் ஏழு நாட்களிலும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்கியுள்ளது.

# 5. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு

## 5.1 மீனவ சமூகம், கடற்றொழில் அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினர்களின் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்பல்.

இலங்கையின் மீன்பிடித் தொழில் சட்ட விரோத, ஒழுங்குமுறையற்ற மற்றும் அறிக்கையிடப்படாத மீன்பிடி வளத்தை உறுதியாகப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கு 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துவதே ஆய்வுப் பிரிவின் முதன்மை நோக்கமாகும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச கடல்சார் சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக வளங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்கு மீன்பிடி கைத்தொழிலை உறுதியாக அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச கடல்சார் சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக வளங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்கு மீன்பிடி கைத்தொழிலை உறுதியாக அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும்.

*அட்டவணை 12 : ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு – 2024 ஜனவரி மாதத்திலிருந்து திசம்பர் வரை*

| தொ. இல | நடவடிக்கை | இலக்கு | முன்னேற்றம |
|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டத்தில் சுற்றி வளைப்பு மற்றும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக ஆய்வு மற்றும் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | எதிர்பாரத்த இலக்கை அடைய முடியவில்லை | முறையான தரவுப் பதிவு தொடர்ந்து பராமரிக்கப்படுகிறது. |
| 2 | நிர்வாகத் தடைக்கு சகல மாவட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கும் கோரிக்கை, சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்கு அமைய கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் நிர்வாகத் தடை விதிக்கும் முறையைத் தயாரித்தல். | | 37 |
| 3 | உறுதி செய்யப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல். | | 0 |
| 4 | படகு கண்காணிப்பு தொகுதியின் மூலம் அடையாளம் காணப்பட்ட சட்டத்தை மீறுவதற்கான ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளல். | | 800 |
| 5 | விசேட சுற்றி வளைப்பு | 15 | 0 |
| 6 | கடற்றொழில் படகு, துறைமுகம் மீன்பிடி உபகரணங்கள், உற்பத்தி மற்றும் மீன் இரை தயாரிக்கும் நிறுவனங்களை பரிசோதனை செய்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கை | 36 | 16 |
| | | எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை | 0 |
| 7 | தொடர்புபட்ட தரப்பினர்களுக்கு (stake holder) கடற்றொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்ட பூர்வமான மீன்பிடி உள்ளீடுகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல். | 4 | 9 |

| | | | |
|---|---|---|---|
| 8 | திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவர்களுக்கு அறிவூட்டுவதற்கு வருடாந்த வேலைத் திட்டம் தயாரித்தல். | 1 | வருடாந்த செயலமர்வ திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது |
| 9 | திணைக்கள அதிகாரிகளுக்கான செயலமர்வு திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு வேலைத் திட்டம் ஏற்படுத்தல். | 40 | 32 |
| 10 | மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மீனவர்களை விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டம் ஏற்படுத்தல். | 15 | 118 |
| 11 | திணைக்கள அதிகாரிகளை வெளி நிறுவனங்களினால் நடாத்தப்படும் பயிற்சி வேலைத் திட்டம்/ முதுகலை பட்டம்/ டிப்ளோமா பாட நெறிக்கு அனுப்புதல். | 10 | 17 |
| 12 | பல்கலைக்கழகம்,தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு கைத்தொழில் துறை பயிற்சி வழங்குவது தொடர்பாக வெளிக்கள கண்காணிப்பு மேற்கொள்ளல். | 5 | 4 |
| 13 | பயிற்சி வேலைத் திட்டம் தொடர்பான கருத்துறை மற்றும் பகுப்பாய்வு | 20 | 0 |

### 5.2. மீன்பிடிப் படகுகள், மீன்பிடி உபகரணங்கள், உற்பத்தி மற்றும் மீன்பிடி கருவிகள் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாக பரிசோதனை செய்தல்






*படம் 10 : மீன்பிடிப் படகுகள், துறைமுகங்கள் மீன்பிடி உபகரணங்கள், உற்பத்தி மற்றும் மீன்பிடி கருவிகள் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாக பரிசோதனை செய்தல்*

### 5.3. தரப்பினர்களுக்கு (stake holder)கடற்றொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்ட பூர்வமான மீன்பிடி உள்ளீடுகள் பற்றிய விழிப்புணர்வூட்டல்





*படம் 11 : கண்டி தலத்துஓயா கடற்படை முகாமில் பயிற்சி கடற்படை அதிகாரி குழுவுக்கு நடைபெற்ற வேலைத் திட்டம் - 2024.03.27/ 2024.08.27*




படம் 12 : திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு பயிற்சி வேலைத் திட்டம் மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஏற்பாடு செய்தல்




படம் 13 : மதவாச்சி, பூணாவ, ஷிக்ஸா கடற்படை முகாமில் பயிற்சி கடற்படை அதிகாரிகளுக்கு நடைபெற்ற வேலைத் திட்டம் 2024.09.09

## 5.4. மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மீனவர்களுக்கு அறிவூட்டும் செயலமர்வு




படம் 14 : சிலாபம் கடற்றொழில் மாவட்டத்தில் மீனவர்களுக்கு அறிவுறுத்தல்.




படம் 15 : நீர்கொழும்பு கடற்றொழில் மாவட்டத்தில் மீனவர்களுக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம்



*படம் 16 : பேருவளை கடற்றொழில் மாவட்டத்தில் மீனவர்களுக்கு அறிவுறுத்தல*



*படம் 17 : வெல்லமங்கர கடற்றொழில் மாவட்டத்தில் மீனவர்களுக்கு அறிவுறுத்தல்.*

# 6. தகவல் தொழில்நுட்ப பிரிவு

## 6.1 நோக்கம்

இப்பிரிவின் முக்கிய நோக்கமாவது; கடற்றொழில் வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கு தற்போதைய ஒன்லைன் முறைகளைப் பயன்படுத்தல் மற்றும் பராமரித்தல். திணைக்கள இணையதள மென்பொருளை பராமரித்தல், ஒன்லைன் தொகுதியை நடைமுறைப்படுத்தல். தொடர்புபட்ட வன்பொருளைக் கையாளுதல், விரிவான தரவு மீளாய்வு மற்றும் அறிக்கையிடல், தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான பயிற்சி போன்றவற்றில் கவனம் செலுத்தும் பிரிவாகும்.

## 6.2 பிரதான செயற்பாடுகள்

- திணைக்கள சேவையின் பங்களிப்புக்கு திணைக்கள இணையதளத்தை செயற்படுத்தல்.
- திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்தின் பராமரிப்பு மற்றும் உள்ளடக்கும் முகாமைத்துவம்.
- திணைக்கள இணையதளம் மற்றும் அடிப்படை தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சி.
- மின் - பதிவு தொகுதியின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு மின் தொகுதிகளின் கண்காணிப்பு மற்றும் பங்களித்தல்.
- டைனமிக் அறிக்கைத் தொகுதி அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
- தரவு மீளாய்வுக்கு R மொழிப் பயன்பாட்டை மேம்படுத்தல்.
- திணைக்களத்து கடின தொகுதியைப் பயன்படுத்தல்.
- திறந்த இயக்க முறைமை மற்றும் பயன்பாட்டை அறிமுகப்படுத்தல்.
- R குறியீடு தொடர்பாக 20 அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல்

- திறந்த இயக்க முறைமை மற்றும் பயன்பாட்டை அறிமுகப்படுத்தல்.
- புதிய படகு கண்காணிப்பு தொகுதிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனை 4500 பல்தின படகுகளுக்குப் பொருத்தி நிறைவு செய்தல். தலைமை அலுவலகத்தில் மற்றும் கடற்றொழில் அலுவலகங்களிலிருந்து தொடர்ந்து அதனை கண்காணிக்கும் நடவடிக்கையைத் திட்டமிடல்.

## 6.3 திணைக்களத்தின் சேவைகளை நிகழ்நிலை மென்பொருள் மூலம் செயற்படுத்தல்.







*படம் 18 : உத்தியோகபூர்வ இணையதளம்*

திணைக்கள இணையதள மென்பொருளை அபிவிருத்தி செய்து திணைக்களத்தின் செயல்முறைகளில் 30க்கும் மேற்பட்ட செயல்முறைகளை டிஜிடல் முறையாக மாற்றுவதற்கு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

மீனவர்களைப் பதிவு செய்தல், மீன்பிடி படகுகளை பதிவு செய்தல், விஞ்ஞான ரீதியிலான தரவு சேகரித்தல் போன்றவை மற்றும் இன்னும் பல நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. திணைக்கள இணையதள மென்பொருள் இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது. அன்ட்ரையிட் பயன்பாடு மற்றும ஜாவா பயன்பாடு ஆகியவை முக்கிய கூறுகளாகும். ஜாவா பயன்பாடு தற்போது திணைக்களத்தின் சேவர் (களஞ்சிய) தொகுதிக்குள் செயற்படுத்தப்படுவதுடன் http://msdfar.com ஐப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்ய முடியும். ஆன்ட்ராய்ட் ஸ்மார்ட் பயன்பாடடு ஏற்கனவே 500க்கும் மேற்பட்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளதுடன் பல பதிப்புகள் புதுப்பிப்பதற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. திணைக்கள இணையதள மென்பொருளைப் பயன்படுத்தி 42,000 மீனவர்கள், 99 வள்ளச்சாலைகள் (பழைய தரவுகள் அடங்கலாக) 7,000க்கு படகுகள், 7,300 படகோட்டிகள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 7,000க்கும் மேற்பட்ட மீன்பிடி செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. 2022ஆம் வருடத்திலிருந்து நிகழ்நிலை (ஒன்லைனில்) அனுப்பும் தொகுதியின் மூலம் 107,000 க்கும் மேற்பட்டவை நிகழ்நிலை மூலம் (ஒன்லைன்) அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயற்றபாடு 2021ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கு சிறந்த MSDFAR மென்பொருளாக தொகுதிக்கு ஒன்லைன் மென்பொருளைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்களின் தேர்வுப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 2024 அரச சேவை சிறந்த உற்பத்தி/ செயற்றிட்ட தேர்வுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றது.

## 6.4 திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம். www.fisheriesdept.gov.lk.



*வரை படம் 19உத்தியோகபூர்வ இணையதளம்*

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பாகும். திணைக்களம் இணையதளம் நாளாந்தம் ஒழுங்குபடுத்தப்பட்டு திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளடக்கப்படுகிறது. திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் அதன் தனியான பக்கம் உள்ளது. அத்துடன் இந்தப் பிரிவுக்குப் பொறுப்பான செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அலுவலர்களின் தொடர்புத் தகவல் இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அவை தொடர்ந்து ஒழுங்குபடுத்தப்படும். சகல பதிவுகள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், வள்ளச்சாலைகள், மற்றும் வழங்குனர்களின் பட்டியல் இணையதளத்தில் பராமரிக்கப்படுவதுடன், அவை ஒழுங்குபடுத்தப்படுகிறது. இணையதளத்தில் உள்ள நுழைவின் ஊடாக அலுவலர்களுக்கு திணைக்களத்தின் சகல தொகுதியையும் அணுகலாம். திணைக்களத்தின் இணையதளம் சிறந்த சிங்கள இணையதளத்துக்கான தங்கப் பதக்கத்தையும் 2020ஆம் ஆண்டின் சிறந்த இணைய போட்டியில் சிறந்த அரசாங்க இணைய தளத்துக்கான விருதையும் வென்றுள்ளது.

## 6.5 திணைக்கள அலுவலர்கள் நிகழ்நிலை இணையதளத்தைப் பயன்படுத்துவதை மதிப்பீடு செய்தல்

திணைக்கள இணையதள மென்பொருள் தொகுதியைப் (MSDFAR) பயன்படுத்தி தங்களது கடமைகளைச் செய்யும் அலுவலர்களுக்கு மதிப்பீடாக புள்ளி வழங்கும் முறை பயன்படுத்தப்படுவதுடன், அதில் அதிக மதிப்பெண்களைப் பெறும் அலுவலர்களுக்கு ஊக்கத் தொகையாக சமிபத்திய வகையான லெப்டெப் கணிணி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சகல அலுவலர்களும் இந்த அமைப்பின் மூலம் தங்கள் பணிகளை செய்ய அறிவுறுத்தப்பட்டனர்.

## 6.6 திணைக்கள அலுவலர்களின் இணைதள மென்பொருளைப் பயன்படுத்துவது குறித்து அலுவலர்களுக்குப் பயிற்சி

கடற்றொழில் 15 மாவட்டங்களிலும் இணையள மென்பொருள் பயன்படுத்தும் தொகுதியைப் பயன்படுத்தும் விதம் குறித்து தனித்தனியாக கண்காணிக்கப்படுவதுடன், இதற்கு எமது பிரிவின் அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனர். அவர்களுக்குப் பயிற்சி தேவையென கூறப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்து பயிற்சி வழங்கப்பட்டது.

## 6.7 SLCERTஉடன் திணைக்களத்தின் சேவையகங்கள் மற்றும் இணையதள மென்பொருளின் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.





*படம் 20 : SLCERTமூலம் பாதுகாப்பு மதிப்பீட்டை மேற்கொள்ளல்*

சேவர் தொகுதி மற்றும் பயன்பாடுகளில் உள்ள பாதிப்புகளைக் கண்டறிந்து அதனைக் குறைப்பதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவு திணைக்களத்தின் சேவையகங்கள், இணையதள மென்பொருள் மற்றும் அனைத்து திணைக்களத்தின் ஆண்ட்ராய்டு பயன்பாட்டின் தொடர்பான பாதுகாப்பு மதிப்பீட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

## 6.8 மின் - பதிவு அமைப்பின் பயன்பாட்டை மேம்படுத்தல்.




*படம் 21 மின் பதிவுப் புத்தகம்*

செயற்பாட்டு பிரிவில் ஒருங்கிணைந்து தகவல் தொழில்நுட்ப பிரிவு அனைத்து 23 துறைமுக அலுவலகங்களுக்சுகும் மின் - பதிவு தொகுதி அறிமுகப்படுத்தியுள்ளது. அன்றாடம் மீன் பிடிக்கும்போது மின் - பதிவு முறையை பயன்படுத்தி தரவு வழங்கப்படுவது *வரை படம் 21: மின் -* இதற்கு மேலதிகமாக சகல துறைமுகங்களின் அடிப்படையில் பதிவு பக்க தரவு உள்ளடக்குவதற்கு இந்த தொகுதி வழங்கப்பட்டுள்ளது. இது தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் தற்போது 2 வருட மீன்பிடித் தரவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பெறப்பட்ட தரவைப் பயன்படுத்துவதன் மூலம், இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவுக்கு (IOCT) தரவு அறிக்கை மின் - பதிவு தரவிலிருந்து பயன்படுத்த முடியும்.

## 6.9 தரவு மீளாய்வுக்கு R மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தல்




*படம் 22 :* R-Script *மற்றும்* R –Shiny *மற்றும் ஆகிய மென்பொருள் வடிவமைப்பு*

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தரவு மீளாய்வுக்கு தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் R-Script மற்றும் R–Shiny ஆகிய மென்பொருள் வடிவமைப்பு, அபிவிருத்தி மற்றும் செயற்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் அவற்றைப் பயன்படுத்தி வரைபடம் மற்றும் அறிக்கை 50க்கு மேற்பட்ட அறிக்கைகள் உருவாக்கப்பட்டு அவற்றில் பெரும்பாலான தரவுகள் IOTC க்கு அறிக்கைப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ளது

# 7. செயற்பாட்டு பிரிவு

## 7.1 மீன்பிடிப் படகுகளுக்கும் தரைக்கும் இடையிலான வானொலி பரிமாற்றத்திற்கான தொடர்பு வசதிகளை வழங்குதல்

மீன்பிடிப் படகுகளுக்கும் தரைக்கும் இடையிலான வானொலி பரிமாற்றத்திற்கான தொடர்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கை பிரதேச வானொலி நிலையத்தின் ஊடாக கொழும்பு தலைமை செயற்பாட்டு நிலையத்தினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதன் மூலம் நிலத்துக்கும் மீன்பிடிப் படகுக்கும் இடையிலான தொடர்பு 24 மணி நேரமும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மீன்பிடிப் படகுகளுக்கு காலநிலை அறிக்கை மற்றும் திடீர் கால நிலை மாற்றம் தொடர்பான முன்னறிவிப்புகளை வழங்குவதுடன், படகு உரிமையாளர்கள் கடலில் தங்கள் படகுகளுடன் மேற்கொள்ளும் செய்தி பரிமாற்ற நடவடிக்கைகளுக்கும் இது வசதி வழங்கும். மீன்பிடிப் படகுகளிலிருந்து அவசர செய்திகள் பெறப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து நிவாரண/ மீட்பு பணி மேற்கொள்ளும் வரை இலங்கை கடற் படை, கரையோ பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பிராந்திய மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிக்காக கொழும்பு தலைமை அலுவலகத்துடன் 18 பிரதேச வானொலி நிலையங்கள் இணைந்து செயற்படுகின்றன.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மைலிட்டி, திக்கோவிட்ட, வெல்லமங்கர, கலமெட்டிய மற்றும் கப்பரத்தோட்ட ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் பிரதேச வானொலி நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் திணைக்களத்திடம் உள்ள பழைய வானொலிகளைப் பயன்படுத்தி தற்போது தேடுதல் பணிகள் சாதரணமாக இடம்பெற்று வருவதால் மேற்படி மீன்பிடித் துறைமுகங்களுக்கு புதிய வானொலிகள் தேவைப்படுகின்றது.

## 7.2 மீன்பிடிப் படகுகளின் தொலைத் தொடர்பு நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஆழ் கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளுக்கு சர்வதேச அழைப்பு குறியீடு வழங்கும் கடற்றொழில் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் தொலைத் தொடர்பு ஆணைக் குழுவினால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் கீழ் வழங்கப்படுகிறது. மீன்பிடிப் படகின் உரிமையாளரிடமிருந்து தொலைத் தொடர்பு ஆணைக் குழுவுடன் இணைந்து செயற்படுவதால் மீன்பிடிப் படகில் வானொலி தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதை விரைவுபடுத்துவதற்கு தேடுதல் நடவடிக்கை பிரிவு தலையிட்டு நடவடிக்கை எடுக்கின்றது.

*அட்டவணை 13 : விண்ணப்பத்தின் தொகை*

| | |
|---|---|
| வழங்கப்பட்ட தொலைத் தொடர்பு பரிமாற்ற இயந்திரத்துக்கான அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 638 |

## 7.3. மீன்பிடிப் படகு மற்றும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும்போது காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு தேவையான தகவல்களை உறுதிப்படுத்தல்

மீன்பிடிப் படகு மற்றும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும்போது இது தொடர்பான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவர்களுககான காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு காப்பீட்டு நிறுவனங்களுக்கு மீன்பிடிப் படகுகளினால் வழங்கப்படும் சகல தொடர்பு தகவல்கள் சம்பந்தப்பட்ட பிரதேச அலுவலகங்களிருந்து தலைமை அலுவலகத்துக்குப் பெறப்பட்ட குறிப்புகளும் பயன்படுத்தப்பட்டு சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஆபத்தில் சிக்கியுள்ள மீன்பிடிப் படகுகள் மற்றும் மீனவர்களை காப்பாற்றுதல், அவசர உதவிகள் வழங்குவதற்கு மற்றும் விரைவாக கரைக்கு கொண்டு வருவதற்கும் இந்த திணைக்களத்திடம் மீட்பு படகு இல்லாமையால் கடற் படையின் மற்றும் கரையோர காவல் திணைக்களத்தின் உதவி பெறப்படும்.

*அட்டவணை 14 : விபத்துக்களின் எண்ணிக்கை˙*

| | |
|---|---|
| ஆழ் கடலில் அறிக்கையிடப்பட்ட திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை | 212 |
| ஆழ் கடலில் ஏற்பட்ட தனிநபர் மரணம் மற்றும் காணாமற் போதல் | 18 |
| திடீர் விபத்துக்களினால் அழிவடைந்த மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை | 04 |

## 7.4 வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்டுக் கொண்டு வருதல்

*அட்டவணை 15* :வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை இந்நாட்டுக்கு மீட்டு வருதல்

| நாடு | கைது செய்யப்பட்ட மீனவர்கள் எண்ணிக்கை | கைப்பறிய படகுகளின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட மீனவர்கள் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| இந்தியா | 52 | 15 | 33 | - |
| மாலைதீவு | 43 | 07 | 32 | 04 |
| சீசெல்ஸ் | 36 | 06 | 30 | 01 |

இந்த படகுகள், மீனவர்களை விடுவித்து கொண்டு வருவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதரகப் பிரிவின் மூலம் இந்தியா, மாலைதீவு, பிரான்ஸ் மற்றும் லண்டனில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகங்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டது.

## 7.5 தேசிய, சர்வதேச மற்றும் வெளிநாடுகளின் கடல் எல்லையில் தத்தளித்து கொண்டிருந்த படகுகளை காப்பாற்ற நடவடிக்கை எடுத்தல்.

*அட்டவணை 16 :விடுவிக்கப்பட்ட்ட மீனவர்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கை*

| விடுவிக்கப்பட்ட மீனவர்கள் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை | கைவிடப்பட்ட படகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1,272 | 212 | 04 |

இயந்திர கோளாரினால் அருகில் உள்ள நாடுகளின் கடல் எல்லைக்குள் மிதந்து சென்ற, கடலில் திடீர் விபத்துக்குள்ளாகிய படகுகள், திடீர் சுகயீனமுற்ற மீனவர்கள் இலங்கை கடற்படை/ கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் படகு, வர்த்தக கப்பல் மற்றும் மீன்பிடிப் படகின் மூலம் மீட்கப்பட்டு உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## 7.6 சிறிய/ ஒருநாட் படகுகளுக்கு தொலைத் தொடர்பு வழங்கல்

கரையோர மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் சிறிய படகுகள் மற்றும் மீனவர்களுக்கு திடீர் வானிலை மாற்றம் குறித்து மீனவர்களுக்கு முன்னறிவித்து உயிரிழைப்பைத் தடுக்கும் நோக்கில் டயலக் நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் இந்த திணைக்களமும் இணைந்து ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இதற்கமைய 2023ஆம் ஆண்டில் இதுவரை மீனவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் 100,000 பேர்கள் வரை இந்த தகவல் சேவையில் பதிவு செய்து நன்மைகளை அனுபவித்து வருகின்றனர்.

## 7.7மீனவ சமூகத்தினரை விழிப்புணர்வூட்டல்

மீனவ சமூகம்/ மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவது அவசியம் என்றாலும் மீனவர்களின் வாழ்க்கை பாதுகாப்புக்கான வழிமுறைகள் மற்றும் திடீர் விபத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய முறை பற்றி தரையில் உதவிச் சேவையைச் பெறுவது எவ்வாறு திடீர் காலநிலை மாற்றத்துக்கு அமைய ஏற்படும் சூறாவளிக் காற்றிலிருந்து உயிரைப் பாதுகாக்க பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக மற்றும் வானொலி கருவிக்கான அனுமதிப் பத்திரம் பெறுவது குறித்து விழிப்புணர்வூட்டுவது அவசியம் எனக் கண்டறியப்பட்டாலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் அதனை முறையாகச் செய்ய முடியாதுள்ளது.

படகுச் சேவையில் ஈடுபடுபவர்களில் சிலர் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவதன் காரணமாக படகுப் பாதையில் விபத்துக்கள் அதிகரித்து உயிர்ச் சேதம்/ படகு அழிவும் அதிகரித்துள்ளன. மேலும் ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட விரோத குடியேற்றத்துக்கான படகு பயன்பாடும் அதிகரித்துள்ளது. இயந்திரக் கோளாறினால் அதிக அளவிலான படகுகள் ஆழ்கடலில் தத்தளிப்பதுடன் அப்படகுகள் குறிப்பாக பிற நாடுகளின் கடல் எல்லையில் நுழைவதனால் அந்தந்த மீட்பு மையங்களுக்கு தகவல் அனுப்புவதும் அவசியமாக உள்ளது. எனவே படகுகளை அனுப்புவதற்கு முன் படகின் உரிமையாளர்கள் தங்கள் படகுகள் கடல் பயணத்துக்கு ஏற்ற நிலையில் உள்ளதா என்பதை சரிபார்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் வேண்டும்.

*அட்டவணை 17 : ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு புறப்படுவதற்கு வழங்கப்பட்ட அனுமதியின் எண்ணிக்கை – 2024.01.01 – 2014.08.31*

| | **துறைமுகம்** | ***புறப்பட்டவர்கள் எண்ணிக்கை*** |
|---|---|---|
| 1 | கற்பிட்டி | 375 |
| 2 | நீர்கொழும்பு | 7,152 |
| 3 | திக்கோவிட்ட | 1,244 |
| 4 | பேருவளை | 5,757 |
| 5 | அம்பலாங்கொட | 1,417 |
| 6 | ஹிக்கடுவை | 1,229 |
| 7 | காலி | 7,098 |
| 8 | மிரிஸ்ஸ | 2,718 |
| 9 | தெவிநுவர | 4,749 |
| 10 | கோட்டேகொட | 1,131 |
| 11 | நில்வெல்ல | 2,611 |
| 12 | குடாவெல்ல | 6,136 |

| | **துறைமுகம்** | ***புறப்பட்டவர்கள் எண்ணிக்கை*** |
|---|---|---|
| 13 | தங்காலை | 1,924 |
| 14 | ஹம்பாந்தோட்டை | 1,956 |
| 15 | கிரிந்த | 722 |
| 16 | வாழைச்சேனை | 17,876 |
| 17 | திருகோணமலை | 3,413 |
| 18 | பருத்திதுறை | 409 |
| 19 | மைலிட்டி | 433 |
| 20 | வெல்லமங்கர | 1,276 |
| 21 | கப்பரத்தோட்ட | 452 |
| 22 | கந்தர | 1,276 |
| 23 | கலமெட்டிய | 490 |
| | | |

## 7.8 அறிக்கை மற்றும் படகின் புகைப்படங்கள் தரவு களஞ்சியத்தில் உள்ளிடுதல் மற்றும் நிர்வகித்தல்.

*அட்டவணை 18 : பதிவு அறிக்கை மற்றும் படகின் புகைப்படங்கள் தரவு களஞ்சியத்தில் உள்ளிடுதல் மற்றும் நிர்வகித்தல் 2024.01.01 – 2014.12.31*

| | | |
|---|---|---|
| **1.** | ஆழ் கடலில் செயற்பாடுகள் தொடர்பாக அலகுக்கு கிடைத்த பதிவு நகல்களின் எண்ணிக்கை | 2,197 |
| **2.** | செயற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கைகளன் எண்ணிக்கை | 2,150 |
| **3.** | பதிவு தரவு களஞ்சியத்தில் உள்ளடக்கட்ட பதிவு நகல்களின் எண்ணிக்கை | 30,490 |
| **4** | IOTCக்குத் தேவைக்கு பராமரிக்கப்படும் படகின் புகைப்பட தரவு தொகுதியில் உள்ளிட்ட பதிவு நகல்களின் எண்ணிக்கை | 352 |

2015 துறைமுக அரச நடவடிக்கைக்கு நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளுக்கு அமைய இலங்கையில் துறைமுக வசதியைப் பெறறுக் கொள்வதற்கு மீன் தரையிறக்கல் அல்லது மீள் கப்பலேற்றுவதற்கு வரும் வெளிநாட்டு படகுகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் படகு பரிசீலனை மேற்கொள்ளப்படுகிறது. இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவின் 16/11 பிரமாணத்துக்கு அமைய இலங்கையில் துறைமுகத்துக்குள் நுழையும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு குறைந்த பட்சம் 5% க்கு தொடர்பாக மேற்கொள்ளப்படும் பரிசோதனை அறிக்கை இந்து சமுத்திர ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

*அட்டவணை 19 : சேவைகள்*

| **சேவைகள்** | **வழங்கிய அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கை** | **பரிசீலனை எண்ணிக்கை** |
|---|---|---|
| மீன் மீள் கப்பலேற்றல் | **19** | 14 |
| பராமரிப்பு நடவடிக்கை மற்றும் வழங்கல் சேவை | 08 | 01 |
| பாதுகாப்பு அதிகாரி மற்றும் வெளிநாட்டு மீனவர்கள் பரிமாற்ற சேவைகள் | 07 | - |
| **மொத்தம்** | **34** | **15** |

இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவின் 11/04 பிரமாணத்துக்கு அமைய ஆழ் கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளின் மூலம் குறைந்தது 5%க்கு அமைய விஞ்ஞான ரீதியிலான மீன்பிடி படகு கண்காணிப்பை பயன்படுத்திய தகவல் அறிக்கை இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே 2023ஆம் வருடத்துக்குள் 24 மீற்றருக்கு மேற்பட்ட நீளமுள்ள படகுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் எண்ணிக்கையும் அப்படகுகளின் எண்ணிக்கையும் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

*அட்டவணை 20 : மீன்பிடிப் படகு*

| **மொத்த படகுகளின் எண்ணிக்கை > 24m** | **2024க்கு செயற்படும் படகுகளின் எண்ணிக்கை** | **மொத்த மீன்பிடி நடவடிக்கையின் எண்ணிக்கை** | **விஞ்ஞான ரிதியில் கண்காணித்த மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 05 | 04 | 07 | 01 |

## 7.9 இந்து சமுத்திர ரூனா ஆணைக்குழு (IOTC),உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO),ஐரோப்பிய சமூகம் (EU)ஆகிய சர்வதேச நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் தேவையான அறிக்கைகளை வழங்குதல் மற்றும் வருடாந்த கூட்டங்களுக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

- இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவுக்கு வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள் குறித்த திகதிக்கு வழங்கப்படும்.
- இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவின் 10/11 பிரமாணத்துக்கு அமைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கான கூட்டங்கள் மற்றும் அமர்வுகளின் பங்கேற்க வழங்கப்பட்ட நிதியத்தின் கீழ் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அதிகாரிகள் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.
- இதற்கமைய இலங்கை 2010ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு இணக்க முன்னேற்றம் தரப்பட்டுள்ளது.

*அட்டவணை 21 : இணக்க முன்னேற்றம்*

| 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5% | 18% | 47% | 51% | 60% | 74% | 77% | 82% | 87% | 90% | 86% | 76% | 83% | 73.8% |

## 7.10 பல்தின மீன்பிடிப் படகுகளுக்கு 4,200 படகு கண்காணிப்பு உபகரணம் (VMS) நிறுவுதல்.

இலங்கை மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வளமான நாடாக இருப்பதுடன், தற்போது 300,000 வரையான குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் இலங்கையின் இந்த வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கு பொறுப்பாக உள்ளது. கண்காணிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அத்துடன் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் (DFAR) கடற்றொழில் கண்காணிப்பு நிலையம் (FMC) மேலே குறிப்பிட்ட நோக்கத்துக்காக மட்டும் நிர்மாணித்து உருவாக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் கண்காணிப்பு நிலையம் (FMC) முக்கியமாக 52,000 பல்தின படகுகள் மற்றும் அவற்றின் கடற்றொழில் நடவடிக்கைகளை கண்காணிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது

2015ஆம் ஆண்டு முதல் 1,500 படகுகள் இந்த வி.எம்.எஸ் தொகுதியின் ஊடாக ஆழ் கடலில் நிர்வாகம் மற்றும் கண்காணிபு மேற்கொள்ளப்பட்டன மீதமுள்ள படகுகளுக்கு (4,200 படகுகள் வரை) VMS தொகுதிகள் பொருத்தப்படவில்லை. எனவே சகல பல்தின படகுகளுக்கும் VMS தொகுதிகள் பொருத்துவதற்கு சகல பல்தின படகுகளையும் கண்காணிக்கக்கூடிய தேவை மற்றும் இதனை மேற்கொள்வதற்கான செலவு குறைந்த சிறந்த வழியுமாகும். இருப்பினும் அவுஸ்திரேலிய அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக மேற்குறித்த 4,200 VMS அலகுகளை கொள்முதல் செய்வதற்கு நிதியுடன் ஆதரவளித்துள்ளது. இது தொடர்பாக அவுஸதிரேலிய அரசு (IOM) (இடம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு) சுயாதீன நிறுவனமான நிறுவனத்தின் ஊடாக சர்வதேச விலைமனு மேற்கொள்வதற்குப் பொருத்தமான வழங்குநர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

VMS கட்டமைப்பின் ஊடாக மீனவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கக்கூடியவாறு வலை அடிப்படையிலான கட்டமைப்பின் ஊடாக துறைமுக அதிகாரிகளுக்கு கண்காணிப்பு வசதிகளை வழங்க முடியும். இலங்கையில் படகு குழுவில் உள்ள படகுகளின் வகைக்கும் இந்த உபகரணம் பொருத்தமுடையதாக இருக்கும் எனவே எதிர்காலத்தில் VMS கட்டமைப்பு வினைத்திறனாக செயற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2020 ஆகஸ்து மாத பிற்பகுதியில் VMS கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அது நிறைவு செய்யப்பட்டுள்ளது. தீவைச் சுற்றியுள்ள 15 துறைமுகங்களுக்கு இது பொருத்தப்பட்டுள்ளது. இரண்டாவது திரை மென்பொருள் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் சகல புவி மண்டலங்களும் பதிவேற்றப்பட்டன. இதற்கமைய DFAR மூலம் கம்பனிக்கு மாதாந்தம் ‘‘பில்’’ கடடணம் செலுத்தப்படுகிறது. பில் செலுத்தல் மற்றும் உபகரணங்கள் பராமரித்தல் போன்றவை கடற்றொழில் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் தயாரிக்கப்பட்ட மென்பொருள் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. அலுவலர்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் தலைமைத்துவ அமைப்பு மற்றும் செயற்பாட்டு பிரிவு பற்றி விழிப்புணர்வும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் படகு வீல் ஹவுஸ் ஸ்ரிக்கர் பொருத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் படகில் வி.எச்.எஸ். இயக்குவதற்கான தொழில்நுட்பம் மற்றும் சட்டத் தேவைகள் தொடர்பாக தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

தற்போதைய VMS படகு உரிமையாளர்களுக்கு இலாபகரமான மற்றும் வினைத் திறனான சேவை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது. இங்கு படகில் பொருத்தப்பட்ட அன்டனா மிகக் குறைந்த மின் தேவையுடன் (2W) இயங்குவதுடன் பிரதான மின்சாரம் இல்லாத நிலையில் 03 நாட்கள் வரை அதன் காப்பு சக்தியைப் பயன்படுத்தும திறன் கொண்டது. FMC குழுக்களுக்கு எளிதான மற்றும் மென்மையான செயற்பாடுகளை புரிவதற்கு இடமளிக்கும் காற்றின் ஊடாக வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு தொகுதியின் உபகரணம் திறன் கொண்டதாகும். படகு ஏனைய பிரதேசங்களின் EEZ போன்ற கட்டுப்பாட்டு அணுகல் பகுதியில் இருக்கும்போது தானியங்கி விழிப்பூட்டல்களை உருவாக்குகிறது.

EEZ க்குள் பயணிப்பதற்கு எளிய வழிகளைப் பயன்படுத்தும்போது 04 மணி நேரத்திலிருந்து 01 நேரமாக அதிகரித்து FMC குழுவினருக்கு படகை உண்ணிப்பாக கண்காணிக்க இடமளிக்கிறது. மாற்றுத் தேவையாக வழங்குனரினால் படகில் பொருத்துவதற்கு LED Conbox (டிஸ்பிளே) வழங்கப்படுவதுடன் VMS கட்டமைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் திணக்களம் மற்றும் படகு உரிமையாளர்களுக்கு மீன் தேடுதல், எச்சரிக்கை, காலநிலை மாற்றம் பற்றி உள்ளுர் மொழியுடன் தொடர்பு கொள்ள இடமளிக்கும். படகு

உரிமையாளர்களுக்கு ஸ்மார்ட் தொலைபேசியின் ஊடாக தனித் தனியாக தமது படகு கண்காணிக்கக்கூடிய வகையில் மாற்றுச் சேவையாக படகு உரிமையாளர்களுக்கு கணிணி மொபைல் இடைமுகத்தை வழங்கும் திறன் கொண்டது.

இலங்கை பன்முக நெருக்கடியை எதிர்கொண்டாலும், முதலில் கொவிட் நெருக்கடி மற்றும் தற்போது பொருளாதார நெருக்கடி இருந்த போதிலும் அதன் தரப்பினரின் தேர்வுடன் சட்ட விரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறையற்ற (IUU) மீன்பிடி செயற்பாட்டை குறைப்பதற்கும் கடலில் மீன்பிடி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு DFAR அதன் கண்காணிப்பு திறன்களின் கீழ் மேலும் 2,000 படகுகளைச் சேர்க்க திட்டமிட்டுள்ளது.

VMS கட்டமைப்புக்குரிய சகல துறைமுக அலுவலகங்களின் ஊடாக அனுகக்கூடிய மற்றும் DFAR தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்தள்ள கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்தின் (FMC) மூலம் நிர்வகிக்கப்படுகிறது. தற்போது FMC படகுகளை 24 X 7 கண்காணிக்கிறது. FMC இன் முக்கிய கடமைகளில் ஒன்று குஆஊ நாளாந்தம் சமிக்ஞை இன்றி அல்லது குறைந்த சமிக்ஞையுடன் படகு (அமைதியான படகு என காணல்) படகு அடையாளம் காணப்பட்டு அவர்களின் படகு மீண்டும் சம்பந்தப்பட்ட அமைப்புக்குள் நுழையும் வரை படகு புறப்படுவதை தடுத்து வைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நீண்ட காலமாக VMS தொகுதி செயலற்றிருக்கும் படகுகள் உட்பட அனைத்து சந்தேகத்துக்கிடமான படகுகள் தொடர்பான தகவல்கள் பரிசீலனைக்காக ஆய்வுப் பிரிவுக்கு அனுப்பப்படும். ஆட் கடத்தல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் தேசிய எல்லையை மீறல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் படகுகளை அடையாளம் காண்பதற்கு மாதிரி முறை தயாரிப்பதற்கு தொடர்ந்து ஆய்வுகள் நடாத்தப்பட்டன. சட்ட விரோதமான நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் படகுகளை அடையாளம் காண்பதற்கு FMC முறை வடிவத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது.



*வரைபடம் 23 படகு கண்காணிப்பு நிலையம்.*

# 03. இலங்கை தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)

## 3.1 நோக்கம்

நீர்வாழ் உயிரினச் செய்கை மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலின் உறுதியான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் முன்னணி நிறுவனமாகும

### 3.2 நடவடிக்கை

சிறிய, மத்திய மற்றும் பெரியளவிலான நீர்வாழ் தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த முறையில் நீரியல் வளங்களின் முகாமைத்துவத்தின் ஊடாக நன்னீர் மற்றும் உவர் மீன்களைப் பிடிப்பதற்கு வசதியான திட்டம் கிராமிய சமுகத்தினரின் வறுமையைப் போக்குதல் மற்றும் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கல்

## 3.3 பொறுப்புகள்

- நீர்வாழ் உயிரினச் செய்கை, நீர்வாழ் உயிரினச் செய்கை நடவடிக்கை மற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக நீர்நிலைகளில் செய்கை அடிப்படையில் அபிவிருத்தியின் ஊடாக மீன் உற்பத்தி மற்றும் மீன் நுகர்வினை அதிகரித்தல்.
- நன்னீர் மற்றும் உவர் மீன் செய்கையை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மீன்பிடிக் கைத்தொழிலில் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தல்
- ஏற்றுமதிக்காக அதி பெறுமதி கொண்ட உணவுக்கான மீன்களை செய்கையிடல், அலங்கார மீன் மற்றும் நீர்வாழ் தாவர செய்கையை மேம்படுத்தல்.
- சூழலுக்கு இணக்கமான முறைகளைக் கடைப்பிடித்து நீர்வாழ் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல்.
- சிறிய மற்றும் பாரிய அளவில் நீர்வாழ் உயிரினச் செய்கையின் முதலீட்டை விருத்தி செய்தல், வசதிகளைத் திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல்.
- உயிரியல் பல்வகைமையை பாதுகாக்கும் வகையில் நீர்வாழ் உயிரினச் செய்கை, நீரியல் வளங்கள் மற்றும் செய்கை அடிப்படையில் கைக்கொண்டு கடற்றொழில் கைத்தொழில் முகாமைத்துவம்,பேணல் மற்றும் அபிவிருத்திக்கு நடைவடிக்கை எடுத்தல்.
- நீரியல் வளங்கள் ஏற்றுமதி, இறக்குமதி, விற்றல் மற்றும் பகிர்ந்தளித்தல் சம்பந்தமான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்த நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கல்.
- நீர்வாழினச் வளர்ப்பு, நீர்வாழினச் வளர்ப்புக்கான செயற்பாடு மற்றும் செய்கை அடிப்படையில் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதல

## நன்னீர் மீன் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை உற்பத்தி

நன்னீர் மற்றும் நீர்வாழின செய்கைப் பிரிவு இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு, மக்களின் போசனை, தொழில்/ வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதிலும், அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் முக்கிய பங்கு வகிப்பதுடன், நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 25-30% வரை நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழின் செய்கைப் பிரிவின் மூலம் பங்களிக்கின்றது.

| 2024இன் இலக்கு (மெ.தொ.) | நன்னீர் மீன் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை உற்பத்தி ஜனவரி– நவம்பர் | இலக்கை நிறைவு செய்தல் |
|---|---|---|
| 135,230 | 97,130 | 72% |






2024 நவம்பர் மாதம் வரை வற்றாத வருடாந்த நீர்த் தேக்கங்களில் செய்கை அடிப்படையிலான மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நன்னீர் நீர்வாழ் செய்கையின் ஊடாக **88,060** மெற்றிக் தொன் உற்பத்தியாக பெறப்பட்டுள்ளது. இவ்வாறு உவர்நீர் இறால் உள்ளிட்ட கரையோர நீர்வாழின செய்கையின் மூலம் 9,110 மெற்றிக் தொன் உற்பத்தியாகப் பெறப்பட்டுள்ளது.

## மீன் குஞ்சுகள் மற்றும் நன்னீர் இறால் குடம்பிகள் வைப்பிடல்

2024 ஆம் ஆண்டு மீன் குஞ்சுகள் மற்றும் நன்னீர் இறால் குடம்பிகள் வைப்பிடப்பட்ட இலக்கு மற்றும் முன்னேற்றம் பற்றி வரைபடம் 1இன் மூலம் தரப்பட்டுள்ளது.






**மீன் சினை இருப்புக்கான அரசின் விசேட உதவித் வேலைத்திட்டம்**

2024ஆம் ஆண்டுக்கு அரசினால் நன்னீர் மீன்பிடிப் பிரிவின் அபிவிருத்திக்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வேலைதட திட்டத்தின் நிலைத் தன்மையைப் பேணுவதற்கு சமூக பங்களிபபுடனான நிலையான நிதியமொன்னை நிறுவவும், மீனவ சமூகத்தை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்றை தயாரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 30 மில்லியன் மீன் குஞ்சுகள், 14.62 மீன் குடம்பிகள் மற்றும் 13.52 மில்லியன் நன்னீர் இறால் குஞ்சுகளும் வைப்பிடப்பட்டது.

# நன்னீர் மீன் சினை உற்பத்தி

மீன் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடன் நீர்நிலைகளில் வைப்பீடு செய்வதற்குத் தேவையான மீன் குடம்பிகள் உற்பத்தி செய்வது அதிகார சபையின் பிரதான பொறுப்பாகும். உடவளவை தம்புள்ள இங்கிணியாகல, இரணமடு, கலாலவெவ, நுவரெலியா, பொலநறுவை மற்றும் முருத்தவெல ஆகிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுப் பருவம் வரை வளர்ப்பதற்கு தனியார் தரப்பினர், கொட்டு, கூடுகள், சமூக அடிப்படையிலான சிறிய மீன்கள் சினை உற்பத்தி அலகுக்கு வழங்கப்படும். இவ்வாறு பம்பல கஹந்தமோதர மற்றும் கல்லாறு நிலையங்களில் நன்னீர் இறால் குடம்பிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஓகஸ்து மாதம் வரையான மீன் உற்பத்தி படம் 2 மற்றும் படம் படம் 3இல் காட்டப்பட்டுள்ளது.








*வரைபடம் 2 : நீர்வாழின வளரப்பு நிலையங்களில் மீன் மற்றும் இறால் குடம்பிகள் வைப்பிடல்*




*வரைபடம் 2 : நீர்வாழின வளரப்பு நிலையங்களில் மீன் மற்றும் இறால் குடம்பிகள் வைப்பிடல்*

**நன்னீர் மீன்பிடித் துறையின் கீழ் செயற்படுத்தப்படும் நிதியத்துடனான செயற்றிட்டம்**

- இலங்கையில் கிராமிய மக்களின் உணவு மற்றும் போசாக்கை பாதுகாப்பதற்கு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு செய்கை அடிப்படையிலான நன்னீர் மீன்பிடித் தொழிலில் தன்னிறைவான நிறைபேறாக அபிவிருத்தி செய்தல்.

கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து நன்னீர் மீன்பிடித் தொழிலை வலுவூட்டுவதற்கு மற்றும் கிராமிய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பான் அரச ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து (FAO) 3 மில்லியன் அமெரிக்க டொலர் அன்பளிப்பாக கிடைத்துள்ளது. இதன் கீழ் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் நிலைபேறாக வலுப்படுத்துவதற்கு மீன் சிணை இனப் பெருக்க கொள்ளளவை அதிகரிப்பதற்கு மடடக்களப்பு, முல்லைத்தீவு, அனுராதபுரம் மற்றும் மொனராகல ஆகிய மாவட்டங்களில் சமூக அடிப்படையிலான சிறு அளவிலான 04 இனப்பெருக்க நிலையங்கள், 04 நீர்வாழின வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான சிறு அளவிலான மீன் சிணை இனப்பெருக்க அலகுகள் அதிகரிப்பதற்கு, தேர்ந்தெடுக்கபபட்ட நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளின் குடித் தொகையை அதிகரித்தல், தாய் மீன்களின் தொகையை விரிவுபடுத்தல், மீனவ மக்களுக்கிடையே கூடுகளில் மீன் வளர்ப்பை ஊக்குவித்தல் போன்ற வேலைத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் செயற்றிட்டத்தின் மூலம் மீன் சிணைகள் கொண்டு செல்வதற்கு 03 பவுசர் வண்டிகள் அதிகார சபைக்கு வழங்குதல், நன்னீர் மீன்பிடித் தொழிலுக்கு டிஜிடல் தொழில்நுட்பத்துடன் இணைதல், மற்றும் நன்னீர் மீன்பிடி உற்பத்தி, முகாமைத்துவம், தயாரித்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல் தொடர்பாக அலுவலர்களின் மற்றும் மீனவர்களின் தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 3,000 நன்னீர் மீனவர்கள், சிறிய தொழில் முறையிலான மீன் இனப்பெருக்க 40 பேர்கள் மற்றும் மீன் உணவு தயாரிப்பாளர்கள் 20 பேருக்கு இந்த திட்டத்தில் நேரடியாக பிரதிபலன் கிடைக்கும். மேலும், இதன் கீழ் மீனவ குடும்ப உறுப்பினர்கள், நுகர்வோர்கள் மற்றும் கருவாடு உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட மறைமுகமான பயனாளர்களுக்கும் இந்த நன்மைகளை வழங்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

## கரையோர நீர்வாழின செய்கை அபிவிருத்தி

### உவர்நீர் இறால் செய்கை

இது இலங்கையின் மிகப் பெரிய வணிக ரீதியிலான மீன் வளர்ப்பு நடவடிக்கையாகும். நக்டா நிறுவனத்தின் தொடர் கண்காணிப்பு மற்றும் பரிசோதனை நடவடிக்கை காரணமாக இன்று இறால் கைத்தொழில் சிறந்த மட்டத்தை எட்டியுள்ளது. இறால் செய்கையை அதிகரிப்பதற்கு நீர் சுழற்சி முறை அடையாளம் காணல் மற்றும் செய்கை நிலப் பிரதேசத்தில் உயிரியல் பாதுகாப்பை மேம்படுத்துவதன் ஊடாக இறால் செய்கை முறையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் இறால் உற்பத்தியில் 7,109 மெ. தொன் அறுவடையாக கிடைத்துள்ளது





### கடலட்டை இனப்பெருக்கம் மற்றும் செய்கையிடல்

கடலட்டை செய்கையானது இலங்கையில் நீர்வாழ் துறையில் பிரபல்யமடைந்துவரும் ஒருபிரிவாகும். முக்கியமாக சீன மற்றும் ஏனைய கிழக்கு ஆசிய நாடுகளில் பிரபல்யமான உணவாகக் கொள்ளல் மற்றும் மருத்துவ குணம் கொண்ட கடலட்டைக்கு சர்வதேச சந்தையில் அதிக விலை உள்ளது. ஏற்றுமதி சந்தையில் கடலட்டைக்கு அதிக கோரிக்கை நிலவுவதால் உள்ளுர் மீனவ மக்களின் வாழ்வாதாரத்துக்கு மற்றும் நாட்டுக்குத் தேவையான அன்னிய செலாவணியைக் கொண்டு வருவதற்கும் இந்த கடலட்டை செய்கையை பிரபல்யபடுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



தனியார் தரப்பினரால் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடலட்டை செய்கை மேற்கொள்ளப்படு வருவதுடன் 2024ஆம் ஆண்டில் 479 மெற்றிக் தொன் (ஈரப்பத) அறுவடை செய்யப்பட்டுள்ளது. கடலட்டை ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு கடலட்டை கிராமம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது.

### மோதா மீன் செய்கை

திருகோணமலை, கம்பஹா, காலி ஆகிய மாவட்டங்களில் மோதா மீன் செய்கைக்கு தனியார் தரப்பினர் முன்வந்துள்ளனர். மேலும் பெரிய அளவிலான கூடுகளுக்குள் மோதா மீன் வளர்க்கும் செயற்றிட்டம் திருகோணமலை சார்ந்த கடலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் போது 973 மெ. தொன் மோதா மீன் அறுவடை செய்யப்பட்டுள்ளது

 

## கடல் தாவர செய்கை

வடக்கு மற்றும் வடமேல் மாகாண கடலில் கடல் தாவர செய்கை சமூகப் பங்களிப்புடன் மேற்கொளவ்தற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் 795 மெ. தொ. அறுவடை செய்யப்பட்டுள்ளது.

  

## அலங்கார மீன் செய்கை



நக்டா நிறுவனத்தினால் மீன்களின் புதிய வகைகளின் உற்பத்தி, தொழில்நுட்ப அபிவிருத்தி, தாய் மீன் வழங்கல், மீன் நோய் சிகிச்சை, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கல் போன்றவை மூலம் அலங்கார மீன் மற்றும் நீர்வாழ் தாவர செய்கை அவ்வாறு ஏற்றுமதிக்கு உதவி வழங்கல்.

ரம்படகல, கினிகத்ஹேன மற்றும் செவனபிட்டி ஆகிய அலங்கார மீன் இனப்பெருக்க நிலையங்கள் அலங்கார மீன் மற்றும் தாவர உற்பத்திக்குப் பாரிய பொறுப்புகளை முன்னெடுத்து செல்கின்றது. இந்த நிலையங்களின் மூலம் 2024ஆம் ஆண்டின்போது விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு 4.03 மில்லியன் பெறுமதியான அலங்கார மீன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ரம்படகல அலங்கார மீன் இனப்பெருக்க மற்றும் பயிற்சி நிலையங்களின் மூலம் 1,029 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

நன்னீர் அலங்கார மீன்களின் மிக வண்ணமயமான மற்றும் குறிப்பிடத்தக்க கஃப்பி, ஸ்வோட்டெல், பிளாட், பார்ட், டெட்ரா, கவுரம் மற்றும் கெட்பிஸ் போன்ற இனங்களுடன் சம்பந்தப்பட்டதாகும். இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இந்த நன்னீர் மீன்களுக்கிடையில் 50-60% வரை கப்பி மூலம் சம்பந்தப்பட்டதாகும். இலங்கையில் நிரந்தர ஏற்றுமதி நிறுவனங்கள் 45 வரை உள்ளன. இலங்கையில் அலங்கார மீன்களுக்கு பிரதான பெறுனர்களான அமெரிக்க ஐக்கிய குடியரசு, ஐக்கிய இராசதானி, ஜெர்மனி சீனா, அவுஸதிரேலியா போலந்து, பிரான்ஸ், ஜப்பான், ஐக்கிய அரபு குடியரசு மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளும் இதில் அடங்கும்.

நன்னீர் அலங்கார மீனை ஒப்பிடும்போது உவர்நீர் அலங்கார மீன் மிக அதிக விலை கொண்டதாக இருப்பதுடன் சர்வதேச சந்தையில் அதிக கோரிக்கையாகவும் திகழ்கின்றது. அலங்கார மீன் உற்பத்தி வரம்பை அதிகரித்தல், உவர்நீர் அலங்கார மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக ஏற்றுமதி வருமானத்தை அதிகரிகரிக்கச் செய்தல், தொழில்நுடப அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் புத்தளம் பங்கதெனியவில் உவர்நீர் அலங்கார மீன் இனப்பெருக்க மையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அரச தனியார் கூட்டுத் திட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது.



## விவசாயத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போதுள்ள அலங்கார மீன் பண்ணைகளை மேம்படுத்தல்.

வெற்றிகரமாக அலங்கார மீன் வர்த்தகத்துக்கு மிக முக்கிய காரணியாக உலக சந்தைக்கு உயர் தரமான பல்வேறு வகையான மீன்களை தொடர்ந்து வழங்குவதற்கான திறனாகும். அலங்கார மீன் தொழிலுக்கு சிறிய மற்றும் நடுத்தரமான விவசாயிகளை அதிகம் சார்ந்துள்ளது. இந்த செய்கையாளர்களுக்கு அலங்கார மீன் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கு மேம்படுத்தப்பட் தொழில்நுட்பங்களுடன் நவீனமயமாக்கப்பட்ட வசதிகள் தேவைப்படுகின்றன. எனவே இப்பிரிவில் சிறிய மற்றும் நடுத்தமான விவசாயிகளுக்கு ஆதரவளிப்பது துறையின் நிலைபேறான அபிவிருத்திக்கு அடிப்படைத் தேவையாகும்.

இதற்கமைய தற்போதுள்ள அலங்கார மீன் பண்ணைகளை மேம்படுத்துவதற்கு ரூபா 35 மில்லியன் விவசாய மறறும் பெருந்தோட்ட தொழில் அமைச்சில் விவசாய நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கிடப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ரூபா 500,000.00 அதிகபட்ச கடன் வழங்குவதற்கு 02 மாத சலுகை கால அவகாசத்துடன் 24 மாதங்களில் அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2024 திசம்பர் 31ஆந் திகதியின்போது 19 பயனாளிகளுக்கு ரூபா 8.80 மில்லியன் பெறுமதியான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 75 பயனாளிகளுக்கு ரூபா 34.66 மில்லியன் பெறுமதியான கடன் வழங்குதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## நீர்வாழின உற்பத்தி ஏற்றுமதி

| மீன் இனம் | 2023 (ஜன – நவம்.) | |
|---|---|---|
| | ஏற்றுமதி அளவு (மெற். தொ.) | ஏற்றுமதி பெறுமதி (ரூபா மில்) |
| இறால் | 3,219 | 8,352.3 |
| அலங்கார மீன் | - | 6,812.8 |
| கடலட்டை | 232 | 3,011.7 |

# 04
# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)

## 4.1 நிறுவன தகவல்

நாரா ஆனது மீன்பிடித் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவை மீளமைப்பு செய்து மீன்பிடி தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைப்பதன் மூலம் 1981 இல் ஸ்தாபிக்கப்பட்டது. நாரா நிறுவனமானது காக்கைதீவு, மட்டக்குளி, கொழும்பு 15 எனும் முகவரியில் அமைந்துள்ளது. இந்த இணைப்பின் விளைவாக தேசிய நீரியல்வள முகாமை சட்டம் இல 54/ 1981 இன் கீழ் ஒரு முழுநீள ஆய்வு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை சட்டம் இல 32/1996 என மாற்றம் செய்யப்பட்டது. கடற்தொழில் அமைச்சின் கீழ் ஒரு சட்டபூர்வ அமைப்பாக காணப்படும் நாராவின் தொலைநோக்கு கூற்று, பணிக்கூற்று, இலக்குகள் மற்றும் நோக்கங்கள் என்பன பின்வருமாறு;

4.2 எமது தொலைநோக்கு

நீரியல்வள பாதுகாப்பு, முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆய்வில் பிரதான நிறுவனமாக முன்னிலை வகித்தல்.

4.3 எமது பணிக்கூற்று
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியான ஆய்வு மற்றும் வளங்களின் அடிப்படையில் நீரியல்வளங்களில் ஏற்படும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளுக்கு புத்தாக்கமான தீர்வுகளை வழங்குதல்.

4.4 ஆணை

- தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையானது நீர்வளங்களில் ஆய்வு செய்தல், ஆய்வுகளை ஒழுங்குசெய்தல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் ஒரு தேசிய ரீதியிலான பிரதான நிறுவனம் ஆகும்.
- உயிருள்ள மற்றும் உயிரற்ற நீரியல் வளங்கள் தொடர்பான தேசிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் போதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்
- நீரியல் வளங்களை அடையாளம் காணல், மதிப்பீடு செய்தல், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல். குறிப்பாக பின்வரும் துறைகளில்;
    - கடலியல் மற்றும் நீரியக்கவியல்
    - மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி வலைகள், மீன்பிடி கைவினை, மற்றும் மீன்பிடி முறைகளின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்
    - மீனவர்கள் மற்றும் அவர்களில் தங்கிவாழ்வோரின் சமூகநலன் உட்பட்ட மீன்பிடிக்கைத்தொழிலின் சமூக பொருளாதார அம்சங்கள்
    - மீன் மற்றும் மீன்பிடி உற்பத்திகளின் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் சந்தைப்படுத்தல்.

- உள்நாட்டு நீர்நிலை, கரையோர ஈரநிலங்கள், மற்றும் ஆழ்கடல் பகுதிகளின் நீரியல் வளங்களை அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு செய்தல்

- நீரியல் வளங்களை பயன்படுத்தல் முகாமைத்துவம் செய்தல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான விடயங்களில் விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்
- நீரியல் வளங்களை பயன்படுத்தல். திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொது ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கமைத்தல்
- நீரியல் வளங்கள் மற்றும் மீன்பிடி கைத்தொழில் தொடர்பான முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி சார் தகவல்களை சேகரித்து வழங்குதல் மற்றும் பிரசுரித்தல்.
- எமது நிறுவனத்தில் கடமைகளை நிறைவேற்ற தேவையான பயிற்சி வழங்குதல்

1. 2. ஆய்வு சிறப்பம்சங்கள்

1. நீரியல் வளங்களை பேண்தகு முறையில் பயன்படுத்துவதற்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்தல்

1.1 நீர் வேளாண்மை மற்றும் உள்நாட்டு மீன்பிடி தொடர்பான தொழில்நுட்பங்களை நவீனமயப்படுத்துவதற்கான விஞ்ஞான ரீதியான ஆய்வுகள்

முன்னர் கட்டமைக்கப்பட்ட மீள்சுழற்சி-செய்யப்பட்ட மீன்வளர்ப்பு அமைப்பின் (RAS/ ராஸ்) திறன்விருத்திக்காகவும் அதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை இனங்கண்டு அதை நீக்கவும் இந்த புதிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே, 450 லிட்டர் கொள்ளளவு கொண்ட உற்பத்தி தொகுதி மற்றும் 320 லிட்டர் கொள்ளளவு கொண்ட வடிகட்டும் தொகுதியுடனான புதிய ஆய்வுகூட அமைப்பு உருவாக்கப்பட்டது. உயிரி வடிப்பி சரியாக இயங்குவதற்கு, தொகுதியின் காரத்தன்மை 250mg/L ஐ விட அதிகளவாக காணப்படவேண்டும் என முந்தய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், ஆரம்பத்தில் காரத்தன்மை 35mg/L ஆக பதிவுசெய்யப்பட்டதோடு, $NaHCO_3$ 250g/$m^3$ அளவு சேர்க்கப்பட்ட பின்னர் தொகுதியின் காரத்தன்மை 280 mg/L ஆக உயர்வடைந்தது. மேலும், நீர் சுழற்சியின் போது 5 கிராம் அளவு மீன் உணவு சேர்ப்பதனால், ராஸ் தொகுதியினுள் நுண்ணுயிர் பெருக்கம் திறம்பட மேன்படுத்தப்பட்டது. இந்த செயன்முறை மூலம், ஒரு வாரத்தின் பின்னரான அவதானிப்பில், ராஸ் இல் $NH_3$ செறிவு பேணப்பட்டு அனுமதிக்கப்பட்ட 0.24 mg/L எனும் வரையறையில் காணப்பட்டது; ஆயினும், இரண்டு வாரத்தின் பின்னர், $NO_2$ இன் செறிவு அனுமதிக்கப்பட்ட வரையறையை விட அதிகளவில் காணப்பட்டது. இது தொகுதியினுள் 300g/$m^3$ உப்பு சேர்ப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இதன்பிரகாரம், ராஸ் தொகுதியினுள் வேறுபட்ட செயன்முறைகள் மூலம் நீரின் தர அளவுருக்கள் அனுமதிக்கப்பட்ட வரையறையினுள் பேணப்படமுடியும் என இந்த ஆய்வின் மூலம் இனங்காணப்படுள்ளது.

ஏற்றுமதி தடைசெய்யப்பட்ட உள்ளூர் மீன் வகைகளைப் பயன்படுத்தி ஒரு கலப்பின ஆடம்பரமான வகையை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட தொடர்ச்சியான குறுக்கு இனப்பெருக்கம் சோதனைகள் கலப்பினத்தின் வெற்றிகரமான அறிகுறியைக் காட்டியது. *Dankinsia srilankensis* பெண் x D. *filamentosa* ஆண் மற்றும் *Dawkinsia srilankensis* ஆண் × *D. filamentosa* பெண், 2:1 எனும் பாலின விகிதத்தில் கலப்பு செய்யப்பட்ட போது 60% அதிகமான சந்ததி *D. srilankensis* இன் நிற வடிவங்களை கொண்டு காணப்பட்டது. இந்த இரண்டு கலப்பின் போதும் பெறப்பட்ட சந்ததி < 57% அதிகமான உயிர்பிழைப்பு வீதம், உயர் வளர்ச்சி வீதம், > 8 cm ஐ விட அதிகமான அறிகுறியற்ற நீளம் மற்றும் பெற்றோரை விட செறிந்த நிறம் கொண்டு காணப்பட்டன. ஆரம்ப கட்டத்தில், அனைத்து சந்ததியும் *D. filamentosa* இந்த இளம்பராயத்தை ஒத்து காணப்பட்டன, 8 வாரங்களுக்கு பின்னர், சில சந்ததி *D. srilankensis* ஐ 100% ஒத்த நிற வடிவங்களை காட்டின. மீன் இனங்களுக்கு பதிலாக கலப்பு செய்யப்பட்ட மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் உயிர் திருட்டு சம்பவங்களை குறைக்கமுடியும் என்பதை இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. எனினும், இந்த கலப்பினங்களின் தொடர்ச்சியை உறுதி செய்ய மேலதிகமாக ஆய்வுகள் செய்யப்படவேண்டும். Pethia இனங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்ட இதேபோன்ற குறுக்கு வளர்ப்பு செயன்முறைகள் வெற்றியடையவில்லை, ஆனால் இயற்கையிலிருந்து சேகரிக்கப்பட்ட மாற்று இனப்பெருக்கிகளுடன் சோதனைகள் நடந்து வருகின்றன. பொது

தாங்கிகளில், *P. nigrofasciata* மீன் 50 சோடிகளை கொண்டு செய்யப்பட்ட இனப்பெருக்கத்தில் குறைந்தளவு சந்ததிகளே உருவாகின (15 சந்ததி/சோடி). மகாவலி ஆற்றிலிருந்து பெறப்பட்ட பெண் மீன்களில் மிகக்குறைந்தளவு முட்டைகள் (<20) காணப்பட்டன. இது சிலவேளைகளில் காலநிலை மாற்றம் காரணமாக இடம்பெற்றிருக்கலாம்.

நீர் தாவரங்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் தவற இழையவளர்ப்பு ஆய்வுகூடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இளையவளர்ப்பு முறைமூலம் ஏறத்தாழ 2000 *Cryptocoryne wendtii* வகை தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தாவர வளர்ப்பாளர்களுக்கான இடையறாத வழங்கலை உறுதி செய்ய, முந்தைய வளர்ப்பு முறை ஆரம்பித்து தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுகின்றது. *Anubias barterivar* nana தாவரங்களின் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இளையவளர்ப்பு செய்யப்பட்ட *Cryptocoryne wendtii* தாவரங்களை பயன்படுத்தி செயற்படக்கூடிய பரிசோதனைகள் மீள்சுழற்சி மீன் வளர்ப்பு தொகுதியில் (RAS) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த தொகுதியில், அலங்கார கப்பி வகை மீன்கள் மூன்று வேறுபட்ட அடர்த்திகளில் பரிசோதனை மாதிரிகளாக பயன்படுத்தப்படுகின்றன. ஒரு தாங்கியில் 9 இளையவளர்ப்பு செய்யப்பட்ட தாவரங்கள் இடப்பட்டுள்ளன. தாவர இலையில் உள்ள பச்சைய அளவு, இலையின் சராசரி நீளம், இலைகளின் எண்ணிக்கை என்பவற்றோடு, மீன்களின் ஆரம்ப நிறையும் கணிக்கப்பட்டன. pH, அமோனியா, மற்றும் பொட்டாசியம் போன்ற நீரின் தர அளவுருக்கள் தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்யப்படுகின்றன. நாள் மற்றும் வாரத்தின் அடிப்படையில் தரவு சேகரிக்கப்படுகின்றன. ராஸ் தொகுதி மூன்று மாதங்களுக்கு தொடரப்படும்.




உரு 1: பரிசோதனைக்காக பயன்படுத்திய ராஸ் தொகுதி

பத்து வற்றாத நீர்த்தேக்கங்களில், நீர் வேளாண்மை சார்ந்த மீன்பிடியின் இருப்பு அடர்த்தியை தீர்மானிக்க ஒரு விரிவான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. போஸ்பரஸ், நைத்திரேட், பச்சையம்- a செறிவு போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான பௌதீக, இரசாயன, மற்றும் உயிரியல் மாதிரிகள் பெறப்பட்டன, அதேநேரம், நீர் வெப்பநிலை, மின்கடத்துத்திறன், மொத்த காரத்தன்மை, மற்றும் செக்கி ஆழம் என்பன உள்ளக பரிசோதனையில் அளவிடப்பட்டன. மேலதிகமாக, சமூக பொருளாதார தரவுகளும் சேகரிக்கப்பட்டன. ஆர்ட்டெமியா வாழ்க்கை வட்டத்தை பூரணபடுத்த பொருத்தமான பாசியினங்களை இனங்காணுவதற்கான ஆய்வு தற்பொழுது நடத்தப்படுகின்றது. ஆரம்பக்கட்டமாக, புத்தளம் மாவட்டத்தில் பின்தங்கிய கிராமத்தில் ஆர்டெமியா வளர்ப்பில் ஈடுபடும் தெரிவு செய்யப்பட்ட பண்ணையாளருக்கு, பச்சை நுண்பாசி (*Chlorella*) வளர்ப்பு (உரு 2) வழங்கப்பட்டது, மற்றும் அதனை வளர்ப்பு செய்து அறுவடை செய்வது தொடர்பான போதிய தகவல்களும் வழங்கப்பட்டுள்ளது. நாரா மூலம் பெற்றுக்கொண்ட தொழிநுட்ப பயிற்சி அறிவுரைகளை நடைமுறைப்படுத்தியமையால் பண்ணையாளரால் வெளியிட பாசி (உரு 3) அதிகரிக்கமுடிந்தது; இந்த பாசியை கொண்டு ஆர்டெமியா வை 35-40 ppt வரை அதிகரிக்கமுடியும். நுண்பாசி இனங்களை அதிக உவர்நிலை கொண்ட சுற்றாடலில் வளர்ப்பு செய்தல் மற்றும் அவற்றை ஆர்டெமியா சிஸ்ட் உற்பத்திக்கு உணவாக

பயன்படுத்தல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இனங்காணப்பட்டுள்ளது (உரு 3).





உரு 2: குளோரெல்லா வளர்ப்பு தொடர்பாக ஆர்டெமியா பண்ணையாளர்களுக்கு செயல் விளக்கம் வழங்குதல்







உரு 3: வளர்ப்பு செய்யப்பட்ட குளோரெல்லா மற்றும் ஏகார் ஊடகத்தில் வளர்ப்புசெய்யப்பட்ட உவர்தன்மை விரும்பும் நுண்ணுயிரிகள்

பச்சை மட்டிகள் மற்றும் இறால் இனப்பெருக்கம் மற்றும் லார்வா வளர்ப்பு தொடர்பான தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளை உருவாக்குவதற்காக ஒரு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது, இது, இந்த இனங்களை வர்த்தக அடிப்படையில் நீர் வேளாண்மை செய்வதற்கும், இயற்கையில் காணப்படும் தொகுதிகளில் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும் உதவும். நீர்கொழும்பு களப்பிலிருந்து பெறப்பட்ட மட்டி மாதிரிகளை கொண்டு ஆரம்பகட்ட இனப்பெருக்க செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டன. கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் நுண்பாசிகளை உணவாக வழங்கும்போது மட்டி நன்றாக செயற்பட்டமை, மற்றும் பெண் மாதிரிகளின் இனப்பெருக்க செயன்முறை விருத்தி செய்யப்பட்டமை முதற்கட்ட முடிவுகளில் தெரியவந்தது. இறால் லார்வாக்களுக்கு நம்பகமான மற்றும் உயர்ரக உணவு ஊடகத்தை உறுதி செய்வதற்காக, உயிர் ஊட்டத்தை அடிப்படையாக கொண்ட நீர் வேளாண்மை தொகுதி உருவாக்கப்பட்டது.

1.2 நீரியல் வள மேம்பாட்டுக்கான உயிர்தொழிநுட்பவியல் பயன்பாடுகள்

இலங்கையின் இறால் வேளாண்மை கைத்தொழில் துறையில் நோய்தாக்க முகாமைத்துவத்தை நோக்காக்க கொண்டு இறால் நோய்கள் கண்காணிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நோய்தாக்கங்களால் ஏற்படக்கூடிய இழப்புக்களை குறைக்கவும், உற்பத்தியின் அளவு மற்றும் தரத்தை அதிகரிக்கவும் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது, இதனால் இந்த கைத்தொழில்துறையில் வருமானத்தை அதிகரிக்க முடியும். வடமேல் மாகாணத்தில் இறால் வளர்ப்பு செய்யப்படும் 5 வலயங்களும் இந்த செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இறால் மாதிரிகள் (*P. vannamei* மற்றும் *P. monodon*) மற்றும் ஏனைய நீர் வாழ் இனங்கள் (நண்டு, ஓட்டுடலிகள், மண் புழு) போன்ற நோய்காவிகளாக செயற்படக்கூடிய மாதிரிகள் வளர்ப்பு தொகுதியிலிருந்து பெறப்பட்டு 8 வகையான நோய்களுக்காக பரிசோதிக்கப்பட்டன. மேலும், வளர்ப்பு தடாகத்தின் நீரின் தரத்தை பரிசோதிக்க, பௌதீக இரசாயன மற்றும்

உயிரியல் நீர் தர அளவுருக்கள் அளவிடப்பட்டது. பரிசோதிக்கப்பட்ட எட்டுவகையான நோய்களில், EHP நோய் ஐந்து வலயங்களில் 59% அளவில் இனங்காணப்பட்டது. இந்த நோய் *P. vannamei* மற்றும் *P. monodon* இரண்டு வகையான இறால்களிலும் காணப்பட்டது, குறிப்பாக *P. vannamei* வகை இறால்களில் அதிகளவில் காணப்பட்டது. வலயங்களை அடிப்படையாக கொண்ட பகுப்பாய்வில், மூன்றாம் வலயத்தில் EHP நோய்த்தாக்கம் அதிகளவில் (23.3%) இனங்காணப்பட்டதோடு, அதனை தொடர்ந்து வலயம் இரண்டில் 16.66% இல் EHP நோய்த்தாக்கம் அடையாளம் காணப்பட்டது.

மேலதிகமாக, EHP நோய்த்தாக பரிசோதனையில் நண்டு மாதிரிகள் நேர்மறை முடிவுகளை காட்டியது. இதன்மூலம், நண்டுகள் நோய்காவியாக செயற்படுவது உறுதிசெய்யப்பட்டது. நீரின் தர அளவுருக்களை பகுப்பாய்வு செய்தபோது தெரியவருவது, EHP நோய்த்தாக்கம் அதிகளவில் ஏற்படுவதில், உயர் உவர்தன்மை (28-31 ppt), குறைந்த pH அளவு (5.7-8.0), மற்றும் உயர் நீர் வெப்பநிலை (31-33 °C) என்பன நேரடியாக தாக்கம் செலுத்துகின்றன. இந்த முடிவுகளில் இருந்து தெரியவருவது, வளர்ப்பு தடாகத்தில், pH, உவர்தன்மை மற்றும் வெப்பநிலை என்பவற்றை சரியாக பேணுவது EHP நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்த மிகவும் அவசியமாகும். மேலும், இந்த ஆய்வில் இருந்து தெரியவருவது, பெரிய நீர் வாழினங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் இறால் வளர்ப்பின்போது EHP நோய்த்தாக்கம்ஏற்படுவதை குறைக்கலாம்.

DNA பார்க்கோடிங்கை பயன்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள *Cryptocoryne* இனங்களை சேர்ந்த நீர்வாழ் தாவரங்களை அடையாளம் காணுவதற்கு நம்பகமான அடையாளம் காணும் தொழிநுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இன்னொரு உயிர்தொழில்நுட்ப ஆய்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த செயற்திட்டமானது, நீர் வாழ் அலங்கார தாவர உற்பத்தி துறையில் ஈடுபடுவோருக்கு தேவைக்கு ஏற்ப பரிசோதனை சேவையை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. DNA ஐ பிரித்தெடுப்பதற்கான படிமுறைகள் அடங்கிய கையேடு ஒன்றை உருவாக்க பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன, மேலும் DNA ஐ பிரித்தெடுப்பு செய்யும் படிமுறையை மேம்படுத்த பரிசோதனைகள் தொடரப்படுகின்றன.

மனித உடல்களில் பொதுவாக வழங்கப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளுக்கு எதிராக எதிர்ப்பு மரபணு உருவாகும் நிலைமை அதிகரித்து வருவதால் நுண்ணுயிர் எதிர்ப்பு தடை ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக கருதப்படுகின்றது. புதிய நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் உற்பத்தி செய்யப்படாமையினால், ஏற்கனவே உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளையே நோய்கள் மற்றும் தொற்றுக்களை குணப்படுத்த பயன்படுத்த முடியும். மனிதர்கள் உட்கொள்வதற்காக வளர்ப்பு செய்யப்பட்டு இலங்கை சந்தைகளில் விற்பனை செய்யப்படும், இறால்களில் நோய்க்கிருமி பாக்டீரியாக்களுக்கு எதிரான நுண்ணுயிர் எதிர்ப்பு தடை இருக்கின்றதா என அறிந்துகொள்ள இந்த ஆய்வு செயற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் புத்தளம் மாவட்டத்தில் உள்ள 10 இறால் வளர்ப்பு பண்ணைகளில் இருந்து 10 இறால் மாதிரிகளும் 10 வளர்ப்பு தடாக நீர் மாதிரிகளும் 2024 மார்ச் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் சேகரிக்கப்பட்டன. பகுப்பாய்வு செய்யப்பட்ட இறால் மற்றும் நீர் மாதிரிகளில் இருந்து, 16 *E. coli* மற்றும் 10 *Salmonella* வளர்ப்புக்கள் பிரித்தெடுக்கப்பட்டன. அமொக்ஸிஸிலின் (30 mcg), ஒக்சிடெட்ராசைக்ளின் (30 mcg), க்ளோரம்பெனிகொள் (10mcg), எரித்திரோமைசின் (10mcg), டெட்ராசைக்ளின் (10mcg) போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு பாக்டீரியா வகைகள் காட்டும் உணர்திறன் வடிவங்களை ஆராயப்பட்டன. தடுப்பு மண்டலங்களின் விட்டம் மருத்துவ மற்றும் ஆய்வக தரநிலைகள் நிறுவனத்தின் தரநிர்ணயத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டது. பிரித்தெடுக்கப்பட்ட 13 *E. coli* மாதிரிகளில், 53.84% (7/13) எரித்திரோமைசினுக்கு எதிராகவும், 38.46% அமொக்ஸிஸிலின் மற்றும் டெட்ராசைக்ளினுக்கு எதிர்ப்பையும், க்ளோரோம்பெனிக்கோளுக்கு உணர்திறனையும் காட்டியது. மேலும், வளர்ப்புதடாகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட *E. coli* மாதிரிகளில் (n=3), எரித்ரோமைசின் மற்றும் டெட்ராசைக்ளினுக்கு 33.33% வீதத்தில் எதிர்ப்பு காட்டியது. இறால் மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட அனைத்து *Salmonella* மாதிரிகளும் எரித்ரோமைசினுக்கு 44.44% (4/9) அதிகளவான எதிர்ப்பையும், 11.11% (1/9),வீதத்தில் குறைவாக டெட்ராசைக்ளின் மற்றும் அமொக்ஸிஸிலினுக்கு எதிர்ப்பையும் காட்டியது,

க்ளோரோம்பெனிகொல் மற்றும் ஒக்சிடெட்ராசைக்ளினுக்கு மிக அதிகளவாக உணர்திறனை காட்டியது. இறால் மாதிரிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட *E. coli* இனங்கள் அமொக்ஸிஸிலின், எரித்ரோமைசின், ஒக்சிடெட்ராசைக்ளின் மற்றும் டெட்ராசைக்ளின் பிணைப்புக்கு பல்வகை நுண்ணுயிர் எதிர்ப்பு தடை காட்டியை அதிகளவாக 0.8 இல் காட்டியது,




Figure 4.1. *E. coli* samples showing Multiple Antimicrobial Resistance (MAR)




Fig. 4.2. *Salmonella* samples showing Multiple Antimicrobial Resistance (MAR)

1.3 சுற்றுசூழலை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறை மூலம் களப்பின் சூழலியல் மற்றும் இயக்கவியலை மீளமைத்தல், தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் களப்புகளில் வாழும் மீன்கள் மற்றும் நீரியல் உயிரினங்களுக்கான நீரின் தர வழிகாட்டுத்தல்களை அபிவிருத்தி செய்தல்; சிலாபம், புத்தளம் மற்றும் கொக்கல களப்புகளின் விரிவான ஆய்வு

களப்பின் நீரை மதிப்பிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் அடிக்கடி நீர் தர ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டாலும், நிர்ணயம் செய்யப்பட்ட களப்பு நீர் தர வழிகாட்டுதல் இல்லாதது களப்பின் இயக்கவியலை மீட்டெடுப்பதில் தடையாக உள்ளது. சிலாபம், புத்தளம் மற்றும் கொக்கல களப்புகளின் நீரின் தர அளவுருக்கள் மற்றும் நுண்ணுயிரியல் அளவுருக்களை விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. நுண்ணுயிரியல் பரிசோதனை முடிவுகளில் தெரியவருவதாவது, மூன்று களப்புகளுக்கும் இடையில் fecal coliforms மற்றும் *E. coli* ஆன MPN பெறுமதிகள் வேறுபட்டு காணப்பட்டன. புத்தளம் களப்பில், fecal coliform அளவுகள் ND க்கும் 35 MPN/mL அளவுக்கும் இடையில் காணப்பட்டன மற்றும் *E. coli* இன் அளவுகள் ND க்கும் 25 MPN/mL இடையில் காணப்பட்டன. கொக்கல களப்பில் fecal coliform அளவுகள் 5 MPN/mL க்கும் 1600 MPN/mL அளவுக்கும் இடையில் காணப்பட்டன மற்றும் *E. coli* இன் அளவுகள் 5 MPN/mL க்கும் 1600 MPN/mL இடையில் காணப்பட்டன. சிலாபம் களப்பில், fecal coliform அளவுகள் 11 MPN/mL க்கும் 1800 MPN/mL அளவுக்கும் இடையில் காணப்பட்டன மற்றும் *E. coli* இன் அளவுகள் ND க்கும் 1600 MPN/mL இடையில் காணப்பட்டன.

இந்த செயற்திட்டத்தின் முடிவில், சேகரிக்கப்பட்ட நீரின் தர அளவுரு தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டு பொருத்தமான புள்ளிவிபரவியல் முறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்கான வழிமுறை ஆரம்பிக்கப்படும். இந்த செயற்திட்டத்தின் முடிவுகள், கொள்கை உருவாக்க பொறிமுறைகளுக்கும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் களப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். இந்த செயற்திட்டமானது களப்பின் சூழல்தொகுதிகள், மற்றும் அதுசார்ந்த பொருளாதார, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார தகைமையின் பேண்தகு நிலையை உறுதி செய்வதற்கு உதவும்.



உரு 5: கொக்கல களப்பின் நீர் மாதிரிகள் பெறப்பட்ட இடங்கள்



Figure 6.1: சிலாபத்தில் வண்டல் மாதிரிகள் சேகரித்தல்



Figure 6.2: கொக்கல இல் நீர் மாதிரிகள் சேகரித்தல்

1.4 கடல் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் மீன் திரட்டும் சாதனங்களை நிறுவுவதன் மூலம் கரையோர மீன்பிடியை வளப்படுத்தல்

மனித நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்ற பிரச்சனைகள் காரணமாக ஏற்படும் கரையோர மீன்பிடியில் வீழ்ச்சி மற்றும் கடல்சார் சூழலியல் வளங்களின் குன்றல் போன்றவற்றால் கடலின் பேண்தகு அபிவிருத்தி நன்றாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே காணப்படும் கடலுணவு வளங்களை கொண்டு எவ்வளவுக்கு காலத்துக்கு உணவு வழங்கலை மேற்கொள்ளமுடியும் என்பது ஒரு வளர்ந்து வரும் பிரச்சனை ஆகும், மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் தொகுதிகளின் மேம்பாடு என்பவற்றை உறுதி செய்வதற்காக FAO யினால் Blue growth என்ற கருப்பொருளின் கீழ் காலநிலை மாற்ற தழுவலாக கரையோரப்பகுதிகளில் மீன் திரட்டும் சாதனத்தை நிறுவுதல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, நாரா வின் மீன்பிடி தொழில்நுட்ப பிரிவு, மீன் திரட்டும் சாதனங்களை நிறுவுதல் மற்றும் கண்காணிப்பு செய்யும் நடவடிக்கைகளை இலங்கையின் கரையோரப்பகுதிகளில் 2024 இல் ஆரம்பித்துள்ளதோடு, இந்த நடவடிக்கை 2026 வரை தொடரப்படும். குறைந்துவரும் கடல்வாழ் அலங்கார மீன்களின் தொகுதியிருப்பை அதிகரிக்கவும், அந்த பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மீன் உற்பத்தி மற்றும் சுற்றுலாத்துறை சார் நடவடிக்கைகள் மூலம் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கப்பரத்தோட்டை கடல்பகுதியில் 72 தூண்களை கொண்ட இரண்டு கான்க்ரீட் கட்டமைப்புகள் இதுவரை நாரா வினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இன்னொரு தூண் தொகுதி, பொல்ஹேன பகுதியில் ஸ்தாபிக்கப்படுவதற்காக கட்டமைக்கப்பட்டுவருகின்றது. இந்த இரண்டு இஸ்தாபிப்பு நடவடிக்கைகளும், மீனவர்களுக்காக இரண்டு வெற்றீகரமான விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒருங்கமைத்த பின்னரே இடம்பெற்றன, மேலும் இந்த நடவடிக்கைகள் மீனவ சமூகத்தினரின் உதவியுடன் இடம்பெற்றன.

நீர்கொழும்பு மீன்பிடி பகுதியில் மேற்பரப்பு மிதவை ஒன்றை மீன் திரட்டும் சாதனமாக பயன்படுத்த திட்டமிட்டு மீன்பிடி திணைக்களத்துடன் இணைத்து பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதற்காக மீனவ சமூகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட மிதவை கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றது. இதற்கிடையில், திருகோணமலை கடற்பகுதியில் பாவனையில் இல்லாத வாகனங்களை நிறுவும் இடங்களுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் சுகாதாரத்தை கண்காணிப்பதற்கான இரண்டு மாதிரி சேகரிக்கும் நிகழ்வுகள் நீரின் அடித்தள அவதானிப்புடன் சேர்த்து இடம்பெற்றன. மேலும் கப்பரத்தோட்ட மற்றும் பொல்ஹேன இல் மீன் திரட்டும் சாதனங்கள் நிறுவுவதுடன் தொடர்புடைய இரண்டு மாதிரி சேகரிக்கும் நிகழ்வுகள் மற்றும் நீரின் அடித்தள கண்காணிப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மீன் திரட்டும் சாதனங்களை நிறுவுவதன் மூலம் அலங்கார மீன்கள் மட்டுமன்றி உண்ணக்கூடிய

மீன்களும் அதிகளவில் திரட்டப்படுகின்றன என இந்த கள அவதானிப்பின் மூலம் தெளிவாக உறுதி செய்யப்பட்டுள்ளது, இந்த செயற்திட்டத்தினால் மீனவ சமூகத்தினரும் திருப்தியடைந்துள்ளனர்












உரு 7.0: மீன் திரட்டும் சாதனம் நிறுவுதல் மற்றும் நீரின் அடித்தள அவதானிப்புகள்

1.5 மீன் தோல்களைப் பயன்படுத்தி புரதம் நிறைந்த உணவு நிரப்பியாக ஜெலட்டின் தாள் உற்பத்தி

மாடு மற்றும் பன்றி மூலங்களிலிருந்து பெறப்பட்ட மதிப்புமிக்க ஜெலட்டின், மாற்றாக மீனில் இருந்து பிரித்தெடுக்கப்படலாம். புள்ளி கொண்ட கிளாத்தி மீனின் (*Canthidermis maculatus)* தோலில் இருந்து ஜெலட்டின் பிரித்தெடுப்பு செய்வதற்காக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. மீன் தோலில் இருந்து ஜெலட்டின் பிரித்தெடுப்பு செய்து பகுப்பாய்வு செய்து வர்த்தக ரீதியாக விற்கப்படும் ஜெலட்டின் உடன் ஒப்பீடு செய்வதே முக்கிய குறிக்கோள் ஆகும். பகுப்பாய்வு முடிவுகளில் தெரியவருவது, புள்ளியுள்ள கிளாத்தி மீனில் இருந்து பெறப்பட்ட ஜெலட்டினில் புரத உள்ளடக்கம் 85.25±0.75, ஈரப்பதன் உள்ளடக்கம் 6.25±0.03, கொழுப்பு உள்ளடக்கம் 0.57±0.11 மற்றும் சாம்பல் உள்ளடக்கம் 2.72±0.13 இல் காணப்பட்டது. இதற்கு மாறாக, வர்த்தக ரீதியாக தயாரிக்கப்பட்ட ஜெலட்டின் இல், புரத உள்ளடக்கம் 86.30±1.17 ஈரப்பதன் உள்ளடக்கம் 10.30±0.01, கொழுப்பு உள்ளடக்கம் 0.24±0.01 மற்றும் சாம்பல் உள்ளடக்கம் 1.14±0.10 இல் காணப்பட்டது. கிளாத்தி மீனில் இருந்து பெறப்பட்ட ஜெலட்டினின் ஜெல் வலிமை குறைந்த அளவாக (52.67±8.39), வர்த்தக ரீதியாக பெறப்பட்ட ஜெலட்டினின் ஜெல் வலிமை (120.70±13.80) அதிகளவாகவும் காணப்பட்டது. வர்த்தக ரீதியாக தயாரித்த ஜெலட்டினை (17.53±1.08) விட SSG இன் பாகுத்தன்மை (15.51±1.02) குறைவாக காணப்பட்டது, மேலும் நீர் கொள்ளும் திறனும் வர்த்தக ரீதியாக தயாரித்த ஜெலட்டினை (457.4±1.05) விட SSG இல் (233.9±15.6) குறைவாக காணப்பட்டது. கொழுப்பு பிணைப்பு திறன், வர்த்தகரீதியாக தயாரிக்கப்பட்ட ஜெலட்டினை (258.8±3.92) விட SSG (376.5±43.0) இல் அதிகளவில் காணப்பட்டது. வர்த்தக

ரீதியான ஜெலட்டினை (23.33±4.71) விட SSG (66.67±0.00) இன் உருவாக்கும் திறன் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக காணப்பட்டது. முடிவுகளின் அடிப்படையில், கிளாத்தி மீன் தோலில் இருந்து பெறப்பட்ட ஜெலட்டின் ஒரு பயனுள்ள மாற்றீடாக பயன்படுத்த முடியும் என அறியப்பட்டுள்ளது.




உரு 8: கிளாத்தி மீன் தோலில் இருந்து ஜெலட்டின் பிரித்தெடுக்கும் செயன்முறை

1.0 R/V சமுத்திரிக்கா ஆய்வுக்கப்பலை பயன்படுத்தி கடல்சார் வளங்களை ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

2.1 R/V சமுத்திரிக்கா ஆய்வுக்கப்பலை பயன்படுத்தி மீன்வள சுயாதீன ஆய்வுகள் (ஒலியியல் மற்றும் இழுவை) மற்றும் வாழும் கடல் வளங்கள் பற்றிய கடல்சார் ஆய்வுகள் மேற்கொள்ளல்

இலங்கையின் மொத்த மீன்பிடியில் ஏறத்தாழ 60% க்கு கரையோர மீன்பிடி பங்களிப்பு செய்கின்றது. ஆழம்குறைவான கரையோர பகுதியில் சிறு கடல் மீன்களின் மிகை மீன்பிடி குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிறு கடல் மீன் பிடியை முகாமைத்துவம் செய்வதற்கு, மீன் தொகுதி இருப்புக்களின் மாற்றங்களை அறிந்து கொள்வது முக்கியமாகும். மீன்பிடி சுயாதீன தரவுகள் தொகுதிகளை மதிப்பீடு செய்ய பயன்படுத்திய போதும், உபகரணங்களை தெரிவு செய்தல் மற்றும் ஏனைய காரணிகளால் ஏற்படும் தடைகள் சுயாதீங்க கணக்கெடுப்பை பாதிக்கின்றன. சிறு கடல் மீன் பிடிக்கான சுயாதீனமான ஆய்வுகளின் நன்கு நிறுவப்பட்ட நேரத் தொடர் இலங்கையில் இல்லை. இந்த செயற்திட்டமானது, ஒலியியல் முறைகளை பயன்படுத்தி, மீன்பிடி ஆய்வுகளின் முக்கியதொரு இடைவெளியான நேரத்தொடர் தரவுகளை சேர்க்க முன்னெடுக்கப்படுகின்றது. இறால் மற்றும் அது சார் உயிர்பொருள் பிடிப்பு தொடர்பான நேர தொடர் தரவுகளை ஸ்தாபிப்பதற்காக கல்பிட்டியில் முன்றாவது தொடர்ச்சியான இழுவை முறை கணக்கெடுப்பு இடம்பெற்றது. முன்னைய வருடங்களோடு ஒப்பீடு செய்வதறகக தற்போதைய இறால் தொகுதி இருப்பு நிலவரத்தை அறியவும், இழுவை முறையை தடை செய்ததால் இறால் உயிரிப்பொருள்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை அறியவும் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. முடிவுகளில் இருந்து தெரியவருவது, 2008 இல் சேகரிக்கப்பட்ட அடிப்படை தரவுகளுடன் ஒப்பிடும் போது இறால் இருப்புகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அவதானிக்க முடிந்தது, மேலும் குறிப்பாக 2022 இல் இழுவை முறையை தடை செய்த பின்னர் அதிகளவான வீழ்ச்சி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

2024 இல் மொத்த இறால் உயிர்த்திணிவு 0.146 tons என கணிக்கப்பட்டது, இந்த பெறுமதி 2021 இல் கணிக்கப்பட்ட 1.66 tons மற்றும் 2023 இல் கணிக்கப்பட்ட 0.556 tons இலும் விட அதிகளவில் குறைந்துள்ளது. இது 2021 இலும் விட 11 மடங்கு குறைவாகவும் 2023 இலும் விட 4 மடங்கு குறைவாகவும் காணப்பட்டது. கணக்கெடுப்பின் போது 5 வகையான இறால்இனங்கள் இனங்காணப்பட்டான், மேலும் மொத்த இறால் அடர்த்தி 0.033 tons/nm$^2$ஆகும்.

மாறாக, இழுவை தடையைத் தொடர்ந்து காரல் மீன் உயிர்த்திணிவில் வியத்தகு அதிகரிப்பு காணப்பட்டது. வழங்கப்பட்ட உரையில் காரல் மீன்களின் குறிப்பிட்ட உயிர்த்திணிவு பெறுமதிகள் விளக்கப்படவில்லை எனினும், இந்த இனங்களின் அதிகரித்த வளர்ச்சி சுற்றுசூழல் அமைப்பின் மாற்றம் ஏற்படக்கூடிய தகைமையை பரிந்துரைக்கிறது. இழுவை நடவடிக்கைகள் இல்லாதது காரல் மீன் பெருகுவதற்கு சாதகமான சுற்றாடலை உருவாக்கியுள்ளது. இறால் மற்றும் காரல் மீன்களின் தொகைக்கு இடையே காணப்படும் மாறுபட்ட போக்குக்கான சரியான காரணம் தெளிவற்றது. இறால் உயிர்த்திணிவின் வீழ்ச்சி மற்றும் காரல் மீன் தொகை அதிகரிப்பு என்பவற்றுக்கு இழுவை தடை ஒரு பங்களிப்பு காரணியாக இருக்க முடியும், எனினும் நீரின் வெப்பநிலை, உவர்தன்மை, அல்லது உணவு கிடைப்பது போன்ற ஏனைய சுற்றாடல் காரணிகளும் தொகை மாற்றத்துக்கு பங்களிப்பு செய்யலாம். கற்பிட்டி பிராந்தியத்தில் கடல் சூழலை பாதிக்கும் காரணிகளின் சிக்கலான இடைவினைகளை அகற்ற மேலும் ஆராய்ச்சி அவசியம்.

